# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

விலை: 20

சுடர் 32 கதிர் 304 புரட்டாதி 10ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 26 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

பக்கங்கள்: 28


## தியாக தீபம் திலீபனின் இறுதிநாள் நினைவேந்தல் நல்லூரில் இன்று

» 25

## சமையல் எரிவாயுவின் விலை ரூ.110 எகிறியது

கொழும்பு, செப். 26

12.5 கிலோ கிராம் எடைகொண்ட சமையல் எரிவாயு கொள்கலனின் விலை (நேற்று) நள்ளிரவு முதல் 110 ரூபாவால் » 25



## திருமலைக் கடற்படைத் தளத்துக்குள் மற்றொரு இரகசியத் தடுப்பு முகாம்

### சிஐடியின் விசாரணையில் சிக்கியது

விரிவு பக். 10

# இனத்தையும் நாட்டையும் எதற்காகவும் விட்டுக்கொடாடார் ராஜபக்ச

### மாவையிடம் அவரே திட்டவட்டம்



கொழும்பு, செப்ரெம்பர் 26

“இடைக்கால அறிக்கையில் பௌத்த மதம் தொடர்பான விதந்துரையை வாசித்தேன். அதற்கு மேல் அறிக்கையை வாசிக்க என் மனம் இடம் கொடுக்கவில்லை. என்ன காரணத்துக்காகவும் நாட்டையும் இனத்தையும் நான் விட்டுக்கொடுக்கமாட் டேன்”

இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசாவிடம் தெரிவித்துள்ளார். » 25

## இளம் குடும்பத் தலைவர் மீது துரத்தித் துரத்தி வாள்வெட்டு

### கெருடாவிலில் நேற்றிரவு பயங்கரம்

யாழ்ப்பாணம், செப். 26

தென்மராட்சி, கெருடாவிலில் நேற்றிரவு இளம் குடும்பத் தலைவர் மீது துரத்தித் துரத்தி கொட்டனால் தாக்கியதுடன் வாள்வெட்டும் நடத்தப்பட்டது. படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று » 25

## 17 கிலோ கஞ்சாவுடன் 27வயது இளைஞர் கைது

பருத்தித்துறை, செப்.26

பருத்தித்துறை, வியாபாரிமூலையில் 17 கிலோ கஞ்சாவுடன் நேற்று ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் 27 வயதுடையவர் » 25

## வடக்கு முதல்வரின் இணக்கத்துடனேயே புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும்

### அரசு நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

“வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனின் இணக்கத்துடனேயே புதிய அரசமைப்பை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்போம். அதேபோன்று, புதிய அரசமைப்புக்கு மக்களின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்காக பொது வாக்கெடுப்பு நடத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் நாம் இணங்க » 25

**கட்சிகளை இணங்கவைக்க முடியவில்லை**

## புதிய அரசமைப்பு உண்மையில் வருமா?

### திஸ்ஸ விதாரணவுக்கு வந்த ஐயம்

கொழும்பு, செப். 26

வழிநடத்தல் குழுவில் இடம்பெற்றுள்ளவர்களது இணக்கப்பாட்டுடன் இடைக்கால அறிக்கை தயாரிக்கப்பட்டதாகத் தலைமை அமைச்சர் ரணில் தெரிவித்துள்ளார். ஆனாலும் அவர்கள் அனைவரையும் ஒரு நிலைப்பாட்டுக்குக் கொண்டுவர முடியாமல் போயுள்ளது. அரசின் நடவடிக்கைகளைப் பார்க்கும் » 25

**தள்ளாடி முகாமுக்கு அருகில்**

## எரிந்த நிலையில் ஆணின் சடலம்

மன்னார், செப். 26

எரிந்த நிலையில் ஆண் ஒருவருடைய சடலத்தை நேற்று மீட்டதாக மன்னார்ப் பொலிஸார் தெரிவித்தனர்.

“யாழ்ப்பாணம் - மன்னார் வீதியில் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து சுமார் நூறு மீற்றர் தூரத்தில் காட்டுப் பகுதியில் அடையாளம் தெரியாத சடலம் காணப்படுவதாக தகவல் கிடைத்தது. சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஆணினு » 25

## இறக்குமதியாகும் வெங்காயத்துக்கு 100 வீதம் தீர்வை

கொழும்பு, செப். 26

அரச தலைவர் ஆலோசனையின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்கான வரியை நூற்றுக்கு நூறு வீதம் அதிகரிப்பதற்கு நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்துக்கு நூற்றுக்கு நூறு வீதம் வரியை அறவிட நடவடிக்கை » 25

## அதியுச்ச அதிகாரப் பகிர்வு யதார்த்தமாகவேண்டும்

### யாழ்ப்பாண ஆயர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், செப். 26

“அதிகாரங்களை உச்சபட்சம் பகிர்வதற்கு கூட்டு அரசு இணங்கியுள்ளதாக தலைமை அமைச்சர் ரணில் கூறியுள்ளார். அது வெறும் வாய்மொழியில் அல்லாமல் நடைமுறையில் வரவேண்டும்”

இவ்வாறு யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வியாழக்கிழமை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது, “அதியுச்ச அதிகாரப் பகிர்வை வழங்க கூட்டு அரசு இணங்கியுள்ளதாகக் குறிப்பிட்டி » 25

## கிடைக்காத ஒன்றையே கேட்கிறார் விக்னேஸ்

### மன்னார் ஆயர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 26

“புதிய அரசமைப்பில் அதி உச்ச அதிகாரப் பகிர்வுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டமை எமக்குக் கிடைத்த இறைவனின் கொடை. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கிடைக்காத ஒன்றைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்”

இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பில் அதி » 25

## அதிகாரப் பகிர்வைக் கோரியே தமிழ்த் தலைமைகள் அழுத்தம்

### அவர்கள் பிரிவினையைத் தூண்டவில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

“பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுத்து ஏக்கியராச்சிய ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தே தமிழ்த் தலைமைகள் அழுத்தம் கொடுக்கின்றனர். அவர்கள் பிரிவினையை ஒருபோதும் தூண்டவில்லை. தமிழ் தலைமைகளின் பெருந்தன்மையை சிங்களத் தலைமைகள் உணர வேண்டும்”

இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தன தெரிவித்தார்.

தெல்கொடை பிரதேசத்தில் இடம்பெற்ற பௌத்த மத நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு இந்த நாட்டைப் பிளவு படுத்துவதாகவும், » 25

## ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட்டுக்கு நாமல் ராஜபக்ச நன்றி பாராட்டு

கொழும்பு, செப். 26

ஈ.பி.ஆர்.எல்.எவ்வைச் சேர்ந்த சிவசக்தி ஆனந்தன் மற்றும் புளொட் அமைப்பின் வியாழேந்திரன் இருவரும், மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்காததற்காக அவர்கள் இருவரையும் பாராட்டுவதாக, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் ராஜபக்ச கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் நாமல் ராஜபக்ச தனது கீச்சகத்தில் தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்றத்துக்கு வந்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் » 25

## அரசியல் கைதிகள் மூவர் தொடர் உணவு ஒறுப்பில்

யாழ்ப்பாணம், செப். 26

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகள் இடமாற்றப்பட்டு அநுராதபுரம் மேல் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அந்த இடமாற்றத்தை எதிர்த்து அரசியல் கைதிகள் மூவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத் » 25



பன்னாட்டு செவிப்புலனற்றோர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்று ஊர்வலம் நடத்தப்பட்டது. நல்லூர் ஆலய முன்றிலில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் முற்றவெளியைச் சென்றடைந்தது. அனைத்து மாவட்டங்களில் இருந்தும் வந்த செவிப்பலனற்றோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். சமூக வலுவூட்டல் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவும் ஊர்வலத்தில் கலந்து கொண்டார். (ற-10,37)

# பதவியை துறக்கவேண்டும் மகிந்த!

## கம்மன்பில கோரிக்கை



கொழும்பு, செப்.26
தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடனேயே அரசு உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கின்றது. 2018ஆம் ஆண்டு தேர்தலை நடத்தும்வரை காத்திருக்காது தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உடனடியாகப் பதவி விலகவேண்டும்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் மகிந்த ராஜபக்ச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில.
கொழும்பில் பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:
2015 ஆம் ஆண்டு அரச தலைவர் தொகுதி நிர்ணயம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்ட பின்னர் தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழுவுக்குத் தேவையான சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் எல்லை நிர்ணய மேன்முறையீட்டுக் குழுவைக் காரணம் காட்டி தேர்தல் ஆணைக்குழு தேர்தலை ஒத்திவைத்தது.
எல்லை நிர்ணய மேன்முறையீடு இருக்கும் போது தேர்தலை நடத்த முடியாது என்று சட்டப் புத்தகத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.
அலரி மாளிகையில் எதிர்வரும் 27 ஆம் திகதி ஆயிரம் பிக்குமாருக்கு சமஷ்டி தானம் வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தானம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு பொலிஸார் ஊடாகப் பிக்குகளுக்கு அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பிக்குகள் அலரி மாளிகைக்கு வர வாகன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட உள்ளன. அந்த வாகனங்களில் பொலிஸாரும் பயணிக்க உள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை சமஷ்டி அரசமைப்புச் சட்டம் ஒன்றை அரசமைப்புச் சட்டவாக்க சபையில் சமர்ப்பித்தார். பௌத்த பிக்குகள் மத்தியில் இருந்தே இதற்குப் பெரும் எதிர்ப்புகள் கிளம்பும் என்பதைத் தலைமை அமைச்சர் அறிவார். நோர்வேயின் சமாதான முயற்சி என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட பிரிவினைவாதத் திட்டம் தோல்வியடைய பிக்குகளே முக்கிய காரணமாக அமைந்தனர். இதை நன்கு அறிந்த தலைமை அமைச்சர் சமஷ்டி அரசமைப்புச் சட்டத்துக்கு பிக்குகளின் ஆதரவை வென்றெடுக்கும் நோக்கில் அலரி மாளிகையில் பிக்குமாருக்கு தானத்தை ஒழுங்கு செய்துள்ளார். என்றார். (ற)


## முதியோர் விழிப்புணர்வு செயற்றிட்டம்

வவுனியா, செப்.26
முதியோர் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம் நேற்று வ்வுனியா புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.
பாடசாலை அதிபர் எஸ்.சுபாஸ்கரன் தலைமையில் மாவட்ட சமூகசேவை அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர். நவராத்திரி பூசை வழிபாடுகளிலும் ஈடுபட்டனர்.
மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஶ்ரீநிவாசன் நிகழ்வில் உரையாற்றினார்.
"மாணவர்கள் பெரியோர், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோர் சொல்வதை செவிமடுக்க வேண்டும். அவர்கள் சொல்வதை உற்றுக்கேட்க வேண்டும். இதன் மூலமே பல பிரச்சினைகளில் இருந்து அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும். இன்றைய இளைஞர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுத்து அவற்றால் பல துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள். இதற்குக் காரணம் மூத்தோர் சொல் கேட்காமையே ஆகும்" என்று அவர் குறிப்பிட்டார்.
பன்னாட்டு முதியோர் தினத்தை முன்னிட்டு பாடசாலை ரீதியாக தொடர்விழிப்புணர்வு நடவடிக்கைகள் மாவட்ட சமூகசேவை அலுவலகத்தால் வவுனியாவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)



## பிணை வழங்கப்பட்ட லலித் மீண்டும் கைது

கொழும்பு, செப். 26
2015 ஆம் ஆண்டு கஹவத்த பகுதியில் இடம்பெற்ற கொலை தொடர்பில் முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்க கைது செய்யப்பட்டார்.
புங்குடுதீவு மாணவி வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கில் பிரதான சந்தேக நபருக்கு பாதுகாப்பு வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர், கடும் நிபந்தனைகளுடன் கடந்த 13 ஆம் திகதி விடுவிக்கப்பட்டிருந்தார்.



முன்னாள் பிரதி அமைச்சர் பிறேமலால் ஜயசேகர உள்ளிட்ட சிலரால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் விசாரணைகளின் போது தகவல்களை மறைத்தமை குறித்து வாக்குமூலம் பதிவு செய்வதற்காக நேற்று அழைக்கப்பட்டார். அதைத்தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.
பொலிஸ் தலைமையகத்தில் நிறுவப்பட்டுள்ள சிறப்பு விசாரணைப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவை பெல்மதுல்லை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-10)

## யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கலாசார ஊர்வலம்

யாழ்ப்பாணம், செப். 26
பன்னாட்டு சுற்றுலா தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் கலாசார ஊர்வலம் நேற்று நடத்தப்பட்டது. வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட ஊர்வலத்தை வடக்கு மாகாண சுற்றுலாத்துறைத் திணைக்களம் ஏற்பாடு செய்தது.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் யாழ்ப்பா



ணம் தொடருந்து நிலையத்துக்கு முன்பாக ஊர்வலத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்தார். தமிழர் பாரம்பரியங்களை அடையாளப்படுத்தும் விதமாக கலை கலாசார நிகழ்வுகள் ஊர்வலத்தில் இடம் பெற்றன. அழிவடையும் நிலையிலுள்ள பாரம்பரிய அடையாளங்களான மாட்டு வண்டில் சவாரி, பொய்க்கால் குதிரைகள், மயிலாட்டம், ஒயிலாட்டம் என்பனவும் இடம்பெற்றன.
தனியார் சுற்றுலா நிறுவனங்களையும் இணைத்து நடத்தப்பட்ட ஊர்வலம் யாழ்ப்பாணம் மருத்துவமனை வீதியூடாகச் சென்று கே.கே.எஸ் வீதியூடாக பண்ணை வரை சென்று நிறைவடைந்தது.
நிறைவில் வடக்கு மாகாணத்திலுள்ள சுற்றுலாத்துறைகளை அடையாளப்படுத்தும் பொருட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான கையேடொன்றும் முதலமைச்சரால் வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் முதலமைச்சரின் செயலாளர் ரூபினி வரதலிங்கம் சுற்றுலாத்துறை திணைக்கள அதிகாரிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ற-10, 106)



## வடமராட்சி கிழக்கு துப்பாக்கிச் சூடு – பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு

வடமராட்சி, செப்.26
வடமராட்சி கிழக்கில் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் உயிரிழந்தமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட பொலிஸார் இருவரினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.
இந்த வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் பின்னர் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதிவரை சந்தே நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
கடந்த ஜூலை மாதம் 9 ஆம் திகதி 6ஆம் கட்டை மணற்காட்டுப் பகுதியில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். 24 வயதான யோகராசா தினேஸ் என்ற இளைஞரே உயிரிழந்தார். மணலை கன்ரர் ரக வாகனத்தில், ஏற்றிச் சென்றபோது பொலிஸாரின் சமிக்ஞையை மீறிச் சென்றதால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற-10, 26, ரி2)

## கிணற்றுக்குள் இருந்து ரவைப் பெட்டிகள் மீட்பு



யாழ்ப்பாணம், செப்.26
காங்கேசன்துறை தையிட்டியில் தனியார் காணியொன்றின் கிணற்றில் இருந்து துப்பாக்கி ரவைப் பெட்டிகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.
இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தப் பகுதி அண்மையில் மக்கள் பாவனைக்காக விடுவிக்கப்பட்டது. தற்போது மீள்குடியமர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் நிலையில் தனியார் காணி ஒன்றின் உரிமையாளர் கிணற்றைத் துப்புரவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். அப்போது துப்பாக்கி ரவைப் பெட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.
சம்பவ இடத்துக்கு வந்த சிறப்பு அதிரடிப் படையினர் சோதனை நடத்தியபோது 62 துப்பாக்கி ரவைப் பெட்டிகள் மீட்கப்பட்டன. ஒரு பெட்டிக்குள் 85 ரவைகள் காணப்பட்டன என்றும், ஒரு பெட்டி சீல் வைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.
கைப்பற்றப்பட்ட ரவைப் பெட்டிகளை நீதிமன்றில் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று காங்கேசன்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ற-10,26,ரி4)



# தியாக தீபத்தின் நினைவு நாளில் உணவு ஒறுப்பு

வவுனியா, செப். 26
வவுனியாவில் சுழற்சி முறையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தியாகதீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு நேற்று சிறப்பு வழிபாடுகளை நடத்தினர். இந்த வழிபாடுகள் வவுனியா கந்தசுவாமி கோயிலில் நடைபெற்றன.
1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உணவு ஒறுப்பு போராட்டத்தை ஆரம்பித்த யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரான திலீபன் (இராசையா பார்த்திபன்) 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 26ஆம் திகதி காலை 10.48 மணிக்கு வீரச் சாவடைந்தார்.



அகிம்சை வழியில் போராடி தனது உயிரை மாய்த்துக்கொண்ட திலீபனின் நினைவாக தற்போது தமது உறவுகளுக்காக அகிம்சை வழியில் போராடும் காணாமால் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று அடையாள உணவு ஒறுப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டம் இன்றும் தொடரவுள்ளது என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவித்தனர்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் மேற்கொள்ளப்படும் போராட்டம் நேற்றுடன் 214 ஆவது நாளாகத் தொடர்ந்தது. வெயில் , மழையைப் பொருட்படுத்தாது அவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ற-10)

## கர்ப்பிணி கொலை:
## குருதி மாதிரி அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், செப். 26
யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையில் கர்ப்பிணித்தாய் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் குருதி மாதிரிகளின் அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் ஆர். சபேசன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
இந்த வழக்கை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு மாற்றுமாறு பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணியால் கடந்த தவணை கோரிக்கை விடப்பட்டது. பல வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவுள்ள நிலையில் பொலிஸார் இந்த வழக்கை இழுத்தடிக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்த நிலையில் குருதி மாதிரிகளின் ஆய்வு அறிக்கை மன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.
கொலைச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களையும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
யாழ்ப்பாணம் புங்குடுதீவு பகுதியில் கடந்த ஜனவரி மாதம் 25 ஆம் திகதி கர்ப்பிணித் தாயான மேரி றம்சிக்கா படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். (ற10, ரி4)

உடனுக்குடன்
செய்திகளை
அறிந்து கொள்ள
இணைந்திருங்கள்...
NEWUTHAYAN.COM

## ஜயரத்னவுக்குப் பிணை

கொழும்பு, செப். 26
முன்னாள் சிவில் வானூர்திச் சேவை அமைச்சரான பிரியங்கர ஜயரத்ன மற்றும் அவரது பிரத்தியேக செயலாளர் ஆகியோர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.



கடந்த ஆட்சிக் காலத்தில் சிவில் வானூர்தி சேவை அமைச்சராக செயற்பட்ட பிரியங்கர ஜயரத்ன, மற்றும் அவரது பிரத்தியேக செயலாளர் ஆகியோர் இல்லாத பதவியொன்றுக்கு வேதனம் வழங்கினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டிருந்தது.
இவர்களின் வழக்கு கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போதே இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.
வழக்கு விசாரணையில் குற்றப்பத்திரிகையும் வாசிக்கப்பட்டது.
அடுத்த வழக்கு விசாரணை எதிர்வரும் டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி ஒத்திவ்வக்கப்பட்டுள்ளது. (ற-10, ரி4)

## சுகாதார பரிசோதகர்கள் சுகவீன விடுப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 26
வடக்கு மாகாணத்தில் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சேவையிலிருந்து இடை விலக்கப்பட்டமையைக் கண்டித்து நேற்று நாடு தழுவிய சுகவீன விடுமுறைப் போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டம் இன்றும் தொடரும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பணிபுரிந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள் 5 பேர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் இடமாற்றம் செய்யப்பட்டனர். அவர்களது உரிமைக்காக இந்தப் போராட்டம் நடத்தப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.
பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சேவையிலிருந்து இடைவிலக்கப்பட்டமை தொடர்பில் பல தடவைகள் கலந்துரையாடல்களை நடத்துவதற்கு முயற்சிக்கப்பட்டது. வடக்கு மாகாண சுகாதார அமைச்சரையும் மீறி அமைச்சின் செயலாளர் பழிவாங்கலை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றார். நேற்றும், இன்றும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளிலிருந்தும் விலகுவதற்கு தீர்மானி க்கப்பட்டுள்ளது என்று பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர். (ற-10,ரி2)

## சட்டமா அதிபர் உட்பட 3 பேருக்கு அழைப்பு

கொழும்பு, செப்.26
சட்டமா அதிபர், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி, மருதானை காவல்நிலைய பொறுப்பதிகாரி ஆகிய மூவரும் எதிர்வரும் 2 ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.
தற்போது விளக்கமறியலில் உள்ள மருத்துவ பீட ஒருங்கிணைப்பாளர் ரயான் ஜயலத், தனக்குப் பிணை கோரி தாக்கல் செய்துள்ள விண்ணப்பம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆர். ஹெய்ன்துடுவ முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டது. இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
சுகாதார அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைந்து அதன் சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் ரயன் ஜயலத் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (10, ரி4)

உங்கள்
பிரதேசங்களில்
நடக்கும்
நிகழ்வுகளை
உலகறியச் செய்ய
எமக்கு அனுப்புங்கள்



உதயன் DIGITAL newuthayan.com
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

## தசநாயக்கவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு. செப்.26
கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து 2008 ஆம் ஆண்டு 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டுக் காணாமல் போகச்செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விள க்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி. தஸநாயக்க நேற்று முதன் முறையாக மன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.
கடந்த ஜீலை 12 ஆம் திகதி தசநாயக்க கைது செய்யப்பட்டார். அன்று முதல் சுகவீனம் எனக் கூறி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். வழக்குத் தவணைகளுக்கு மன்றில் முற்படுத்தப்படுவதில்லை.
பாதிக்கப்பட்ட தரப்பின் சட்டத்தரணி அச்சலா செனவிரத்னவின் கோரிக்கைக்கு அமைய தஸநாயக்க தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரி ஒருவரின் அறிக்கையை கோட்டை நீதிவான் லங்க அஜயரத்ன கோரியிருந்தார். அவ்வறிக்கை ஊடாக தஸநாயக்கவை மன்றில் முற்படுத்த முடியாத அளவுக்கு எந்த நோய் நிலைமையும் இல்லை என கடந்த தவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துமாறு உத்தரவிட்டப்பட்டது. நோயாளர் காவு வண்டியில் வெலிசறை கடற்படை வைத்தியசாலையில் இருந்து சிறை அதிகாரிகளின் பாதுகாப்புடன் அழைத்து வரப்பட்ட தஸநாயக்ச சக்கர நாற்காலியில் அழைத்து வரப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
(ற-31)

## மஸ்தான் எம்.பியை சந்தித்தனர் சுகாதாரத் தொண்டர்கள்

வவுனியா. செப். 26
வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வன்னி மாவட்ட இணைப்பாளருமான கே. காதர் மஸ்தானை நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். இந்தச் சந்திப்பு காதர் மஸ்தானின் மக்கள் சந்திப்பு அலுவலகத்தில் நடந்துள்ளது.
வவுனியாவில் கடந்த 118நாள்களாக தொடர் போராட்டம் மேற்கொண்டு வந்த வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக, வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களில் ஐந்து பேரடங்கிய குழுவினர் சென்று சந்தித்தனர். சந்திப்பில் தமது நிரந்தர நியமனம் தொடர்பாகவும், தம்மால் 118நாள்கள் தொடர் போராட்டம் மேற்கொண்டு வந்த விடயங்கள் தொடர்பாக பேசப்பட்டது. இந்த விடயத்தை இன்று இடம்பெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதுடன் நிதி அமைச்சின் செயலாளரின் கவனத்துக்கும் கொண்டுசென்று துரித கதியில் தீர்வு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாக்குறுதியளித்தார் என்று கூறப்பட்டது. (ற-10)

# கணக்காய்வு சட்ட வரைவு உருவாக்கத்துக்கு அரசே தடை

### சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு.செப்.26
அரசுக்கு எதிராக நிதி மோசடி மற்றும் இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்ப ட்டு ள்ளதால் தேசிய கணக்காய்வுச் சட்ட வரைவு நிறைவேற்றப்படாது காலங்கடத்தப்படுகின்றது.
இவ்வாறு ஜே.வி.பியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ் சாட்டினார்.
மக்கள் விடுதலை முன்னணியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று முற்பகல் அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
முன்னைய அரசைப்போன்று தற்போதைய அரசு மீதும் இலஞ்ச ஊழல் , நிதி மோசடி குற்றச்சாட்டுக்கள் அதிகளவில் சுமத்தப்பட்டுள்ளன. பொதுமக்களின் பணத்தைத் தவறான வகையில் பயன்படுத்துதல், ஊழல் மோசடி என்பவையே எமது பொருளாதாரத்தின் பிரதான செயன்முறைகளாக உள்ளன. அதைக் கட்டுப்படுத்த சட்ட ஒழுங்குகளும் இறுக்கமான சட்ட கட்டமைப்பும் அவசியம்.
கணக்காய்வாய்வுச் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்ட மறுகணமே இவை நிறு த்தப்படப் போவதில்லை. என்றாலும் இலஞ்ச ஊழல் நிதிமோசடி, மக்கள் பணம் சூறையாடப்படுவதை தடுக்க குறைந்தளவிலான சட்டங்களேனும் இருக்கவேண்டும்.
கணக்காய்வுச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு அரச தலைவர், தலைமை அமைச்சர், அமைச்சர்கள் என அனைவரும் இடையூறு ஏற்படுத்துகின்றனர். கணக்காய்வாளர் திணைக்களம் 200 வருடங்களைக் கடந்துள்ளது. ஆனால் எமது நாட்டுக்கு கணக்காய்வுச் சட்ட வரைவு இல்லை.
2003ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுச்சட்ட வரைவை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 14 வருடங்கள் கடந்தும் இன்னமும் சட்ட வரைவு நிறைவேற்றப்படவில்லை-என்றார். (ற)

## கூரை பிரித்து இறங்கி மது அருந்தியவர் மாட்டினார்

### கடைக்குள்ளேயே உறங்கியதால்

திருகோணமலை, செப். 26
ஹொரவபொத்தானை நகரில் உள்ள மதுபானசாலையொன்றின் கூரையை பிரித்து உட்சென்று மதுபானம் அருந்தியவர் வெளிச்செல்ல முடியாமல் உள்ளேயே உறங்கினார். அவர் காலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று நடந்தது. கைது செய்யப்பட்டவர் ஹொரவபொத்தானை சமகிகம பகுதியைச்சேர்ந்த 40 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.
ஹொரவபொத்தானை நகரத்திலுள்ள மதுபானக் கடை ஒன்றில் அதன் உரிமையாளர் கடையை வழமைபோல் நேற்றுத் திறந்துள்ளார். அங்கு ஒருவர் உறங்கிக் கொண்டிருந்ததை அவதானித்த அவர் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் கடையில் உறங்கிக் கொண்டிருந்தவரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினர். கூரையை உடைத்து கீழே இறங்கி 2ஆயிரத்து 300ரூபா பணத்தையும் எடுத்துக் கொண்ட அந்த நபர், அங்கிருந்த மதுபானங்களையும் குடித்துள்ளார். பின்னர் வெளியே செல்ல முடியாத நிலையில் கடைக்குள்ளேயே உறங்கியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.
மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில முற்படுத்தப்படுவார் என பொலிஸார் தெரிவித்தனர். (ற10,45)

## முள்ளிவாய்க்காலில் வெடிபொருள்கள்

முல்லைத்தீவு, செப். 26
முல்லைத்தீவு முள்ளி வாய்க்கால் மேற்கில் தனியாரின் காணிக்குள் வெடிபொருள்கள் புதைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. அவை இன்று செயலிழக்கவைக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
"தனியார் ஒருவரின் காணி எல்லையில் கதியால் நட்டு வேலியைச் சீரமைக்கும் பணிகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன. அதன்போதே அந்தப் பகுதியில் புதைத்திருந்த வெடிபொருள்கள் வெளிக்கிளம்பின.
காணி உரிமையாளரான சுப்பிரமணியம் வாகீசன் அது தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸாருக்குக் தகவல் வழங்கினார்.
சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்வதற்காக முல்லைத்தீவு நீதிவான் மன்றுக்கு அறிக்கை முன்வைக்கப்பட்டது. அவற்றை மீட்க மன்று அனுமதி வழங்கியது.
சிறப்பு அதிரடிப்படையினர் இன்று வெடிகுண்டுகளை மீட்டு அழிக்கும் நட்வடிக்கையில் ஈடுபடுவர். அந்த இடத்தில் இன்றுவரை பொலிஸார் காவலில் அமர்த்தப்பட்டுள்ளனர்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4-ரி3)

## அட்டாளைச்சேனை மக்களுக்கு பேருந்து சேவை

அக்கரைப்பற்றிலிருந்து அட்டாளைச்சேனை, சம்பு நகர் ஊடாக ஆலம்குளத்திற்கான பேருந்து சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டது. காலை 6.30 மற்றும் மதியம் 2 மணிக்கும் இடம்பெறவுள்ளது. மக்கள் சுமார் 5 கிலோ மீற்றர் தூரம் அட்டாளைச்சேனை அல்லது அக்கரைப்பற்று போன்ற பிரதேசங்க ளுக்கு செல்ல நடந்து சென்று தங்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்தனர். இவர்களின் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்ற நோக்கிலேயே இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10, 48)

## புதிய அரசமைப்பு; அமைச்சரவை இன்று ஆராயுமா?

கொழும்பு, செப். 26
அரச தலைவர் மைத்திரிபால நேற்று நாடு திரும்பியுள்ள நிலையில் அமைச்சரவைக் கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது.
இதில் புதிய அரசமைப்பு தொடர்பிலும் பேசப்பட லாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, ஐ.நா. பொதுச் சபையின் 72ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்க அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். பயணத்தை முடித்துக் கொண்டு அவர் நேற்று நாடு திரும்பியிருந்தார்.
அரச தலைவர் இல்லாமையால் கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவில்லை.
இந்த நிலையில் இன்றைய தினம் அரச தலைவர் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவுள்ளது. இதன் போது அடுத்த மாதம் எத்தனையாம் திகதி, இடைக்கால அறிக்கை மற்றும் உபகுழுக்களின் அறிக்கை மீது விவாதம் நடத்துவது என்பது தொடர்பில் ஆராயப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
(வ-5)



பசறை பகுதியின் ஆக்கரத்தன்ன தோட்டத் தொழிலாளர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுப்பட்டனர். தொழிலாளர்கள் இருவரை கைது செய்தமையை ஆட்சேபித்தும் , தோட்டக் காணியை வெளியாருக்கு வழங்குவதை எதிர்த்துமே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்று அவர்கள் தெரிவித்தனர். (ற-10,41)

# கிரான்புல் அணைக்கட்டுப் பணியை சீனாவிடம் ஒப்படைப்பதே சிறந்தது

### கிழக்கு விவசாய அமைச்சர் கூறுகின்றார்

மட்டக்களப்பு, செப். 26
கிரான்புல்சேனை அணைக்கட்டு வேலை சீன கட்டமைப்பு நிறுவனாங்களிடம் ஒப்படைக்கப் படுமாயின் இழுத்தடிப்புக்கள் மோசடிகள் இன்றி உயர்தரத்தில் நிறைவு செய்யக் கூடியதாக இருக்கும் என கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கே. துரைராசசிங்கம் தெரிவித்தார்.
ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மட்டக்களப்பு மாவட்டத்தின் விவசாயத்தில் பெரிய புரட்சியை ஏற்படுத்தக் கூடிய கிரான்புல்சேனை அணைக்கட்டு நிர்மாணிப்பது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கட்டுமானப் பணிகளுக்காக வெளிப்படைத்தன்மையில்லாத ஒப்பந்தங்கள் எதனையும் செய்யாது பகிரங்கமான கேள்விப் பத்திரங்களைக் கோருவதன் மூலம் தகுதியான கட்டட நிர்மாணங்களைச் செய்வோருக்கு அணைக்கட்டு கட்டமைப்புப் பணியை ஒப்படைக்க முடியும். தற்போதைய அவதானிப்பில் மற்றவர்களை விட சீன நிறுவனங்கள் துரித கதியிலும் அதே வேளை சிறப்பாகவும் தரமாகவும் கட்டுமானப் பணிகள்ள செவ்வனே செய்து முடிப்பார்கள் என்ற அபிப்பிராயம் நிலவுகிறது.
அணைக்கட்டு அமைக்கப்பட்டவுடன் அதனை அண்டிய பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் ஆண்டுக்கு மும்முறை நெற்செய்கை மேற்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சுமார் 690 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள அணைக்கட்டின் ஆரம்ப வேலைகளுக்காக தற்போது 40 இலட்ச ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது- என்றார். (ற-10,46)

# டெங்கு நோய்த் தொற்றின் அச்சுறுத்தல் வலி. மேற்கு, தென்மேற்கில் அதிகரிப்பு

## 4 வாரங்களில் 70 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப்.26
டெங்கு நோய்த் தொற்றின் தாக்கம் வலிகாம் மேற்கு மற்றும் தென்மேற்குப் பிரதேசங்களில் அதிகரித்துள்ளது.
அந்தப் பிரதேசங்களில் கடந்த 25 நாள்களில் 70 பேர் வரை டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.
அந்தப் பிரதேசங்களில் சிறப்பு டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.
டெங்கு நுளம்பின் தாக்கம் அதிகமாகவுள்ள இடங்களில் புகையூட்டல் நடவடிக்கையிலும், குடியிருப்புகளுக்குச் சென்று சோதனை நடவடிக்கையிலும் சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர்.
டெங்கு நுளம்பின் குடம்பிகள் பெருகக் கூடிய வகையில் சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டில் 30 குடியிருப்பாளர் களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
வலிகாம் தென் மேற்குப் பிரதேசத்தில் 40 பேரும் வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் 30 பேரும் டெங்கு நோய்த் தொற்றால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.
இதேவேளை, டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சூழலை வைத்திருந்த குற்றத்துக்கு 2 குடியிருப்பாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து மல்லாகம் நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.
(ய-115,37)




## முள்ளிவாய்க்காலில் 5,000 கிலோ மீன்கள்

### தென்பகுதி மீனவர்கள் நேற்று சட்டவிரோதமாக அள்ளினர்

முல்லைத்தீவு, செப். 26
முள்ளிவாய்க்கால் கிழக்கு கப்பலடிப் பகுதியில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்ட தென்பகுதி மீனவர்களுக்கு சுமார் 5 ஆயிரம் கிலோ கிராம் பாரை மீன்கள் அகப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
சட்டவிரோதமாக உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தியே அவை பிடிக்கப்பட்டன. அந்த நடவடிக்கையை உரிய அதிகாரிகள் தடுக்கவில்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.
நீர்கொழும்பைச் சேர்ந்த மீனவர்கள் முள்ளிவாய்க்காலில் 4 வாடிகளை அமைத்துத் தங்கிநின்று தொழில் செய்து வருகின்றார்கள்.
அவர்கள் நேற்று மாலை முன்னெடுத்த கரைவலைத் தொழிலில் சுமார் 5 ஆயிரம் கிலோ கிராம் எடையுள்ளவை என மதிப்பிடப்படும் மீன்கள் அகப்பட்டன. அவற்றை 5 க்கும் மேற்பட்ட குளிரூட்டி வாகனங்களில் அவர்கள் கொழும்புக்குக் கொண்டு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4,ரி3)

## அளவெட்டி வடிகால்கள் சீரமைப்பு

அளவெட்டி, செப்.26
அளவெட்டி முதன்மைச் சாலையோரம் காணப்பட்ட நீர் வழிந்தோடும் கால்வாய்கள் தற்போது துப்புரவாக்கப்பட்டு வருகின்றன. வடிகால்களை ஆழமாக்கும் வேலைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.
இவை பலகாலமாகத் துப்புரவு செய்யாமல் காணப்பட்டமையால் கழிவுப் பொருள்களும், மண் திட்டுகளும் நிரம்பிக் காணப்பட்டன.
இதுதொடர்பில் மக்கள் பலமுறை சம்பந்தப்பட்டவர்களுக்குச் சுட்டிக்காட்டி வந்தனர். தற்போது இவை சீரமைக்கப்பட்டு வருகின்றன.
இந்தக் கால்வாய்கள், கிளைவாய்க்கால்கள் மூலம் மழை வெள்ளம் வழிந்தோடி முதன்மை கால்வாய் மூலம் அளவெட்டி பினாக்கை குளத்தைச் சென்றடைகிறது. அங்கிருந்து வழுக்கை ஆறு ஊடாக சண்டிலிப்பாய், நவாலி ஊடாகச் சென்று கல்லுண்டாய்க் கடலில் கலக்கிறது.
கடந்த காலங்களில் நீர் வழிந்தோடுவதில் தாமதம் ஏற்பட்டது. வயல்களில், வீடுகளில் நீர் தேங்கி நிற்கும். தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தத் துப்புரவுப் பணி மற்றும் ஆழமாக்கல் மூலம் நீர் தங்கு தடையின்றி குளத்துக்குச் சென்றடையும் என அளவெட்டி விவசாயச் சம்மேளனத்தினர் தெரிவித்தனர்.
(ய-36)

## அளவெட்டி தெற்கு கிராம அலுவலர் காரியாலயம் நிரந்தரக் கட்டடத்தில்

அளவெட்டி, செப்.26
அளவெட்டி தெற்கு கிராம அலுவலர் காரியாலயம் புதிய கட்டடத்தில் இயங்கி வருகின்றது.
இதுவரை காலமும் அளவெட்டி தெற்கு கிராம அலுவலர் பிரிவு ஜே/219 அலுவலகம் பெருமாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்துக்குச் செல்லும் வீதியில் செயற்பட்டு வந்தது.
கடந்த 18ஆம் திகதி தொடக்கம் அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் சகல வசதிகளுடனும் இயங்கி வருகின்றது.
ஜே.219 கிராம அலுவலர் காரியாலயம், சமுர்த்தி உத்தியோகத்தர் அலுவலகம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகம் ஆகிய மூன்று அலுவலகங்களும் ஒரே இடத்தில் செயற்பட்டு வருகின்றன.
இதுவரை காலமும் சொந்தக்கட்டடம் இருக்கவில்லை. மேற்குறித்த அலுவலர்கள் காலத்துக்குக் காலம் பல தனியார் வீடுகளை மாறிமாறிப் பாவித்து வந்தனர்.
தற்போது கடந்த 15ஆம் திகதி புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கக்கட்டடத்தில் இனி நிரந்தரமாகச் செயற்படும்.
எனவே இந்தக் கிராம மக்கள் இனிமேல் தமது செயற்பாடுகளை ஒரே இடத்தில் மூன்று விடயங்களையும் சமகாலத்தில் நிறை வேற்றிக் கொள்ள முடியும் என கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் மு.சந்திர சேகரம் தெரிவித்தார்.
(ய-36)

## மட்டுவில் வடக்கில் கைக்குண்டு மீட்பு

தென்மராட்சி, செப்.26
மட்டுவில் வடக்குப் பகுதியில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு (ஜொனி பட்டி) ஒன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.
தென்னந் தோட்டமொன்றில் குழிவெட்டியபோது கைக்குண்டு காணப்பட்டது. இதுதொடர்பில் காணி உரிமையாளர் கிராம அலுவலர் ஊடாகப் பொலிஸாருக்கு அறிவித்தார்.
அங்கு விரைந்த பொலிஸார் சாவகச்சேரி நீதி மன்றில் அறிக்கைத் தாக்கல் செய்தனர்.
நீதிவானின் பணிப்பின் பேரில் விசேட அதிரடிப் படையினர் மூலம் குண்டு மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.
(ய-9)

## ஓடையம்பதியில் நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப்.26
யாழ்ப்பாணம் உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயத்தின் தொண்டர்சபையினால் நடத்தப்படும் கற்பக விநாயகர் அறநெறிப் பாடசாலையின் வாணி விழா நாளை புதன்கிழமை கற்பகவிநாயகர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3மணிக்கு நடைபெறும் என்று ஆலய தொண்டர் சபையினர் தெரிவித்தனர். நிகழ்வின் முதன்மை விருந்தினராக இந்து சமய கலாசார திணைக்களத்தின் ஒய்வுநிலை உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ய-ரி)

## பெங்களூர் மருத்துவக் கண்காட்சிக்கு பங்குபற்ற விரும்புவோருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப்.26
பெங்களூரில் அடுத்தவருடம் நடைபெறவுள்ள மருத்துவக் காண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் யாழ். மருந்து விற்பனையாளர்களை விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.
இந்தியாவின் மருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்வோர் பங்குபற்றும் மாபெரும் கண்காட்சி 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம்திகதி தொடக்கம் 17ஆம்திகதி வரை பெங்களூரில் நடைபெறவுள்ளது.
இந்தக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்புவோர் யாழ். வணிகர் கழகத்தின் ஊடாக விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கமுடியும். இதில் பங்குபற்றுவதன் மூலம் மருந்துகள் விற்பதிலும், மருத்துவ உபகரணங்களை விற்பனை செய்வதிலும் ஈடுபட்டுள்ளவர்கள் அதிக பயனைப் பெறமுடியம் என இந்தியத் துணைத்தூதர் யாழ்.வணிகர் கழகத்துக்கு அறிவித்துள்ளார்.
இங்கிருந்து செல்பவர்களுக்கு உணவு வசதிகளுடன் கூடிய தங்குமிட வசதியும், விமான நிலையத்திலிருந்து போக்குவரத்து வசதியும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
விமான பயணக்கட்டணம் வழங்கப்படமாட்டாது.
மேலதிக விபரங்களுக்கு 0212228593 எனும் இலக்கத்தினூடாக வணிகர் கழகத்துடன் தொடர்புகொள்ளுமாறு யாழ் வணிக் கழகத்தின் செயலாளர் ச.சிவகுமரன் தெரிவித்துள்ளார்.
(யாரி.04)

## அராலி சரஸ்வதியில் நாளை பரிசளிப்புவிழா

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை பி.ப 2 மணிக்கு சதாசிவம் மண்டபத்தில் நடைபெறும். பாடசாலை அதிபர் ந.சபாரத்தின சிங்கி விழாவுக்கு தலைமை தாங்குவார். இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும், சிறப்பு விருந்தினராக வலிகாமக் கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந. காண்டீபனும் கலந்துகொள்ளவுள்ளனர். (ய)

## தென்மராட்சிப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி, செப்.26
தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கானகூட்டம்நாளைமறுதினம்வியாழக்கிழமைஇடம்பெறும். மேற்படி கூட்டமானது பிற்பகல் 1.00 மணிக்கு வலயக்கல்வி அலு வலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (ய-9)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு 3 மாத சிறை

மல்லாகம், செப். 26
உடைமையில் இரண்டு கிராம் கஞ்சா போதைப்பொருளை வைத்திருந்த நபருக்கு மூன்று மாத சிறைத் தண்டனை விதித்து மல்லாகம் நீதிவான் மன்றம் தீர்ப்பளித்தது.
உடைமையில் 2 கிராம் கஞ்சா போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் மல்லாகம் நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவர் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார். இதற்கு முன்னரும் இதே குற்றத்துக்கு மன்றில் தண்டம் செலுத்தினார் என்று மன்றுக்கு பொலிஸார் சுட்டிக்காட்டினர்.
வழக்கை விசாரித்த மல்லாகம் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜூட்சன், மீளவும் அதே குற்றத்தைச் செய்ததால் குற்றவாளிக்கு 3 மாதச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.
அத்துடன், குற்றவாளி 3 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் மேலும் ஒரு மாத கால சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.
(வ-37)

## கச்சாய் பகுதியில் வாள்வெட்டு ஒருவர் காயம்: இருவர் கைது

தென்மராட்சி, செப்.26
கச்சாய் தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் குடும்பத் தலைவர் ஒருவர் காயமடைந்துள்ளார்.
இலக்கத்தகடு மூடிமறைக்கப்பட்ட பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வந்திருந்த மூவர் தலைக்கவசம் அணிந்திருந்தனர். அந்த மூவரில் ஒருவர் கையில் வைத்திருந்த வாளால் வெட்டினார் எனத் தெரிவிக்கப்பட்டது.
காயத்துடன் தப்பி ஓடிய நபரைச் சந்தேகநபர்கள் கொடிகாமம் பாடசாலை வரை துரத்தி வந்தனர் என்று பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை கொடிகாமம் பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர். (ய-9)

# வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் கத்திவெட்டு: ஒருவர் படுகாயம்

அச்சுவேலி, செப்.26

அச்சுவேலிப் பகுதியில் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறி கத்தி வெட்டில் முடிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பில் தெரியவருவதாவது: அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையம் முன்பாக அண்மையில் இருவர் கதைத்துக்கொண்டிருந்துள்ளனர். இவர்களின் பேச்சு வாய்த்தர்க்கமாகி இறுதியில் ஒருவர் மற்றவரின் தலையில் கத்தியால் வெட்டியுள்ளார் எனக் கூறப்படுகிறது.

அச்சுவேலியைச் சேர்ந்த நிறோஜன் (வயது-27) என்பவரே தலையில் வெட்டுண்ட நிலையில் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கத்தியால் வெட்டிய நபர் தலைமறைவாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ய-ரி.2,26)

# நெடுந்தீவுச் சாலைகளில் மின்விளக்குகள் இல்லை

## விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.26

இருளில் கிடக்கும் நெடுந்தீவுச் சாலைகளில் மின்விளக்குகளை பொருத்தித் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நெடுந்தீவில் சுமார் ஆயிரத்து 500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

பிரதேசத்தின் ஒருசில பகுதிகளில் மட்டும் சாலை மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. மக்கள் அன்றாடம் பாவிக்கும் பல சாலைகள் இருளில் மூழ்கியே காணப்படுகின்றன. பொதுவாக பெண்கள், வயோதிபர்கள் இரவுவேளைகளில் இருள் சூழ்ந்த சாலையால் பயணிக்கும்போது பல சவால்களை எதிர்கொள்கின்றனர்.

சாலைகளும் குண்டும் குழியுமாக இருக்கின்றன. இதனால் இருளில் பயணிப்பவர்களில் பெரும்பாலானோர் அதில் வீழ்ந்து காயப்படுகின்றனர். வாகனங்களும் சேதாரம் அடை கின்றன. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் நெடுந்தீவு பிரதேசசபையின் செயலாளருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, நெடுந்தீவு பிரதேசத்தில் கணிசமான இடங்களுக்கு சாலை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அதிலும் முக்கியமாக பொதுமக்கள் நடமாடும் இடங்கள் மற்றும் சுற்றுலாத் தளங்களில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

ஏனைய இடங்களுக்கு மின்விளக்குகளைப் பொருத்தித் தருமாறு நெடுந்தீவில் நடைபெற்ற அபிவிருத்திக் கூட்டத்திலும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஆகவே நாம் பொதுமக்களிடம் எந்தெந்தப் பகுதிகளுக்கு மின்விளக்குகள் தேவைப்படுகின்றன என்ற தகவலைக் கோரியுள்ளோம். மக்களின் தகவலின் அடிப்படையில் மின்விளக்குகள் எத்தனை தேவை என்ற தரவுகளைப் பெற்றுக் கொண்டு நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம் - என்றார். (ய-8)

# குளவிக்கொட்டுக்கு இலக்கான இருவர் மருத்துவமனையில்

தென்மராட்சி, செப்.26

அல்லாரை வடக்கில் கருங்குளவிகளால் கொட்டப்பட்ட பெண்ணும், நான்கு வயதுச் சிறுவன் ஒருவனும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது. சாலையில் நடந்து சென்ற இவர்களை கருங்குளவிகள் துரத்தித் துரத்திக் கொட்டின எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இருவரும் ஆலயத்துக்குச் சென்றுள்ளனர். அந்த வேளையில் மரத்திலிருந்து வீழ்ந்த ஓலைக்குள்ளிருந்து புறப்பட்ட கருங்குளவிகள் இவர்களை கொட்டியுள்ளன. வேலுப்பிள்ளை செல்வராணி (வயது-55), லிங்கேசன் யக்சிகன் (வயது-4) என்ற இருவருமே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ய-9)

# பறிமுதல் செய்யப்பட்ட மணல் ஏல விற்பனை

சாவகச்சேரி நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்ட மணல் , பகிரங்க ஏலத்தில் அண்மையில் விற்பனை செய்யப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில், அனுமதிப் பத்திரமின்றி வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்ட மணல், பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

அவை நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டன. பாலியாற்று மணல், நாகர்கோவில் மணல், கச்சாய் மணல் சுண்ணாம்புக் கற்கள் போன்றவை நீதிமன்றால் பறிமுதல் செய்யப்பட்டன.

நீதிமன்ற வளாகத்தில் 20 க்கும் மேற்பட்ட இடங்களில் பறிக்கப்பட்டிருந்த மணல் குவியல்கள், அந்தந்த இடத்தில் வைத்து ஏலத்தில் விடப்பட்டன. மணலைக் கொள்வனவு செய்ய பலர் முண்டியடித்த தால், ஏலம் எடுப்பதில் பலத்த போட்டி நிலவியதை அவதானிக்க முடிந்தது. அதனால் ஏலத்தொகை உயர்வடைந்தது. மணலுடன் பறிமுதல் செய்யப்பட்ட சவள்கள், மண்வெட்டிகள், கோடரிகள், கத்திகள் போன்றவையும் ஏலத்தில் விடப்பட்டன. (ஐ-9)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 50 | 60 | 60 |
| கத்தரி | 120 | 140 | 150 | 150 | 140 |
| மரவள்ளி | 80 | 60 | 70 | 60 | 60 |
| பயிற்றை | 80 | 80 | 80 | 80 | 120 |
| பாகல் | 300 | 300 | 300 | 300 | 180 |
| க.கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 140 | 120 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 250 | 240 | 250 | 220 | 190 |
| பூசணி | 40 | 40 | 30 | 50 | 40 |
| தக்காளி | 140 | 160 | 200 | 150 | 160 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 80 | 80 |
| கீரை | 50 | 40 | 40 | 20 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 300 | 240 | 200 | 300 | 240 |
| புடோல் | 60 | 100 | 70 | 80 | 80 |
| கோவா | 100 | 100 | 80 | 120 | 100 |
| வெண்டி | 60 | 60 | 70 | 100 | 80 |
| போஞ்சி | 180 | 160 | 150 | 180 | 200 |
| லீக்ஸ் | 140 | 140 | 120 | 120 | 160 |
| தேங்காய் | 70 | 110 | 90 | 90 | 80 |
| உ.கிழங்கு | 100 | 120 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 120 | 300 | 120 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 140 | 120 | 120 | 120 | 160 |
| கரட் | 150 | 160 | 160 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 160 | 200 | 160 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 500 | 300 |
| கணவாய் | 800 | 600 | 700 | 1000 |
| பாரை | 600 | 500 | 700 | 700 |
| சுறா | 600 | 700 | 800 | 1000 |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 600 | 400 | 450 | 400 |
| முரல் | 350 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 350 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 350 | 300 | 500 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 200 |
| திருக்கை | 350 | 200 | 400 | 200 |
| மதனம் | 250 | 150 | 200 | – |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 150 | 200 | 450 | 400 |
| வாளை | 150 | 200 | 300 | – |

# போதையில் வாகனம் ஓடிய 14 பேர் சாரதிப் பத்திரத்தை நேற்று இழந்தனர்

## தண்டம் விதித்து சமூகசேவை செய்யுமாறும் கட்டளையிட்டது யாழ்ப்பாண நீதிவான் மன்று

யாழ்ப்பாணம், செப். 26

மதுபோதையில் மோட்டார் வாகனங்களைச் செலுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 14 பேருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று நேற்று தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டம் விதித்தது. அவர்களுடைய சாரதி அனுமதிப் பத்திரங்களை ஒரு வருடத்துக்குத் தடுத்து வைக்குமாறு உத்தரவில் தெரிவித்தது.

யாழ்ப்பாண நகரத்தில் யாழ்ப்பாண பொலிஸார் நேற்று முன்தினமிரவு பரிசோதனை நடவடிக்கையைத் திடீரென நடைமுறைப்படுத்தினர். அதன்போதே 14 பேரும் மாட்டினர்.

அவர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்கள் தம் மீதான குற்றத்தை ஏற்றுக் கொண்டனர்.

அதனையடுத்து அவர்களுக்குத் தலா 7 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. தவிர, 100 மணித்தியாலங்கள் அவர்கள் அனைவரும் கட்டாய சமுதாய சீர்திருத்த சேவையில் ஈடுபடவேண்டும் என்றும் பணித்தது. அவர்கள் ஒவ்வொருவரும் 60 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஜனவரி மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் சமுதாய சீர்திருத்த சேவையை அவர்கள் முழுமைப்படுத்த வேண்டும். என்றும் நீதிவான் சி. சதீஸ்தரன் கட்டளையிட்டார். (4,103)

# மாணவர்களுக்கான முத்திரைக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 26

பன்னாட்டு அஞ்சல் நிகழ்வை முன்னிட்டு மாணவர்களுக்கான முத்திரைக் கண்காட்சி சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இன்று முற்பகல் ஆரம்பமாகிறது.

முற்பகல் 9 மணி தொடக்கம் கண்காட்சியைப் பார்வையிடலாம் என்று அஞ்சலகத்தினர் தெரிவித்தனர். பன்னாட்டு அஞ்சல் தினம் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகிறது. அதனையொட்டி ஆரம்பித்த அஞ்சல் வாரத்தையொட்டி இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,9)

# டெங்கு பரவ இடமளித்த 35 பேருக்குத் தண்டம்

டெங்கு நோய் பரவும் நிலையில் சூழலை வைத்திருந்த 35 பேருக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்று நேற்று தலா ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுற்றுச்சூழல் பிரிவு பொலிஸாரால் யாழ்ப்பாண நகரப்பகுதியில் வீடு வீடாகக் கடந்த வாரம் டெங்குசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் வடிகான்கள், கால்வாய்கள், வாகனத்தின் பழைய ரயர்கள், கைவிடப்பட்ட போத்தல்கள், பேணிகள் என்பவற்றையும் சூழலை அசுத்தமான வகையில் வைத்திருந்த 35 பேர் இனங்காணப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவர்கள் மீதான வழக்கு யாழ்ப்பாண நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. அவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டு தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டம் செலுத்தினர். (4,103)



ரூ.19 லட்சம் நிதியில் மலக்கழிவுகளை பசளையாக்கும் திட்டம்;

# மாநகரக் கழிவகற்றல் பிரச்சினைகள் தீரும்

### அதிகாரிகள் நம்பிக்கை

யாழ்ப்பாணம் செப் 26

மலக்கழிவுகளை பசளையாக்கும் திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாண மாநகரக் கழிவகற்றலில் இருக்கின்ற பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என யாழ்ப்பாண மாநகர சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; யாழ்ப்பாணம் காக்கைதீவுப் பகுதியில் யாழ்ப்பாண மாநகர சபையினால் 19 மில்லியன் ரூபா செலவில் மலக்கழிவுகளைப் பசளையாக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாண மாநகரப் பகுதியில் இருக்கின்ற மலக்கழிவுகளை பசளையாக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு அதிலிருந்து பசளைப் பதார்த்தங்களை உருவாக்க முடியும். அத்துடன் அதிலிருந்து பெறப்படும் கழிவு நீரைச் சுத்திகரித்து அந்தப் பிரதேசத்தில் எம்மால் அமைக்கப்படவுள்ள தென்னந் தோப்புகளுக்கும் பயன்படுத்த உத்தேசித்துள்ளோம். மேலும் கொழும்பு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒரே தடவையில் திண்மக் கழிவுகளை பசளையாக்கும் வலுவுடைய இயந்திரம் வழங்கப்படவுள்ளது. இது 50 தொன் நிறை கொண்டது. அதன்படி வடக்கு மாகாணத்துக்கு பெரும்பாலும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கே அந்த இயந்திரம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு இயந்திரம் கிடைக்குமானால் யாழ்ப்பாண நகரில் தேங்கும் திண்மக் கழிவுகளை ஒரு தடவையில் பசளையாக மாற்ற முடியும். இதனால் திண்மக் கழிவகற்றல் செயற்பாட்டில் இருக்கின்ற பிரச்சனைக்குத் தீர்வு கிடைக்கும் என்றனர். (21-8)

## மன்னாரில் இருந்து கேரதீவு, நாவற்குழி ஊடாக பஸ் சேவையை ஆரம்பிக்குக

### பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம். செப்.26

அரச ஊழியர்களின் நன்மை கருதி. மன்னாரிலிருந்து பி.ப 1.30 மணிக்குச் சங்குப்பிட்டி. கேரதீவு. நாவற்குழி ஊடாக யாழ்ப்பாணம் வரை நடைபெற்று வந்த இ.போ.ச. பஸ் சேவை திடீரென மாற்றப்பட்டுக் கேரதீவு. சாவகச்சேரி ஊடாக இடம்பெறுகிறது. மேற்படி பஸ் சேவை வழமைபோல் கேரதீவு. நாவற்குழி ஊடாக இடம்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரச உத்தியோகத்தர்களான ஆசிரியர்கள் வடமாகாண இ.போ.ச பிராந்திய முகாமையாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: இதுவரை காலமும் ஆசிரியர்களின் நலன் கருதி பி.ப 1.30 மணிக்கு மன்னாரிலிருந்து புறப்படும் இ.போ.ச பஸ் சேவை பூநகரி. சங்குப்பிட்டி. கேரதீவு. நாவற்குழியூடாக யாழ்ப்பாணம் செல்வது வழக்கம். இந்தச் சேவை கடந்த ஒரு மாதகாலமாக மாற்றப்பட்டு மறவன்புலம். நாவற்குழி ஊடாகச் செல்லாமல் கேரதீவு. சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணம் சென்றடைகிறது.

இதனால் மேற்படி பஸ்ஸில் செல்லும் ஆசிரியர்கள் நேரத்துக்கு வீடு செல்ல முடியாமல் திண்டாடுவதுடன் மறவன்புலம். தனங்கிளப்பு. தச்சன்தோப்பு நாவற்குழி ஆகிய இடங்களைச் சேர்ந்த ஆசிரியர் மட்டுமல்ல பொதுமக்களும் இந்த பஸ்ஸில் பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (21-15)



# அமைச்சர் ராஜிதவை சந்திக்க முயன்ற சுகாதாரத் தொண்டர்களுக்கு ஏமாற்றம்

## நிரந்தர நியமனம் தொடர்பாகப் பேசமுடியவில்லை என அவர்கள் கடும் கவலை

வவுனியா. செப்.26

வவுனியாவிற்கு வருகைதந்த கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தினவை சந்திக்க முயன்ற சுகாதாரத் தொண்டர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

வவுனியாவில் அமைக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் திறப்புவிழா நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றது. கொழும்பு சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்தின அந்தப் பணிமனையைத் திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் கே. காதர் மஸ்தான், வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெயதிலகா, வைத்திய அதிகாரிகள், சுகாதாரத்துறை அலுவலகர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது சுகாதாரத் தொண்டர்களாக தற்காலிகமாகப் பணியாற்றி, நிரந்தர நியமனம் கோரி போராட்டத்தில் ஈடுபட்டு பின்னர் அமைச்சர்களின் வாக்குறுதிகளைநம்பிப்போராட்டத்தைக்கைவிட்ட சுகாதாரத்தொண்டர்கள் அமைச்சர்ராஜிதவைச்சந்திக்க முனைந்தனர். தமது நியமனம் தொடர்பாக கலந்துரையாட அவர்கள் தீர்மானித்தனர். எனினும் அதற்குச் சந்தர்ப்பம்கிடைக்கவில்லை. அலுவலகத்திறப்பு விழா நிறைவுற்றதும் 10 நிமிடங்கள் மட்டுமே அமைச்சர் அங்கு தங்கியிருந்தார். ஊடகங்களுக்குக்கூட அவர் கருத்துத் தெரிவிக்கவில்லை. உடனடியாகவே கொழும்பு சென்று விட்டார். இந்த நிலையிலேயே சுகாதாரத் தொண்டர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.



இது தொடர்பில் சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்ததாவது:

நாம்தொடர்ச்சியாகநிரந்தரநியமனம் கோரிப் போராடி வந்த நிலையில் ஒரு மாத காலத்துக்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற உத்தரவாதம் எமக்கு வழங்கப்பட்டது. அதற்கு அமைவாக எமது போராட்டத்தைக் கைவிட்டோம். இன்றுகொழும்புசுகாதார அமைச்சரிடம்மகஜர்கையளித்து எமதுநியமனம்தொடர்பில்கேட்டறிவதற்காகப் பல மணிநேரமாகக் காத்திருந்தோம். எனினும் எம்மைச் சந்தித்து எமக்கான உறுதியான பதிலை வழங்காது. இங்கிருந்து சுகாதார அமைச்சர் சென்று விட்டார்.

இதனால்மிகுந்த மனவருத்தத்துடன் நாம் இரவு வேளையில் வீடு திரும்புகின்றோம் என்றனர். (ய-21)

## மேலதிக மருத்துவரை நியமிக்குமாறு தென்மராட்சி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி செப். 26

யாழ்ப்பாணம் கைதடி அரச மருத்துவமனைக்கு மேலும் ஒரு மருத்துவ அதிகாரியை நியமிக்குமாறு பிரதேச மக்கள் மாகாண சுகாதார அமைச்சினைக் கேட்டுள்ளனர்.

தென்மராட்சி மேற்கு மற்றும் தெற்குப் பிரதேசத்தில் உள்ள 12 கிராம அலுவலர் பிரிவுகளில் சுமார் 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இவர்கள் கைதடி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மருத்துவமனையில் ஒரேயொரு மருத்துவர் மட்டும் பணிபுரிவதால் கிளினிக் நடைபெறும் நாள்களில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் கிளினிக் முடியும் வரை காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு மருத்துவமனைக்கு மேலும் ஒரு மருத்துவரை நியமிக்க வேண்டும் என அந்த மக்கள் கேட்டுக்கொண்டனர். இல்லையேல் மருத்துவமனையில் கிளினிக் நடைபெறும் நாள்களில் வெளி நோயாளர்களைப் பார்வையிட வேறொரு மருத்துவரை அனுப்பி,வைக்க சுகாதாரத் திணைக்களத்தினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர்கள் கோரினர். (21-9)

# சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தினவால் வடக்கில் வைத்தியசாலைக் கட்டடங்கள் திறப்பு

### ரூபா.1824மில்லியன்நிதியில்திட்டங்கள்

யாழ்ப்பாணம். செப்.26

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 824 மில்லியன் ரூபா செலவில்வைத்தியசாலைக்கட்டடங்கள் அமைக்கப்பட்டன. இந்தக் கட்டடங்கள் நேற்றுமுன்தினம் மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்தினவினால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இக்கட்டடங்கள். தெற்கு. கிழக்கு ஆசிய நாட்டுக்கான ஜி.எவ். எ.ரி.எம் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மருதங்கேணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கட்டடம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பணிமனையைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சுகாதார. போசணை மற்றும் சுதேச வைத்திய பிரதியமைச்சர் பைசில் காசிம். வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே. வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன், யாழ்ப்பாணம் பாதுகாப்புக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி, சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஜெயந்த பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.



இதேவேளை. இந்தப் பணிமனை இருபத்து ஏழுமில்லியன் ரூபாசெலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரின்உதவியுடன்நிர்மாணப்பணிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேநேரம் வவுனியாவிலும் வைத்தியசாலைக்கட்டடம் திறந்துவைக்கப்பட்டது. (ய-35)

## பாலுமகேந்திராவின் ‘வீடு’ திரைப்படக் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம், செப்.26
மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தால் சிறந்த திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் பாலு மகேந்திர இயக்கிய வீடு, திரைப்படமும் காட்சிப்படுத்தப்படவுள்ளது.
எதிர்வரும் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணியளவில் காலையடி, பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப உள்ளரங்கில் திரைப்படம் காட்சிப்படுத்தப்படவுள்ளது. நல்ல திரைப்பட ரசனையை இளைஞர்கள் மத்தியில் உருவாக்கும் நோக்கத்துடன் மறுமலர்ச்சி இளைஞர் கழகத்தினரால் இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
இச் செயற்பாட்டில் கடந்த மாதம் ஈரானிய இயக்குனர் மஜீதி மஜித்தின், ‘சொர்க்கத்தின் குழந்தைகள்’ திரைப்படம் தமிழ் உபதலைப்புகளுடன் காட்சிப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ய)

## 7 வயதுச் சிறுவன் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்ப்பு

### சிறிய தந்தையும் தாயும் கைது

யாழ்ப்பாணம், செப்.26
காயங்களுக்கு உள்ளான சிறுவன் ஒருவன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். சிறிய தந்தையே அந்தச் சிறுவனைத் தாக்கியதாக கூறப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்றது. சம்பவத்தை அடுத்து சித்திரவதை புரிந்தார் என கூறப்பட்ட சிறியதந்தையும், சிறுவனின் தாயும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். தும்பளை தெற்கு வறாத்துப்பளைப் பகுதியைச் சேர்ந்த நிரஞ்சன் நிதுசன் (வயது7) என்ற சிறுவனே துன்புறுத்தல்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான்
இதுபற்றி தெரிவிக்கப்பட்டதாவது:
நிதுசன் என்ற சிறுவனைப் படிக்குமாறு கூறி அவனின் சிறிய தந்தை கண்டித்துள்ளார். (அடித்து) வலி தாங்கமுடியாத சிறுவன் சிறிய தந்தையின் தாயார் வீட்டுக்கு ஓடியுள்ளான். எனினும் சிறியதந்தை, விடாது அங்கு சென்றும் அவனைத் தாக்கியுள்ளார். நிதுசன் சத்தமிட்டுக் குழறினான். அதைக் கேட்ட அயலவர்கள் 119 என்ற தொலைபேசி எண்ணுக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் நிதுசனை மருத்துவமனையில் சேர்த்தனர். சிறியதந்தையை கைது செய்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்தனர். சிறுவனிடம் முறைப்பாட்டைப் பெற்றனர். நிதுசன் தாக்கப்படும் போது தடுக்காது நின்றார் என்று குற்றம் சாட்டி நேற்றுக் காலை தாயாரைக் கைது செய்தனர். பொலிஸ் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று நண்பகல் பருத்தித்துறை நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணைசெய்த நீதிவான் இருவரையும் அடுத்தமாதம் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். நிதுசன் அவனது அப்பம்மாவின் பாதுகாப்பில் விடப்பட்டுள்ளான். (ய 21, ரி2,26)

## யாழ்ப்பாண மாநகர சுகாதார பரிசோதகர்கள் ஐவர் இடமாற்றம்:

# தீர்வு கிடைக்காவிடின் நாடு முழுவதும் பெரும் போராட்டம் வெடிக்கும்

### பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப்.26
யாழ்ப்பாணம் மாநகர சபையில் கடமையாற்றிய பொதுச் சுகாதாரப் பரிசோதர்களின் இடமாற்றம் முறையற்றது. இவ்வாறு இடம்மாற்றம் செய்யப்பட்ட அந்த ஊழியர்கள் பிராந்திய சுகாதார பணிமனையின் ஊழியர்களாக அல்லது உள்ளூராட்சிசபையின் கீழ் உள்ள சபைகளுக்கு இடம்மாற்றம் செய்யப்படவேண்டும். இதை வலியுறுத்தி நேற்று முதல் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளது. இதற்குரிய தீர்வு கிடைக்காது விடின் அடுத்தடுத்த வாரங்களில் இணைந்த மருத்துவ சேவை, துணை மருத்துவ சேவைச் சங்கங்களையும் இணைத்து பெரும் போராட்டத்தில் ஈடுபடுவோம் என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்தது.
கடந்த 4 மாதங்களாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட 5 சுகாதாரத் தொண்டர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். யாழ்ப்பாணம் மாநகர சபையில் அவர்கள் நீண்ட காலம் பணியாற்றினர். எனினும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இந்த இடமாற்றத்தை ஆட்சேபித்தே அவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர். சுகாதார அமைச்சின் உத்தரவை மீறி அவர்கள் பணிப்புறக்கணிப்பைத் தொடர்ந்ததால் 5 பொதுச் சுகாதார பரிசோதகர்களும் தாமாகவே பணியில் இருந்து விலகியதாகக் கருதப்படுவர் என சுகாதார அமைச்சு அறிவித்தது. அதற்கான கடிதமும் அமைச்சால் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இதனால் இலங்கையின் சகல பகுதியிலும் பணியாற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி ஓர் போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர். எனினும் வடக்கு சுகாதார அமைச்சு, இடமாற்ற விடயத்தில் விடாப்பிடியாக நின்றது. இந்த நிலையில் நாடு முழுவதும் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று சுகயீனப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இன்றும் அவர்களுடைய போராட்டம் தொடரும் என அவர்கள் தெரிவித்தனர்.
இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது; சுகாதாரப் பரிசோதர்களுடைய இடமாற்றம் தொடர்பில் கொழும்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கப் பிரதிநிதிகள் கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண சுகாதார அமைச்சருடன் கலந்துரையாடினர். எனினும், உரிய தீர்வினை அமைச்சு வழங்கவில்லை. இதனைத் தொடர்ந்து நாடுமுழுவதும் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.
தீர்வு கிடைக்காது விடின் காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம். தற்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கங்கள் மாத்திரம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். அடுத்தடுத்த வாரங்களில் இணைந்த மருத்துவ சேவை, துணை மருத்துவ சேவைச் சங்கங்களும் இணைந்து கொள்ளவுள்ளன. இடமாற்றம் செய்யப்பட்ட ஊழியர்கள் பிராந்திய சுகாதார பணிமனையின் ஊழியர்களாக உள்வாங்கப்பட வேண்டும். அல்லது உள்ளூராட்சிசபையின் கீழ் உள்ள சபைகளுக்கு இடம்மாற்றம் செய்யப்படவேண்டும் என்று நாம் கோரிக்கை விடுத்துள்ளோம் எனினும், வடக்கு மாகாண அமைச்சு இதற்கான உரிய பதில்களை வழங்கவில்லை. ஆகவே நாம் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ய.21,ரி)

# யாழ். சிறையில் இருக்கும் தந்தை தாக்கப்பட்டுள்ளார்

### மனித உரிமை ஆணைக்குழுவில் மகன் முறைப்பாடு

யாழ்ப்பாணம்.செப்.26
யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது தந்தையை சிறைச்சாலை பாதுகாப்பு ஊழியர்கள் தாக்கினார்கள் என யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக்குழுவில் மகன் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதுபற்றி முறைப்பாடு செய்தவர் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
கடந்த 8 மாதங்களுக்கு முன்பு எனது தந்தை யாழ்ப்பாணத்துக்கு சுற்றுலா சென்றார். அதன்போது அவர் கஞ்சா வைத்திருந்ததாக குற்றம் சாட்டப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். 8 மாதகாலமாகியும் தொடர் வழக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன. எனினும் தீர்ப்பு இன்னும் கிடைக்கவில்லை. இவர் தற்போது யாழ்ப்பாணம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை சம்பந்தம் இல்லாமல் எனது தந்தை விசாரணை என்ற பெயரில் சிறையில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளார். கை அசைக்க முடியாத அளவுக்குக் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். நேற்று நான் தந்தையைப் பார்க்க சிறைக்குச் சென்றேன். அப்போது, தான் தாக்கப்பட்டதாகவும், காரணங்கள் தெரியவில்லை என்றும் கூறினார். இதுதொடர்பில் நான் யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளேன் என்றார்.. (ய-ரி)

## வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழா: ‘யாழ்ப்பாணர்’ இசை நாடகத்திற்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், செப்.26
வடக்கு மாகாண பண்பாட்டுப் பெருவிழாவில் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினால் அரங்கேற்றப்பட்ட ‘யாழ்ப்பாணர்’ எனும் இசை நாடகம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.
வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழா கடந்த 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆரம்பமானது. இதில் விருதுவழங்கும் நிகழ்வு மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது யாழ்ப்பாணம்திருமறைக்கலாமன்றத்தினால்



யாழ்ப்பாணர் எனும் இசை நாடகம் அரங்கேற்றப்பட்டது. இது பார்வையாளர்களின் பெரும் வரவேற்பை பெற்றது. யாழ்ப்பாணத்தின் பெருமை கூறும் யாழின் மகிமை மற்றும் யாழ்ப்பாணத்தவரின் வாழ்க்கையை சித்திரிக்கும் நாடகமாக இது அமைந்திருந்தது.
அத்துடன் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. தாபக உறுப்பினர் வி.ஜெகநாதனின் ‘சாதி வலயங்களுக்குள் வாக்கு வங்கிகள்’ என்ற கவிதைநூலுக்கும், கலைத்தூது அழகியல் கல்லூரியின் உப அதிபர் அருட்திரு அன்புராசா அடிகளின் ‘சிறகடிக்கும் சிட்டுகள்’ சிறுவர் பாடல் நூலுக்கும், 2016ஆம் ஆண்டுக்கான சிறந்த இலக்கிய நூல்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன.
திருமறைக்கலாமன்ற உறுப்பினர்களான அன்று யுலியசுக்கு நாட்டுக்கூத்துக்கான இளங் கலைஞர் விருது வழங்கப்பட்டது.
ஒளிப்படக்கலைக்கான போட்டிகளுக்காக யோ.ஜெஸ்ரினுக்கு இரண்டு பரிசில்களும் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ய-ரி)

# வடக்கு - கிழக்கு இணைப்புக்கு ஐ.தே.கவுக்கு உடன்பாடில்லை

## அந்தக் கட்சியின் பொதுச் செயலர் கபீர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்த விருப்பமும் இல்லை என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலரும் அமைச்சருமான கபீர் காசிம் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மட்டக்களப்புத் தொகுதியின் முஸ்லிம் பிரிவுக்கான அமைப்பாளர் ஏ.சி.கியாஸ் தலைமையில் ஏறாவூரில் நடைபெற்ற கட்சி ஆதரவாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் மாகாண தேர்தல் திருத்தச் சட்டத்துக்கு வாக்களிப்பு நடைபெறும் போது நாங்கள் தோல்வியைச் சந்திப்போம் என்று எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர். ஆனால், சிறப்பான வெற்றி கிடைத்தது. அதேபோன்று உள்ளூராட்சி தேர்தல் மற்றும் மாகாண சபை தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வெற்றி பெறுவோம்.

எதிர்வரும் காலங்களில் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தனித்து போட்டியிடாது தேசிய கட்சி மற்றும் சிறுபான்மை கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடும் என்று தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து போட்டியிடும் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வடக்கு -கிழக்கில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர்களையும் உள்வாங்குவதற்கான வேலைத் திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம். வடக்கு கிழக்கு இணைப்புத் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு எந்த விருப்பமும் இல்லை. ஆனால் இந்த விடயம் குறித்து பலமுறை கலந்துரையாடி உள்ளோம்.

இந்த நாட்டிலுள்ள அனைவரும் ஒரு தேசத்தின் கீழ் ஒன்றுபட்டு ஒரு வேலைத் திட்டத்தின் கீழ் இருக்க வேண்டும் - என்றார். (5)

# வடக்கு – கிழக்கு மதச் சார்பற்ற மாகாணமாக இருக்க வேண்டும்

## புதிய அரசமைப்பு இப்படி அமையவேண்டும் எனக் கோருகின்றார் ஜி.ரி.லிங்கநாதன்

புதிய அரசமைப்பில் பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது. வேண்டுமானால் வடக்கு-கிழக்குக்கு வெளியில் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கலாம். ஆனால் வடக்கு- கிழக்கு மாகாணம் மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்.


புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புபின்னிணைப்பாக சிலவிடயங்களைக்கொடுத்துள்ளது. அவற்றை முதல் இணைப்பில், அதாவது இடைக்கால அறிக்கையில் வரத்தக்கதாக வழங்கியிருக்க வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுக்கலாம். வடக்கு-கிழக்கு மாகாணம் மதச் சார்பற்றதாக இருக்க வேண்டும் - என்றார். (5).

### இடைக்கால அறிக்கையை ஆராய

# மகிந்த தலைமையில் கொழும்பில் இன்று கூட்டம்



கொழும்பு, செப். 26

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அது பற்றி ஆராய்வதற்காக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் மகிந்த அணி கொழும்பில் இன்று கூடவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு அனைத்து மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், மகிந்தவுக்குச் சார்பான சட்டவல்லுநர்கள் சிலரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

அரசமைப்பு நிர்ணய சபையின் சபையின் வழிநடத்தல் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளன.

சட்டத்துறை நிபுணரும் முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சிறப்பு உரையொன்றையும் நிகழ்த்தவுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு, புதிய அரசமைப்பு சம்பந்தமாக நாடு தழுவியரீதியில்விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துவதற்குரிய திட்டத்தையும் மகிந்த அணி வகுக்கவுள்ளது. (5)

# புதிய அரசமைப்பு தமிழருக்கு வெற்றி சிங்களவர், முஸ்லிம்களுக்கு ஏமாற்றம்

## கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவரின் நிலைப்பாடு இது

கொழும்பு, செப். 26

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தமிழ் மக்களுக்கு ஓரளவு வெற்றியாகவும் முஸ்லிம்களுக்கும், சிங்களவருக்கும் எந்த நன்மையையும் வழங்காமல் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு கிழக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித் தலைவரும், முஸ்லிம் உலமா கட்சியின் தலைவருமான முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடைக்கால அறிக்கையில் வடக்கும் கிழக்கும் ஒரே அலகாகக் கருதப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்கு முஸ்லிம்களை தமிழர் ஆதிக்கத்துக்கு அடிமைப்படுத்தும் கருத்தாகும். இதனை எந்த வகையிலும் உலமா கட்சி ஏற்றுக்கொள்ளாது. அதுவும் சுதந்திரக் கட்சியும் ஐக்கியதேசியக்கட்சியும் அதிகாரப்பரவலாக்கல் செய்ய வேண்டும் என்பதில் ஒத்த கருத்துள்ள நிலையில் மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரமும் வழங்கப்பட்டு வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டால் அது நிச்சயம் முஸ்லிம்களுக்கு பாதகங்களை ஏற்படுத்தும். எதிர்காலத்தில் தமிழ், முஸ்லிம் மோதல்களை ஏற்படுத்தும். 1985 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய தேசியக்கட்சி செய்தது போன்று முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் ஆயுதத்தை கொடுத்து இரு இனங்களையும் மோத விட்டது போன்ற மோதலை சிங்கள பேரினவாத அரசுகள் ஏற்படுத்தலாம்.

கிழக்கில் மட்டுமல்லாது கிழக்குக்கு வெளியே குறிப்பாக வடக்கு மேல் மாகாணம் போன்ற மாகாணங்களில் மிகச்சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களுக்கும் இது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

இதன் கரணமாகவே 2010 ஆம் ஆண்டு முதல் உலமா கட்சி மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரம் வழங்குவதாயின் கிழக்குக்கு வெளியில் வாழும் முஸ்லிம்களின் பெரும்பான்மை பிரதேசங்களை இணைத்து தனி நிர்வாக சபைகளை ஏற்படுத்த வேண்டும் என கூறி வருகிறோம். அவ்வாறு முடியாது என்றால் தற்போதிருக்கும் இனவாத சூழலில் மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் வழங்கக் கூடாது என்பதே எமது நிலைப்பாடாகும்.

இலங்கை வரலாற்றைப் பார்க்கும் போது பொலிஸார் பெரும்பாலும் இனவாதமாகவே செயற்பட்டு வந்துள்ளதை காண்கிறோம். வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டு தமிழ் பொலிஸ் உருவாக்கப்பட்ட போது முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனங்களை நாம் எளிதில் மறந்து விட முடியாது. வரலாற்றின் கசப்பான நிகழ்வுகள் பாடமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு எடுக்கப்படும் தீர்வுகளே நிரந்தர அமைதியைத் தரும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர் முறை இருக்க வேண்டும் என்ற சிறிலங்கா சுதந்திர ரக் கட்சியின் நிலைப்பாட்டை நாம் வரவேற்கிறோம். அதுவே எமது நிலைப்பாடாகும் - என்றார். (5.45)

# புதிய அரசமைப்பை குழப்ப சதி முயற்சி

## மக்கள் கருத்தறியும் குழுவின் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 26

புதிய அரசமைப்பு மக்களின் கோரிக்கை என்று அரசமைப்புக் குறித்து மக்களின் கருத்துக்களைப் பெற நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் லால் விஜேநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு புதிய அரசமைப்புக் கொண்டு வரும் நடவடிக்கைகளை சிலர் குழப்ப முற்படுகின்றனர் என்று தெரிவித்தார். (5)

# பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்க இணங்குவது தமிழரின் அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது

## முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் சாடல்

கொழும்பு, செப். 26

பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்குத் தமிழ்த் தலைமைகள் ஏற்றுக் கொண்டிருப்பது தமிழர்களின் அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது. இவ்வாறு முன்னாள் விவசாய அமைச்சரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

மல்லாகம் கல்லாரையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாதர் அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துச் சமகால அரசியல் நிலவரம் தொடர்பாகக் கலந்துரையாடியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வாக அரசால் முன்வைக்கப்பட்டிருக்கும் புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் பௌத்த மதத்துக்கே முதன்மை இடம் வழங்கப்பட்டுள்ளது. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதை எமது தமிழ்த்தலைவர்களும் ஏற்றுக் கொண்டிருப்பதாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். இலங்கையின் அரசியல் தலைவிதியை வரலாற்றுக் காலம் தொட்டு பௌத்த மதபீடங்களே தீர்மானித்து வருகின்றன. சிங்களப் பேரினவாதக் கருத்துகளின் ஊற்றுக் கண்களாகவும் இவையே விளங்கி வந்திருக்கின்றன. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்குத் தமிழ்த்தலைமைகள் ஏற்றுக் கொண்டிருப்பது தமிழர்களின் அரசியல் தற்கொலைக்கு ஒப்பானது.

தமிழ்க்கட்சிகளின் தலைமைகளைத் தனக்குச் சாதகமாக வளைத்துப் போடுவதில் கூட்டு அரசு வெற்றி பெற்றிருக்கிறது. அரசு சொல்வதைப் போன்றே, இவர்களும் நிதானத்தைக் கடைப்பிடிக்குமாறு கூறி வருகிறார்கள். வடக்கு மாகாணசபையில் இருந்தும் ஏகோபித்த விதமாக ஒரு தீர்மானம் வந்து விடக்கூடாது என்பதற்காக மாகாணசபையைப் பல அணிகளாக உடைப்பதிலும் ரணில் அரசு வெற்றி பெற்றிருக்கிறது. பௌத்த சிங்கள பேரினவாதத்தை எதிர்கொள்வதில் தமிழர் தரப்பு மிகவும் பலவீனமாகவே உள்ளது.

ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட போது, எம்மீதான பன்னாட்டுக் கவனம் மிக அதிகமாக இருந்தது. விட்டஇடத்தில் இருந்து தொடரும் அஞ்சலோட்டம் போல, எமது போராட்டத்தை சனநாயக வழிமுறைகளிலான போராட்டமாகத் தீவிரமாகத் தொடர்ந்திருந்தால் பன்னாட்டுச் சூழலை எமக்கானதாக மாற்றியிருக்க முடியும். ஆனால், நாங்கள் ஆட்சி மாற்றம்தான் தமிழ்மக்களுக்கான அரசியல் தீர்வைத்தரும் என்று சொல்லி எமது கட்சித் தலைவர்களை நம்பி ஆட்சி மாற்றத்துக்கு வாக்களித்தோம். அதையே ஒரு பெரும் புரட்சியாக நம்பிய நாம் இன்று கடைசியில் எல்லோராலும் ஏமாற்றப்பட்டுள்ளோம் - என்றார். (5)

# திருமலை கடற்படை முகாமில் மற்றொரு சித்திரவதைக் கூடம்

## நீதிமன்றில் சி.ஐ.டியினர் நேற்று அறிக்கை

கொழும்பு, செப். 26

திருகோணமலை கடற்படை முகாமினுள் நிலத்தடி இரகசிய வதைமுகாம் இயங்கு வந்தமை ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த இரகசிய வதைமுகாமிலிருந்து நூறு மீற்றர் தூரத்தில் மற்றொரு இரகசிய சித்திர வதைக் கூடம் இருந்ததையும், அங்கு கடந்த காலங்களில் பலர் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர். அதனை நீதிமன்றுக்கு நேற்றைய தினம் வெளிப்படுத்தியுள்ளனர்.

கொழும்பில் கடந்த 2008ஆம் ஆண்டு மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான வழக்கிலேயே, புதிய இரகசிய முகாமைக் கண்டறிந்ததாக குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக கொள்ளை தொடர்பான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா கோட்டை நீதிவானிடம் நேற்றுத் தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டு கொழும்பில் கடத்தப்பட்ட 11 பேரும் திருகோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள இரகசிய வதைமுகாமான கன்சைட் தடுப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்தமையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்திருந்தனர். இந்த வழக்கின் விசாரணை நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சார்பில் மன்றில் முன்னிலையான விசாரணைப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா மன்றில் தெரிவித்ததாவது:

இதுவரை நாம் 25 கடற்படை உத்தியோகத்தர்களிடம் விசாரணை செய்துள்ளோம். கடற்படை முகாம்களுக்கு சென்று வாக்கு மூலங்களை நாம் பெற்றோம்.

தற்போது விளக்கமறியலில் இருந்து வரும் கன்சைட் முகாமுக்குப் பொறுப்பாகச் செயற்பட்ட கொமாண்டர் ரணசிங்கவின் கீழ் சேவையாற்றிய இருவரின் வாக்கு மூலமும் அடங்குகிறது. அவர்களது வாக்குமூலத்தின் படி கன்சைட் நிலத்தடி சிறைக் கூடத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் மற்றொரு இரகசிய தடுப்பு மையம் அல்லது சிறைக் கூடம் இயங்கியுள்ளது.

இங்கு பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இந்த வழக்குக்கு உரிய 11 பேரும் கன்சைட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்கள் அல்லாமல் வேறு ஒரு தரப்பினரே அந்தச் சிறைக் கூடத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் யார் என்பது இதுவரை தெரியவில்லை. விசாரணைகள் தொடர்கின்றன.

இந்தக் கடத்தல் மற்றும் காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பில் மேலும் பலர் கைது செய்யப்படவேண்டியோர் பட்டியலில் உள்ளனர்.

**கடற்படையின் ஒத்துழைப்புக் குறைவு**

இந்த விசாரணைகளுக்கு கடற்பண்டயினர் வழங்கும் ஒத்துழைப்பு மிகக் குறைவாகவே உள்ளது.

நாம் கொமாண்டர் ரணசிங்கவின் கீழ் சேவையாற்றியோர் பட்டியலை கோரியிருந்தோம். அவர்கள் 15 பேர் கொண்ட பட்டியல் ஒன்றை அனுப்பினர். அவர்களிடம் விசாரணை செய்த போது, நாம் கோரிய காலப் பகுதியில் அவர்களில் பெரும்பாலானோர் ரணசிங்கவின் கீழ் சேவையாற்றவில்லை என்பது தெரியவந்தது. கடற்படை விசாரணைக்கு ஒத்துழைக்காமல் பொய்யான தகவல்களை வழங்குவதால் விசாரணையை முன்னெடுப்பதில் சிக்கல்கள் நிலவுகின்றன. இது தொடர்பில் நாம் புதிய கடற்படைத் தளபதியின் கவனத்துக்கு விடயத்தைக் கொண்டு வந்துள்ளோம்.

இது மட்டுமன்றி ஹெட்டி ஆராச்சி பயன்படுத்திய வான் கொமாண்டர் முனசிங்கவின் மனைவிக்குச் சொந்தமானது. இந்த வான் ஹெட்டி ஆராச்சிக்கு வழங்கப்பட்ட விதம் தொடர்பில் நாம் ஆவணங்களை கடற்படையிடம் கோரினோம். இதுவரை எந்தத் தகவல்களையும் வழங்க கடற்படை முன்வரவில்லை. இந்த விடயத்தையும் புதிய கடற்படைத் தளபதிக்கு அறிவித்துள்ளோம் - என்றார். (5.31)

பாராட்டி வாழ்த்துகின்றோம்





Best Wishes

திரு. பசுபதி
அருந்தவச்செல்வம்
SLEAS III (பொது ஆளணி)

செல்வன் அருந்தவச்செல்வம்
அபிலயன்
2016 புலமைப்பரிசில் 164 புள்ளிகள்

மேலும் பல உயர்வுகள் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

அத்தான் செல்வராசா
அக்கா அருந்தவச்செல்வி
மருமக்கள் - அகிலா, சயன்

Luzern
Switzerland

Congratulations

மாமா, அத்தை,
மச்சாள், மச்சான்.

மணிவிழா நாயகனின்
சேவை நலன் பாராட்டு



Congratulation

Congratulation

சோமசுந்தரம் சற்குணநாதன்

SLTS - I (Special Trained Science)

சேவை விவரம்

1979.06.01 - 1982.12.31 - நு/ வட்டக்கொட தமிழ் ம.வி
1983.01.01 - 1984.12.31 - யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை
1985.01.01 - 1986.05.31 - வ/ பாவற்குளம் கணேஸ்வரா ம.வி
1986.06.01 - 1989.02.01 - யா/ புங்குடுதீவு சித்தி விநாயகர் ம.வி
1989.02.02 - 1994.02.18 - யா/ புங்குடுதீவு கணேச ம.வி
1994.02.19 - 1996.05.31 - யா/ பாஷையூர் சென்.அன்ரனிஸ் மகளிர் ம.வி.
1996.06.01 - 1997.10.05 - வ/ வெளிக்குளம் ம.வி.
1997.10.06 - 2002.06.16 - யா/ வேலணை மேற்கு நடராசா ம.வி.
2002.06.17 - 2017.09.25 - யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.

எமது பாடசாலையில் 15 வருடங்கள் விஞ்ஞான பாட ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும் சேவையாற்றி, ஆசிரிய சேவையில் 38 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து ஓய்வு நிலை காணும் மணிவிழா நாயகனை சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்,
பாடசாலை சமூகம்.

# வைகோ மீது சீறிச் சினந்த சிங்களப் பெண்

## ஜெனிவாவில் நடந்த சம்பவம்

ஜெனிவா, செப். 26

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, ம.தி.மு.கவின் தலைவர் வைகோவுடன் சிங்களப் பெண் ஒருவர் கடுமையாக தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 36 ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதில் கலந்து கொள்வதற்காக பல நாடுகளில் இருந்தும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் வந்துள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை மண்டபத்தில், நீ தமிழ் நாட்டிலிருந்து வந்து இலங்கையைப் பற்றிப் பேச உனக்கு என்ன தகுதி இருக்கின்றது என்று வைகோவைப் பார்த்து அந்தச் சிங்களப் பெண் கேட்டுள்ளார்.

உங்களைப் போன்ற பெண்களை, எங்கள் தமிழ் பெண்களை ஆயிரக்கணக்கில் சிங்கள இராணுவம் வன்புணர்ந்து கொலை செய்துள்ளது. அப்பாவி மக்களைக் கொன்றிருக்கின்றது என்று வைகோ பதில் தெரிவித்துள்ளார். அந்தச் சிங்களப் பெண்ணுடன் வந்த முன்னாள் இராணுவ அதிகாரிகள் சிலர், நீங்கள் தற்கொலைதாரிகள் என்று வைகோவைப் பார்த்துப் பேசியுள்ளனர். நீங்கள் எங்கள் மக்களைக் கொன்றுள்ளீர்கள். அதைப் பற்றித்தான் பேச நான் இங்கு வந்துள்ளேன் என்று வைகோவும் பதிலடி கொடுத்துள்ளார்.

# சபாநாயகருக்கு எண்கணிதம் தெரியாதாம்

## மகிந்த அணியின் கண்டுபிடிப்பு இது

நாடாளுமன்ற விதிமுறைகளின் அடிப்படையில் நாம் குறிப்பிடும் விடயங்களை சபாநாயர் ஏற்றுக்கொள்வதில்லை. அவருக்கு எண் கணிதமும் தெரியாது. அது பாரதூரமான விடயமாகும். இவ்வாறு ம்கிந்த அணியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மகிந்த அணியின் மக்கள் சந்திப்பு கிரிபத்கொட வில் நேற்று நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சனநாயகத்தின் பேரில் நாம் குறிப்பிடும் விடயங்களை சபாநாயகர் ஏற்றுக்கொள்வதில்லை. நாடாளுமன்ற விதிமுறைகளின் பிரகாரம் குறிப்பிடும் விடயங்களையும் அவர் ஏற்றுக்கொள்வதில்லை. அவருக்கு எண் கணிதம் தெரியவில்லை. 16 பெரிதா அல்லது 54 பெரிதா எனக் கேட்டால் சிறு பிள்ளைகள் கூட 54 தான் பெரியது என்று குறிப்பிடுவார்கள். எனினும் சபாநாயகர் 16 தான் பெரியது எனக் குறிப்பிடுகிறார். அது பாரதூரமான விடயமாகும்.

மகிந்த அணிக்கே எதிர்க்கட்சித் தலைமைப் பதவி வழங்கப்பட வேண்டும். 16 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டமை சனநாயக விரோத செயற்பாடாகும். தற்போதைய உத்தியோக பூர்வ எதிர்க்கட்சி அதனது பொறுப்புகளை மேற்கொள்வதில்லை. இது அரசுக்கு முட் டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறது-என்றார். (5-31)

## ரோஹிங்ய முஸ்லிம்களை அழைத்துவருவது நானா?

விசாரணைகளை ஆரம்பிக்குமாறு அமைச்சர் ரிசாத் சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, செப். 26
தனது தலைமீட்டில் மியன்மார் ரோஹிங்ய முஸ்லிம்களை இலங்கைக்கு அழைத்து வந்து குடியேற்றுவதாகச் சில இணையத் தளங்கள் மற்றும் சமூக வலைத்தலங்களில் இனவாதக் கருத்துகள் வெளியிடப்படுவதாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ரோஹிங்ய முஸ்லிம்களை இலங்கைக்கு அழைத்து வருவது அல்லது அது குறித்து எந்தவொரு கருத்துகளையோ நிலைப்பாடு களையோ நான் தெரிவிக்கவில்லை.
சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம்கள் நல்லிணக்கத்துடன் வாழும் இந்த நாட்டில் இது போன்ற கருத்துகளைப் பரப்பி, என்னை இதனுடன் தொடர்புபடுத்தி, பிரச்சினைகளை ஏற்படுத்த முற்படும் சதிகாரர்களை நாட்டுக்கு அடையாளம் காட்டவேண்டும்.
இதனால் இது குறித்துக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு முறைப்பாடு செய்துள்ளேன் - என்றார். (5)

## இரவுவிடுதியில்வேலைக்கு அமர்த்தப்பட்ட சிறுமி மீட்பு

கொழும்பு, தும்முள்ளப் பகுதியில் இரவு விடுதியொன்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த சிறுமியை வெலிக்கடைப் பொலிஸார் தேடிப்பிடித்துள்ளனர்.
நிர்வாண நடனமாடுவதற்காகவே சிறுமி கொண்டு வரப்பட்டுள்ளார் என்று பொலிஸார்மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.
18 வயதுடைய இளம்பெண் ஒருவர், தனது நண்பியின் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அழைத்துச் செல்கிறார் எனக் கூறியே குறித்த சிறுமியைக் கடந்த 16 ஆம் திகதி கொழும்புக்கு அழைத்து வந்துள்ளார்.
நாள்கள் கடந்தும் அவர் வீடு திரும்பாததால் சிறுமியின் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.
வெலிக்கடைப் பொலிஸார் முன்னெடுத்த தேடுதலின் போது சிறுமி வெலிக்கடைப் பகுதியில் இரவு நேர உணவு விடுதியொன்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.
சிறுமியை ஏமாற்றி இரவு விடுதிக்கு அழைத்துச் சென்ற 18 வயது இளம்பெண்ணை இவர்கள் இருவரையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றி வெலிக்கடை உணவு விடுதிக்கு அழைத்து வந்த நபரையும்தேடிப்பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (5)

## ஒரு கிலோ கிராம் தங்கத்துடன் கைது

ஒருதொகை சட்டவிரோத தங்கத்தைக் கடத்த முற்பட்டவர் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சுமார் ஒரு கிலோ கிராம் நிறையுடைய தங்கத்தை இந்தியாவின் கோயம்புத்தூருக்குக் கடத்த முற்பட்டதாக, வானூர்தி நிலைய ஆயப் (சுங்கப்) பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.
இந்தத் தங்கத்தின் பெறுமதி 45 லட்சத்துக்கும் அதிகம் என்று அவர்கள் கூறியுள்ளனர்.
சந்தேகநபர் 45 வயது டைய பொரளை பகுதியைச் சேர்ந்த ஒருவராவார். (5)

# 19ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்தது பிழை என்று இப்போது உணர்கின்றோம்

## மகிந்த அணி உறுப்பினரின் ஆதங்கம் இது

கொழும்பு, செப். 26
மகிந்த ராஜபக்ச மூன்றாவது தடவையும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு இந்த அரசால் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவளித்தன் மூலம் நாம் மகிந்தவுக்கு எதிராக மிகப் பெரிய பிழையைச் செய்துவிட்டோம். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக வகும்புர தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மக்களின் ஜனநாயக உரிமையைப் பெற்றுக் கொடுப்பதற்காக உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு கோரி நாம் நீதிமன்றம் சென்றோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரச ஊழியர்கள் போட்டியிட வேண்டுமென்றால் ஒரு வருடத்துக்கு முன்தொழிலில் இருந்து விலகி இருக்க வேண்டும் என்றொரு சட்டத்தை அரசு கொண்டு வந்துள்ளது. இதனால் இந்தத் தடவை இடம்பெறும் தேர்தலில் அவர்களால் போட்டியிட முடியாது. இது அவர்களின் உரிமையை மீறும் செயலாகும்.
உள்ளூராட்சிச் சபையின் முன்னாள் உறுப்பினர்கள் 400பேர் இந்தத் தடவை போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான தொரு சட்டம் கொண்டுவரப்படும் என்று ஏற்கனவே கூறி இருந்தால் நாம் இதற்கு எதிராக நீதிமன்றம் சென்றிருப்போம். இப்போது சட்டவரைவு நிறைவேற்றப்பட்டுள்ளதால் நீதிமன்றம் செல்ல முடியாது.
தொகுதிவாரி முறையின் கீழ் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தக்கூடிய வகையில் புதிய தேர்தல் முறைமையைக் கொண்டு வருவதாக அரச தலைவர் எமக்கு வாக்களித்தன் காரணத்தாலேயே நாம் 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு வாக்களித்தோம். 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் புதிய தேர்தல் முறைமையின் கீழ்த்தான் நடத்தப்படும் என்று அவர் கூறினார். ஆனால், அந்த வாக்குறுதி இன்னும் நிறைவேற்றப்படவில்லை.
அனைத்துத் தேர்தல்களையும் இந்த அரசு ஒத்திப்போட்டுக் கொண்டே போகின்றது. ஆனால், எமது ஆட்சியில் அப்படி நடந்ததில்லை.
மகிந்த ராஜபக்ச மூன்றாவது முறையும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிட முடியாதவாறு இந்த அரசால் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அரசு எம்மை ஆதரவளிக்கச் செய்தது. அவ்வாறு நாம் ஆதரவளித்தமை எவ்வளவு பெரிய பிழை என்பதை இப்போது உணர்கிறோம். நாம் அதற்கு ஆதரவளிக்காமல் இருந்திருக்க வேண்டும் என்று இப்போது உணருகிறோம். நாம் மகிந்தவுக்குச் செய்த மிகப் பெரியபிழை - என்றார். (5,3)

## டெங்கு சோதிப்பதாக நடித்து கொள்ளையிட்ட நபருக்கு வலைவீச்சு


கொழும்பு, செப். 26
தெமட்டகொட பிரதேசத்திலுள்ள வீட்டில் டெங்கு நுளம்புகள் பற்றிய பரிசோதனையை நடத்தும் சாக்கில் நுழைந்த நபரொருவர் வீட்டிலிருந்த பெண்ணைக் கட்டிப்போட்டுவிட்டு அங்கிருந்த பணம், நகைகள், அலைபேசி ஆகியவற்றைச் சுருட்டிக்கொண்டு தப்பியோடியிருப்பதாகத் தெமட்டகொட பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுமுன்தினம் காலை 10.30 மணியளவில் வீட்டின் முன்கதவை இந்த நபர் தட்டியிருக்கிறார். வீட்டில் தனியாக இருந்த பெண் கதவைத் திறந்ததும் தான் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திலிருந்து வந்திருப்பதாகவும் வீட்டை டெங்கு நுளம்புகளுக்காகப் பரிசோதிக்கவேண்டுமெனவும் அதிகாரத் தோரணையில் கூறியிருக்கிறார்.
அவரை வீட்டுக்குள் நுழைய பெண் இடமளித்ததும், அவரைக் கட்டிப்போட்டுவிட்டு வாயில் பிளாஸ்டர் துண்டொன்றையும் ஒட்டிய நபர் வெகு சாவதானமாக அங்கிருந்த பணம், நகைகள், அலைபேசிகள் ஆகியவற்றைச் சுருட்டிக்கொண்டு வெளியேறியிருக்கிறார்.
இந்த நபரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்த தெமட்டகொட பொலிஸார் இவ்வாறு வரும் நபர்களிடம் அலுவலக அடையாள அட்டைகளைக் காட்டுமாறு வீட்டிலிருப்பவர்கள் கேட்கவேண்டியது அவசியமென அறிவுரை வழங்கியுள்ளனர். (5)

## மருத்துவக் கல்வியின் குறைந்தபட்ச தகைமை அரசால் நிர்ணயம்

வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவரும்

இலங்கையின் மருத்துவக் கல்விக்கான குறைந்தபட்ச தகைமையை அரசு இப்போது நிர்ணயம் செய்திருப்பதாகவும், இது தொடர்பில் இலங்கை மருத்துவ சபையுடன் கலந்தாலோசித்தபின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் இதை வெளியிடவுள்ளதாகவும் தெரியவருகின்றது.
வர்த்தமானி அறிவித்தலின் பின் இது நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இலங்கையில் மருத்துவக் கல்வியையும், பயிற்சியையும் வழங்கும் எந்தவொரு கல்வி நிறுவனமும் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்சத் தகைமைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.
அவ்வாறான மருத்துவப் பட்டம் இலங்கை மருத்துவச் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டும். இந்த நிபந்தனை உள்நாட்டைப்போலவேவெளிநாடுகளில் மருத்துவக் கல்வியை வழங்கும் கல்வி நிலையங்களுக்கும் விதிக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச தகைமைகளைப் பூர்த்தி செய்யாமல் வழங்கப்படும் எந்த வொரு மருத்துவப் பட்டத்தையும் இலங்கையில் மருத்துவத் தொழிலைச் செய்வதற்கோ, பதிவுசெய்வதற்கோ இலங்கை மருத்துவச் சபை ஏற்றுக்கொள்ளாது.
இலங்கை மருத்துவச்சபை மருத்துவப் பட்டத்தை மதிப்பீடு செய்வதற்கான மூவர் கொண்ட குழுவொன்றையும் நியமிக்கும். இந்தக் குழுவில் அரச பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீட உறுப்பினர் ஒருவரும் மருத்துவத்துறையின் நிபுணர் ஒருவரும் கட்டாயமாக இடம்பெறுவார்கள்.
இந்தக் குழுவின் இறுதி அங்கீகாரத்தின் பின்னரே எந்தவொரு மருத்துவப் பட்டமும் அங்கீகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5)


ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



வினாசித்தம்பி காசிலிங்கம்
(முன்னாள் பங்காளர் - No : 1 மதுபானசாலை)
திதி: பூர்வசஷ்டி (26.09.2017)
ஆண்டுகள் ஐந்து சென்றாலும் ஆறிடுமோ எம் துயர் அப்பா!
ஆண்டவன் அடியில் இருந்து எங்களை ஆசிர்வதியுங்கள் எம் ஆருயிர் அப்பா!
பிள்ளைகள், குடும்பத்தினர்.
'64/4' பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

2ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்
சின்னத்துரை இராசரட்ணம்
(ஓவசியர்)
அன்னை மடியில் 15.10.1934
இறைவனடியில் 19.09.2015
திதி: புரட்டாதி பூர்வ பக்க ஷஷ்டி
ஆண்டுகள் பல கடந்தாலும் எம்மை சிவபூதவராயர் பாதக் கமலத்தில் இருந்து வாழ வழி வைப்பீர்.
என்றும் நினைவில்...
கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

ஓம் விராட் விஸ்வ் பிரமனே நமஹ
எட்டாத உயரத்திற்குச் சென்ற எட்டாண்டுகள்



அமரர் கந்தசாமி தங்கராசா
(பத்தர்)
எங்களுக்காக 15.04.1949
இறைவனுக்காக 24.09.2009
திதி: 26.09.2017 பூர்வபக்க ஷஷ்டி
அப்பா நீங்கள் எங்களுக்கு கிடைத்த அரும் பெரும் பொக்கிஷம் உங்களை தொலைத்து விட்டு இன்று வரை தேடுகின்றோம் அப்பா !
இல.601, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

# காற்றோடு கரைந்துபோன ரூபா 72 மில்லியன்

கொழும்பு, செப். 26
இயற்கை இடர்கள் பற்றி செயற்கைக்கோள்கள் மூலம் முன்கூட்டியே எச்சரிக்கை செய்வதற்காக இலங்கை வானிலை அவதான நிலையத்துக்கு வழங்கப்பட்டிருந்த 72 மில்லியன் ரூபா பெறுமதியான அதிநவீன உபகரணங்கள் கடந்த நான்கு வருடங்களாகப் பயன்படுத்தப்படவில்லை. அவை பயனற்றுப்போய் இறுதியில் கழற்றி ஒதுக்கப்பட்டிருப்பதாக அரச கணக்காய்வு நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு இந்த உபகரணங்கள் வானிலை அவதான நிலையத்துக்கு வழங்கப்பட்டன. அதற்கு முந்திய ஆண்டுகளில் நடைபெற்ற மோசமான இயற்கை இடர்களை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வதற்காகவே இந்த உபகரணங்கள் பொருத்தப்பட்டன.

2015ஆம் ஆண்டு வரை நான்கு வருடங்களாக அவை கவனிப்பாரற்றுக் கிடந்ததால் இப்போது பயனற்றுப்போய் கழற்றி ஒதுக்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இடர் முகாமைத்துவ நிலையத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்ததாவது:

2011ஆம் ஆண்டில் இந்த உபகரணங்கள் அனைத்தும் பூட்டி முடிக்கப்பட்ட பின்னரே அது முழுமையாக இயங்கவில்லைஎனக்கண்டு பிடிக்கப்பட்டது. முன்கூட்டியே ஆய்வொன்றை நடத்தாமல் திடுதிப்பென இந்த நிர்மாணம் நடந்திருக்கிறது. இந்தக் கட்டமைப்பின் நரம்புப் பகுதியெனக் கருதப்படும் கோபுரம் பாதுக்கை பிரதேசத்தில் அமைக்கப்பட்டது.

அங்கிருந்து எதிர்பார்க்கப்பட்ட சமிக்ஞைகள் (சிக்னல்கள்) சரியாகக் கிடைக்கவில்லை. எனவே, முழுக் கட்டமைப்பும் ஆரம்பம் முதலே இயங்காததால் அதைக் கழற்றி ஒதுக்க வேண்டிவந்தது - என்றார்.

அதேவேளை, 2011ஆம் ஆண்டு பாதுக்கையில் சமிக்ஞைக் கோபுரத்தை நிர்மாணிக்கக் காணியொன்றை வழங்கியிருந்த ரெலிகொம் நிறுவனம், தனது காணியைத் திருப்பித் தருமாறு கேட்டிருப்பதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான பிரதீப் கொடிப்பிலி தெரிவித்திருக்கிறார். (5)

# சிறிய ரக கார்களின் விலை ரூ.2லட்சத்தால் குறையலாம்

## நிதியமைச்சு ஆராய்கிறது

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சிறு கார்கள் மற்றும் மின் வலுவினால் இயங்கும் கார்களின் விலையைக் குறைக்க நிதி மற்றும் ஊடக அமைச்சு உத்தேசித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

மின் வலுக் கொண்ட கார்கள் மற்றும் 800 சீ.சீ என்ஞ்சின் வலுவைக் கொண்ட வாகனங்களுக்கே இவ்வாறு விலை குறைக்கப்படத் தீர்மானிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாதுகாப்பான ஒரு சுற்றுச் சூழலை உருவாக்கும் பன்னாட்டு நியமங்களுக்கு அமைவான திட்டத்தினை மையப்படுத்தி இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருதாவும் நம்பத்தகுந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை விடவும் அதிக வாகனங்களுக்கு இந்த சலுகை வழங்கத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்த போதும் நாளாந்தம் அதிகரித்துவரும் வாகன நெருக்கடியைக் கருத்திற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்டு சில வாகனங்களுக்கு மாத்திரமே இந்தச் சலுகை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு மாங்குளம் சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான திறப்புப் பண மீள்கேள்வி அறிவித்தல்

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மாங்குளம் சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான திறப்புப்பண கேள்விகள் 2017 ஐப்பசி 15ஆம் திகதி தொடக்கம் கீழ் குறிப்பிடப்படும் மாதாந்த குத்தகையின் அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கு ஏதுவாக கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 2017.09.26 – 2017.10.09 அலுவலக நாள்களில் பிற்பகல் 12.00வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 2017.10.09 பிற்பகல் 12.30 மணிவரை
கேள்விகள் திறந்து பரசீலிக்கப்படும் திகதி :- 2017.10.09 பிற்பகல் 01.00மணி

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை செயலாளர். புதுக்குடியிருப்பு பிரதேசசபை. புதுக்குடியிருப்புஎன்னும் முகவரிக்கு அரக்கு (சீல்) முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் 2017.10.09 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம். முல்லைத் தீவு என்ற முகவரிக்கு 2017.10.09 பிற்பகல் 12.30 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

01. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் வதிவிடச் சான்றிதழ் மற்றும் கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் நேரடியாக புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.
02. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக் கட்டணங்கள். மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி மேற் குறித்த காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். (விவரம் இணைக்கப்பட்டுள்ளது.)
03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது. எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
04. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்விகோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
05. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில் கேள்வி தாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
06. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும். எந்தவொரு கேள்வியையும் காரணம். காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையினது செயலாளருக்கு அதிகாரம் உண்டு.
07. வாடகை வருடாவருடம் சபையால் நிர்ணயிக்கப்படும் கால ஒழுங்கில் வாடகையின் அடிப் படையில் 10% அதிகரிக்கப்படும்.
08. கடையை வாடகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படவேண்டும். பிரதிநிதி எவரும் அவர் சார்பில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார். இருந்தும் அவரது வாரிசு நடத்த அனுமதிக்கப்படுவார். (உதாரணம் :- மகன்.மகள்)
09. சபை செயலாளரின் அனுமதியின்றி எதுவித புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ளமுடியாது.
10. நிராகரிக்கப்பட்ட கேள்விதாரரின் பிணைப்பணம் ஒப்பந்தம் பூர்த்தியான பின்னர் மீளளிக்கமுடியும்.
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வழங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத் தொகையையும் முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும்.
12. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புக்களுக்கு குத்தகைக்கு எடுத்தவரே பொறுப்புடையவராவார்.
13. குத்தகைக்கு பெற்ற கடைக்கான மின்சார செலவு குத்தகைக்கு பெற்றவரினாலேயே செலுத்தப்படவேண்டும்.
14. வாடகைப்பணம் மாதாந்தம் இறுதி வேலை நாளுக்கு முன்னர் தாங்களாகவே செலுத்தப்படவேண்டும். தவறின் 10% தண்டமும் சேர்த்து அறவிடப்படும் என்பதுடன் வாடகைப் பணம் இரு மாதங்கள் தொடர்ந்து கட்டத்தவறின் முன்னறிவித்தலின்றி வாடகை ஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாககருதப்படும்.
15. சபையின் செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எவ்வித முடிவையும் ஏற்கவேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ / செயலாளருக்கு எதிராகவோ நீதிமன்றம் மூலம் நடவ டிக்கை எடுக்க முற்படலாகாது.
16. கேள்வி சம்பந்தமாக மேலதிக விவரங்களை / தகவல்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கடை இலக்கம். | மாதாந்த வாடகை (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக்கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம். | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை. |
|---|---|---|---|---|---|
| 03 | U.F - 03 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |
| 04 | U.F – 05 | 2,000.00 | 1,000.00 | 11,000.00 | 108,000.00 |

திரு.ந.ஜெயராஜா
செயலாளர்,
பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.
2017.09.25

ஆசிரியர் **வே.அன்பழகன்** அவர்களின்

## தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2018 வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணத்தில்:
**அன்பொளி கல்வியகம்,**
யாழ்.இந்துக் கல்லூரி வீதி.
யாழ்ப்பாணம்.

சாவகச்சேரியில்:
**அன்பொளி கல்வி நிலையம்,**
தபாற்கந்தோர் வீதி.
சாவகச்சேரி.

அனுமதிகளை 25.09.2017 திங்கட்கிழமையிலிருந்து 02.10.2017 திங்கட்கிழமை வரை பிற்பகல் 3.00 - 5.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்

குறிப்பு: பெற்றோர் கலந்துரையாடலுடன் வகுப்புக்கள் ஆரம்பிப்பது பற்றிய மேலதிக விவரங்கள் நேர அட்டவணை நேரில் வழங்கப்படும்.

"சின்ன விழி அசைத்துச் சிரித்து வரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வி மகிழ்வுடன் ஊட்டிடுவோம்"
இயக்குநர்கள்

## சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பக வளாகம்

**Kids Park Pre School & Day Care Campus**
**528, பலாலிவீதி, திருநெல்வேலி.**

**30.09.2017 விஜயதசமிப் பூசையும், ஏடு தொடக்குதலும், கலை விழாவும், புதிய மாணவர்கள் அனுமதியும்**

(2+ Play Group) (3+ Montessori) (4+ Pre School)




**சிறுவர்களுக்கே உகந்த மிகப் பாதுகாப்பான, மகிழ்ச்சிகரமான சூழலில் முன்பள்ளிக் கல்வி, காப்பக அனுபவத்துடன் கூடிய குடும்ப உறவும், வாழ்வும்**

**உலகத்தரம் வாய்ந்த பயில்வுகள் .....**
யோகாசனம். ஆன்மீகச் செல்நெறி. சுதந்திரமான கற்றல் வட்டக்களக் கற்கைகள். விளையாட்டு மூலம் செயல் வழிக் கல்வி. ஆடல். பாடல். ஓவியம். பொம்மலாட்டம். நாடகம். மணல் நீர் விளையாட்டுக்கள். ஆங்கில தகவல் தொழில்நுட்ப ஆற்றுகை பங்கேற்றுக் கற்றல். நூலக அனுபவம். களச் சுற்றுலாக்கள்..........

**களிமண் பிசைவிலிருந்து கணினிக் கற்கை வரை ஆசிரிய அம்மாக்களின் அர்ப்பணிப்பு - அரவணைப்பினூடாக முன்பள்ளிக் கல்வி**

**30.09.2017 காலை 8.30 மணிக்கு விஜயதசமி பூசை, கலைவிழா புதிய மாணவர்களுக்கான கற்றல் ஆரம்பமும், ஏடு தொடக்குதலும் கலாநிதி பா.தனபாலன்** அவர்களால் மேற்கொள்ளப்படும் உரியவர்கள் முற்பதிவு செய்து கொள்ளவும்.

கல்விப் பணியே கடவுள் பணி - Service to Education is Service to God

**கலாநிதி பா.தனபாலன் (நிபுணத்துவ ஆலோசகர்)**
- M.Phil in Pre School Education
- PhD - Pre School & Primary Education

**திருமதி கர்ணி தனபாலன் (பணிப்பாளர்)**
- Dip in Pre School Education ( Distinction)
- Dip in Guidance Counselling (1st Class)
- Cert.in Pre School Management.
- MSC in Pre School Curriculam & Management (Reding)

# தவறிழைத்தவர்களுக்கு தண்டனையிலிருந்து விதிவிலக்கில்லையாம்

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் கூறுகின்றார்

கொழும்பு, செப். 26

குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்ட படையினர் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டும் என்று பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன தெரிவித்துள்ளார்.



கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில், சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல்போகச் செய்யப்பட்டமை உள்ளிட்ட குற்றங்களுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று கூறியுள்ளார்.

ஆயுதப் படையினர் துன்புறுத்தப்படுவதில் இருந்து பாதுகாக்கப்படுவர் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன, எந்தவொரு சூழ்நிலையிலும் படையினர் தண்டிக்கப்படமாட்டார்கள் என்று அரச தலைவர் மைத்திரிபால கூறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

'குற்றங்களில் ஈடுபட்டவர்கள், உயர் நிலை அல்லது கீழ்நிலை அதிகாரியாக இருந்தாலும் சரி, சட்டத்தை எதிர்கொள்ள வேண்டும் என்றே அவர் கூறியிருக்கிறார். லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னெலிகொட வழக்குகள், சரியான முறையில், சட்ட ரீதியாக, இடம்பெறுகின்றன. தமது ஆணையை விட்டு விலகிச் செயற்பட்டிருப்பது நிரூபிக்கப்பட்டால், படையினருக்கு விலக்கு அளிக்கப்படாது.

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சுக்கொள்கை வகுக்கவுள்ளது. அது வேறுபட்ட செயல்முறையாக இருக்கும் - என்றார். (5)

# பொலிஸ் சேவையில் இணைய தமிழர்களுக்கு ஆர்வமில்லை

## தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

பொலிஸ் திணைக்களத்தில் சேர்ந்து கொள்வதில் தமிழர்கள் நாட்டம் காட்டுவதில்லை என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



பொலிஸ் சேவையில் உள்ள 7 ஆயிரம் வெற்றிடங்களில் 10 வீதத்துக்குத் தமிழர்களைச் சேர்த்துக் கொள்ள அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான நேர்முகத் தேர்வுக்கு 180 பேரே வந்திருந்தனர்.

பொலிஸ் வெற்றிடங்கள் அனைத்தும் வடக்கில் இருந்தே நிரப்பப்படுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களின் பின்னணியில் இருந்து இதனை ஆராய வேண்டும்.

இது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க, பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர ஆகியோருடன் கலந்துரையாடியிருக்கிறேன், என்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (5)

# உயிருடன் இருக்கும் மாமியாருக்கு சாவு அறிவித்தல் அச்சிட்ட மருமகன்

கொழும்பு, செப். 26

உயிருடன் இருக்கும் மாமியாருக்குச் சாவு அறிவித்தல் அச்சிட்டு ஒட்டிய மருமகன் தொடர்பில் தகவல் வெளியாகி உள்ளது.

பொலநறுவை மாவட்டத்தின் வெலிகந்த, ருவன்பிட்டிய பிரதேசத்தில் இந்தச் சம்பவம் பதிவாகி உள்ளது.

உயிருடன் இருக்கும் தனது மாமியார் உயிரிழந்து விட்டதாகச் சாவு அறிவித்தல் அச்சிட்டு மருமகன் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார். மாமியாரின் சாவு அறிவித்தலை, பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கத்தில் கொடுத்து 22 ஆயிரம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவரினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (5)

# ஜனவரியில் மாகாணசபைகள் தேர்தல்!

## ஆணைக்குழுவின் தலைவர் மகிந்தவின் எதிர்பார்ப்பு

கொழும்பு, செப். 26

எல்லை மீள்நிர்ணயப் பணிகள் மூன்று மாதங்களுக்குள் முடிவுறும் என்று நம்புகின்றேன். தேர்தலை ஜனவரியில் நடத்த முடியும். இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

முதலில் எல்லை மீள்நிர்ணயத்துக்கான ஆணைக்குழு நியமிக்கப்பட்டு, அது எல்லைகளை வரையறுக்கும் செயற்பாடுகளை நிறைவு செய்த பின்னர், மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.



எல்லைகளை வரையறுக்கும் செயற்பாடுகள் மூன்று மாதங்களுக்குள் நிறைவடையும் என்று நான் நம்புகிறேன். தேர்தலை ஜனவரியில் நடத்த முடியும்.

2018ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படும். இந்தப் பட்டியல், எதிர்வரும் 30 ஆம் திகதி வெளியிடப்படும் என்றார்.

இதேவேளை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் மார்ச் மாதம் மாகாணசபைகள் தேர்தலை நடத்தக் கூடியதாக இருக்கும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# மைத்திரியின் மகள் எழுதிய புத்தகத்தை ஆர்வமுடன் வாங்கிய நாமல்



கொழும்பு, செப். 26

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மகள் சத்துரிக்கா சிறிசேனவினால் எழுதப்பட்ட புத்தகம் வெளியிடப்பட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் வாழ்க்கையை உள்ளடக்கிய இந்தப் புத்தகம், 'அரச தலைவர் தந்தை' என்ற பெயரில் வெளியாகியது.

இந்த நிலையில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் ராஜபக்சவினால் இந்தப் புத்தகம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியின் போது அவர் இந்த புத்தகத்தைக் கொள்வனவு செய்யும் போது எடுக்கப்பட்ட ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. (5)

# பௌத்தர்களைப் பாதுகாக்க கூட்டு அரசு தவறிவிட்டது

## மகிந்தவின் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 26

இலங்கையில் பௌத்தர்களுக்குப் பல்வேறு கொடுமைகள் இழைக்கப்படுவதாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வெல்லவாய பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது மகிந்த ராஜபக்ச இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'நாடு இருண்ட யுகம் நோக்கி நகர்த்தப்பட்டு வருகின்றது. இந்த அரசு பௌத்த மதத்தவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவில்லை' என்றும் மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார். (5)

# கொழும்பு நகரில் நவீன மறைகாணி பொருத்தத் திட்டம்

கொழும்பு நகரில் தற்பொழுது பொருத்தப்பட்டுள்ள மறைகாணிகளுக்குப் (சிசிரிவி) பதிலாக அதிநவீன மறைகாணிகளைப் பொருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, வீதிப் பாதுகாப்புத் தேசிய சபையின் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்தார்.

சாரதிகள், பிரயாணிகள், மற்றும் வாகனங்களின் இலக்கத்தகடுகளைத் தெளிவான முறையில் அவதானிப்பதற்காகவே நவீன மறைகாணி பொருத்தப்படவுள்ளது- என்றார். (5)

# ரணிலிடமிருந்து மைத்திரிபால அதிகாரத்தைப் பிடுங்கவேண்டும்

## சு.கவின் பேச்சாளர் டிலான் பெரேரா தெரிவிப்பு

கொழும்பு, செப். 26

கொழும்பு மாவட்ட மக்களின் வாக்குகளை மாத்திரம் பெற்ற ரணில் விக்கிரமசிங்க விடம் இருந்து நாட்டை நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பிடுங்கி இனியாவது, முழு நாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்ற அரச தலைவர் மைத்திரி நாட்டை நிர்வகிக்க வேண்டும். இவ்வாறு இராஜாங்க அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்படுகின்றது. நாம் ஐக்கிய தேசியக் கட்சியை விமர்சிக்கும்போது ஏன் ஓர் அரசுக்குள் இருந்துகொண்டு எம்மை விமர்சிக்கின்றீர்கள் என்று அவர்கள் கேட்கின்றார்கள்.

ஆனால், உண்மையில் அவர்கள்தான் அவர்களை விமர்சித்துக் கொள்கின்றனர். சரத் பொன்சேகா, விஜயதாச ராஜபக்ச மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோரை நாம் விமர்சிக்கவில்லை. அவர்களே அவர்களை விமர்சித்துக் கொள்கின்றனர். இதனால் அவர்கள் தான் கூட்டு ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்கின்றனர்.

கூட்டு அரசின் தலைமைத்துவத்தை மக்கள் மைத்திரிக்கே வழங்கியுள்ளனர். ரணிலுக்கு அல்ல. அதனால்தான் கொழும்பு மாவட்ட மக்களின் வாக்குகளை மாத்திரம் பெற்ற ரணில் விக்ரமசிங்கவிடம் நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைக்காமல் முழு நாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்ற அரச தலைவர் மைத்திரியே நாட்டை நிர்வகிக்க வேண்டும் என்று நாம் அடிக்கடி கூறி வருகின்றோம்.

கடந்த மாதம் அரச தலைவர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார்.

ரவி கருணாநாயக்கவின் அமைச்சை மாற்றி அவர் பதவி விலகும்வரை சில அதிரடியான முடிவுகளை எடுத்தார். இவ்வாறு அரச தலைவர் தொடர்ந்து செயற்பட வேண்டும். இனியாவது ரணிலைத் தவிர்த்து அவரே நாட்டை ஆட்சி செய்ய வேண்டும். அவருக்கு மக்கள் வழங்கிய ஆணையை அவர் பயன்படுத்த வேண்டும்.

மைத்திரிபாலவின் பரந்த மனப்பான்மை காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தலைமை அமைச்சர் பதவி கிடைத்துள்ளது என்பதை அந்தக் கட்சி உறுப்பினர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும். மைத்திரியின் நெகிழ்வுத்தன்மையை இவர்கள் பிழையாகப் பயன் படுத் தக்கூடாது - என்றார். (5,3)



## வடகொரியாவுக்கு எண்ணெய் வழங்க சீனா பின்வாங்கல்

பியாங்யாங், செப். 26
வடகொரியாவுக்கு கச்சாய் எண்ணெய் ஏற்றுமதி செய்வதைக் குறைத்துள்ளது சீனா.
ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலகநாடுகளின் தடையை மீறி வடகொரியா தொடர்ந்து அணுவாயுதச் சோதனைகளை நடத்தி வருகிறது.
இதனால் அந்த நாட்டின் மீது ஐநா பாதுகாப்புச் சபை அடுத்தடுத்து பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. வடகொரியாவுக்கு கச்சாய் எண்ணெய் ஏற்றுமதி செய்வதை சீனா நிறுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதைச் சீனா ஏற்றுக்கொண்டுள்ளது.
இதையடுத்து அடுத்த 3 மாதங்களில் சுமார் 5 லட்சம் பெரல் கச்சா எண்ணெயை வடகொரியாவுக்கு வழங்குவதை தவிர்க்கவுள்ளது சீனா. (ம)

## அமெரிக்காவின் வான் தாக்குதலில் ஐ.எஸ். ஆயுததாரிகள் உயிரிழப்பு

திரிபோலி, செப். 26
லிபியாவில் அமெரிக்கா நடத்திய வான்வெளித் தாக்குதலில் 17 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஈராக், சிரியாவை அடுத்து ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் ஆதிக்கம் நிறைந்த பகுதியாக லிபியா உள்ளது. அந்த நாட்டின் பல இடங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்த நிலையில் அமெரிக்கா நேற்றுமுன்தினம் நடத்திய வான் தாக்குதலில் சுமார் 17 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# ஜேர்மனி அதிபராக மீண்டும் மெர்க்கல்



பெர்லின், செப். 26
ஜேர்மனியின் அதிபர் தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்று நான்காவது தடவையாக அதிபராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் ஏஞ்சலா மெர்க்கல்.
ஜேர்மனியின் 19ஆவது அதிபர் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கடந்த 2013ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் கட்சியின் சார்பில் போட்டியிட்ட மெர்க்கல் வெற்றிபெற்றார்.
அவரின் பதவிக்காலம் விரைவில் முடிவடையவுள்ள நிலையில், 19ஆவது அதிபர் தேர்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. கிறிஸ்தவ ஜனநாயக யூனியன் சார்பில் ஏஞ்சலா மெர்கலும், சமூக ஜனநாயக கட்சி சார்பில் மார்டின் ஷுல்ஸ்சும் போட்டியிட்டனர். இவர்களை விட மேலும் ஐந்து பேரும் போட்டியிட்டனர். மெர்கல் 33.2 சதவீதம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.
20.8 வாக்குகளைப் பெற்ற மார்டின் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.
அகதிகளை அளவுக்கு அதிகமாக ஆதரிக்கும் விடயத்தில் மெர்க்கல் மீது எதிர்ப்பலை உள்ளது. இதனால் நடப்பு வருடத் தேர்தலில் அவர் தோல்வியடைய வாய்ப்புள்ளது என்று கருதப்பட்டது. எனினும் அவர் வெற்றிபெற்றுள்ளார். மெர்க்கலின் இந்த வெற்றியின் மூலம் ஜேர்மனி அகதிகளைத் தொடர்ந்தும் ஆதரிக்கும் என்று கருதப்படுகிறது. (ம)




## ‘ஜெ’ மறைவு தொடர்பில் விசாரணை நடத்த குழு
### தமிழக அரசு நேற்று அதிரடி

சென்னை, செப். 26
தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவு தொடர்பில் விசாரணை நடத்த தனிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் வீடு திரும்பாமல் அங்கேயே உயிரிழந்தார். அவரது சாவு தொடர்பில் தற்போது ஒன்றன் பின் ஒன்றாக பல்வேறு கருத்துக்கள் வெளிவந்து கொண்டுள்ளன.
இந்த நிலையில் ஜெயலலிதாவின் சாவு தொடர்பில் விசாரணை நடத்த தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்றநீதிபதி ஆறுமுகசாமியின் தலைமையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது. (ம)

ஓய்வுபெற்ற நீதிபதி ஆறுமுக சாமியின் தலைமை யில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது





மியன்மரர் அரசின் இனச் சு
சென்று அங்கு தஞ்சமடைந்
சென்றுள்ளனர் என்று தெ
வழங்கப்படுவதை காட்டும்
றார்கள் என்பதைத் துல்லிய

## உலகின் அதிக
## எடை கொண்ட பெ

துபாய், செப். 26
உடல் எடை குறைப்புக்காக இந்தி
பெற்றுச் சென்ற உலகின் மிக அ
கொண்ட எகிப்துப் பெண் அபுதாபி
ரிழந்தார்.
எகிப்து நாட்டை சேர்ந்த எம்மா
பெண் சுமார் 500 கிலோ உடல்
கின் மிகவும் அதிகமான எடை
ணாக அறியப்பட்டார். உடல் எடை
இந்தியாவின் மும்பை நகரில் அ
சிகிச்சைகள் அளிக்கப்பட்டதையடு
வாக எடை குறைந்த எம்மா, மே
அபுதாபியில் உள்ள புர்ஜீல் மருத்
கடந்த மே மாதம் சேர்க்கப்பட்டார்.
மருத்துவர்களின் கண்காணிப்பில்
காலமாக அங்கு சிகிச்சை பெற்று
நீரகக் கோளாறால் நேற்று உயி
அறிவிக்கப்பட்டுள்ளது.



# ஜெயலலிதா விடயத்தில் பொய்கூறச் சொன்னது
# அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசனிடம் ஜெ.தீபா

சென்னை, செப். 26
“ஜெயலலிதா இட்லியும் சாப்பிடவில்லை, சட்னியும் சாப்பிடவில்லை. நாங்கள் சொன்னது எல்லாம் பொய். பொதுமக்கள் எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள்” தமிழக அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் தெரிவித்திருந்த நிலையில் இந்தப் பொய்யைச் சொல்லச் சொன்னது யார் என்று நேற்றுக் கேள்வி எழுப்பியுள்ளார் ஜெ.தீபா.
ஜெயலலிதாவின் சாவு தொடர்பாக அமைச்சர்கள் காலம் கடந்து பல கருத்துக்களைக் கூறி வருகிறார்கள். அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் ஜெயலலிதா உடல்நிலை குறித்து பொய் சொன்னதாக கூறி இருக்கிறார். அந்த பொய்யைச் சொல்ல சொன்னது யார்? என்பது பற்றி முழு உண்மைகளையும் வெளியிட வேண்டும்.



“
ஜெயலலிதா இட்லியும் சாப்பிடவில்லை, ச
சாப்பிடவில்லை. நாங்கள் சொன்னது எல்
பொதுமக்கள் எங்களை மன்னித்துக் கொ

ஜெயலலிதாவின் மறைவைப் பொறுத்த வரை சசிகலா குடும்பத்தினர் மீது நானும் பல குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறேன். அவர்களிடம் ஆதாரங்கள் இருந்தால் அச்ச

மின்றி துணிந்து
ஒளிப்படக் கா
இருந்திருந்தால்
முன்கூட்டியே
லாமே. அவர்க
வெளியிட்டாலும்
லும் நான் வழக்
என தீபா மேலும்



ன இனச் சுத்திகரிப்பில் இருந்து தப்பித்து லட்சக் கணக்கான ரொஹிங்யர்கள் பங்களா‘தேஷுக்குச் சமடைந்துள்ளனர். இதுவரை சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரொஹிங்யர்கள் பங்களா’தேஷுக்குச் ன்று தெரியவருகிறது. பங்களாதேஷ் அகதிகள் முகாமில் ரொஹிங்யர்களுக்கு உணவு காட்டும் இந்த ஒளிப்படம் எத்தகைய உணவுத் தட்டுப்பாட்டை ரொஹிங்யர்கள் எதி.’கொள்கி த் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கிறது. (ம)

# ட்ரம்பும் கிம்மும் குழந்தைகளா?

## ரஷ்ய அமைச்சர் காட்டம்



வொஷிங்டன், செப். 26
அமெரிக்க அதிபர் ட்ரம்ப், வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் இருவரும் குழந்தைகள் போல் சண்டையிடுகின்றனர் என்று ரஷ்ய அயலுறவுத்துறை அமைச்சர் செர்கெய், மிகக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

வடகொரியாவின் அத்துமீறிய ஏவுகணைச் சோதனைகளை அடுத்து அந்த நாட்டின் மீது மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்தத் தடைகள் விதிக்கப்படுவதற்கு மிக முக்கிய காரணமாக அமெரிக்காவே இருந்தது. இதனால் அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையில் மிகக் கடுமையான வார்த்தை மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

“வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், மனநலம் பாதிக்கப்பட்டவர். அவர் தனது செயற்பாடுகள் மூலம் தன்நாட்டு மக்களையே பட்டினிபோட்டுக் கொன்று விடுவார். இது தான் அந்த நாட்டில் நடக்கபோகிறது. முன் எப்போதும் போல் இல்லாத அளவிற்கு அவரைச் சோதிப்போம்'' என ட்ரம்ப் அண்மையில் தனது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

“ட்ரம்ப் வார்த்தைகளை பயன்படுத்துவதற்கு முன்னர் நன்கு யோசித்து பார்க்க வேண்டும். தேர்தல் பரப்புரையில் பேசும் அரசியல்வாதி போல பேசக் கூடாது. ஒரு நாட்டை ஆளும் தகுதி அவருக்குக் கிடையாது அரசியல்வாதி என்பதை விட ரவுடி போல்தான் அவர் செயல்படுகிறார். ட்ரம்ப் என்ன எதிர்பார்க்கிறாரோ அதற்கான பலன்களை அவரே அனுபவிப்பார். நான் நிச்சயமாகச் சொல்வேன் அவருக்கு மனநலம் சரியில்லை'' என்று வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன் பதிலடி கொடுத்தார்.

> வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகள் ஏற்றுக்கொள்ள முடியாதது தான். அதே நேரத்தில் கொரியத் தீபகற்பத்தில் போரைக் கட்டவிழ்த்து விடுவோம் என அமெரிக்கா கூறுவதும் ஏற்க இயலாததுதான்.

ட்ரம்ப், கிம் ஜோங் உன் இருவருமே குழந்தைகள் போலச் செயற்படுகிறார்கள் என்று பதிலடி கொடுத்துள்ளார் ரஷ்ய அயலுறவுத்துறை அமைச்சர்.

“ட்ரம்பும், கிம் ஜோங் உன்னும் மழலையர் வகுப்பில் படிக்கிற சிறிய குழந்தைகள்போல சண்டை போட்டுக்கொள்கின்றனர். இருவரும் அதை நிறுத்திக்கொள்ள வேண்டும். வடகொரியாவின் அணு ஆயுத சோதனைகள் ஏற்றுக்கொள்ள முடியாததுதான். அதே நேரத்தில் கொரியத் தீபகற்பத்தில் போரைக் கட்டவிழ்த்து விடுவோம் என அமெரிக்கா கூறுவதும் ஏற்க இயலாததுதான்" என செர்கெய் மேலும் தெரிவித்தார். (ம)

# ட்ரம்பின் தடையில் இணைந்தன வடகொரியா வெனிசுலா

வொஷிங்டன், செப். 26
அமெரிக்க அதிபர் ட்ரம்பின் பயணத் தடையில் புதிதாக வடகொரியா மற்றும் வெனிசுலா ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஆறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளார் டொனால்ட் ட்ரம்ப். இந்தப் பட்டியலில் தற்போது புதிதாக மூன்று நாடுகளை அவர் இணைத்துள்ளார். இதன்படி வடகொரியா, வெனிசுலா, சாத் ஆகிய நாடுகள் அவ்வாறு புதிதாக இணைக்கப்பட்டுள்ளன.

வடகொரியாவின் பன்னாட்டு விதிகளை மீறிய ஏவுகணைச் சோதனைகள் காரணமாக அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் இடையே போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இரண்டு நாட்டு அதிபர்களும் ஒருவர் மீது மற்றொருவர் காரசாரமான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். இந்த நிலையில் வடகொரியாவைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய ட்ரம்ப் தடை விதித்துள்ளார்.

வெனிசுலா அதிபர் மதுரோவைப் பதிவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி அங்கு இளைஞர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆர்ப்பாட்டங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் சுமார் 150 பேர் உயிரிழந்ததை அடுத்து இந்த விவகாரத்தில் அமெரிக்கா தலையிட்டது. இந்தப் பின்னணியில் வெனிசுலாவைச் சேர்ந்தவர்களும் அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதித்துள்ளார் ட்ரம்ப். (ம)

# கீழடியில் ஆய்வு வேண்டும்

## ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை, செப். 26
தமிழகத்தின் கீழடி என்னும் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நகரம் தமிழர்களின் நகரமே என்பது உறுதிப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அங்கு நடைபெற்று வந்த ஆய்வுகள் நிறுத்தப்பட்டுள்ளமையைக் கண்டித்த தமிழக சட்டசபையின் எதிர்கட்சித் தலைவர் ஸ்டாலின் ஆய்வுகள் தொடர்ந்தும் நடைபெற வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

“தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் தொடர்பான மிக முக்கியமான அகழ்வாராய்ச்சியில் மத்திய மாநிலஅரசுகள்கைகோத்து அந்தப் பணிகளுக்குத் தடை ஏற்படுத்த எப்படியெல்லாம் முற்படுகின்றன என்பது தெளிவாகத் தெரிகிறது. கீழடி, தமிழர்களின் நகரம் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் அது தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)



அதிகமான
ாட பெண் சாவு

காக இந்தியாவில் சிகிச்சை
ன் மிக அதிகமான எடை
அபுதாபியில் நேற்று உயி

எம்மா என்ற 37 வயது
ா உடல் எடையுடன் உல
ன எடை கொண்ட பெண்
டல் எடை குறைப்புக்காக
நகரில் அவருக்கு சிறப்புச்
டதையடுத்து, 323 கிலோ
ம்மா, மேல்சிகிச்சைக்காக
ஜீல் மருத்துவமனையில்
கப்பட்டார். சுமார் 20 சிறப்பு
ணிப்பில் கடந்த ஐந்துமாத
பெற்றுவந்த எம்மா, சிறு
ற்று உயிரிழந்தார் என்று
(ம)



னது யார்?
பா கேள்வி

ில்லை, சட்னியும்
னது எல்லாம் பொய்.
துக் கொள்ளுங்கள்.

துணிந்து வெளியிடட்டும்.
டக் காணொலி ஆதாரங்கள்
ிருந்தால் டி.டி.வி. தினகரன்
ட்டியே வெளியிட்டிருக்க
அவர்கள் ஆதாரங்களை
பிட்டாலும் வெளியிடாவிட்டா
ன் வழக்குத் தொடர்வது உறுதி
மேலும் தெரிவித்தார். (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# சம்பந்தர் சொல்வது சாத்தியமாவது எப்படி?

புதிய அரசமைப்புத் தொடர்பானவழிகாட்டல்குழுவின் இடைக்கால அறிக்கைக்குத் தமிழர்களின் தரப்பில் இருந்தும் கடுமையான விமர்சனங்கள் வெளிப்படுத்தப்படும் நிலையில், வடக்கு கிழக்கு இணைக்கப்பட்ட கூட்டாட்சி (சமஷ்டி) கோட்பாட்டுக்கு இணங்க அதியுச்ச அளவில் அதிகாரங்கள் பகிரப்பட்ட தீர்வையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளும், அதில் கூட்டமைப்பு உறுதியாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.

அவர் அந்த நிலைப்பாட்டிலேயே தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் விருப்பமும்கூட. தொடர்ந்து வந்திருக்கக்கூடிய எந்தவொரு தேர்தலிலும் இந்தக் கோட்பாட்டை ஆதரித்தே தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து வந்துள்ளார்கள். கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கைகளிலும் ஒவ்வொரு தடவையும் மறக்காமல் இதனைத் தெளிவாக வலியுறுத்தி வந்துள்ளது.

வடக்குக் கிழக்குத் தமிழர் தாயகத்தில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து அதிகூடிய அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பதைத்தான் திம்புக் கோட்பாடு முதல்கொண்டு தமிழ்த்தலைமைத்துவங்கள் வலியுறுத்திவருகின்றன.

ஆனால், இந்த இடைக்கால அறிக்கையில் அந்த இலக்கை அடைவதற்கான சாத்தியங்கள் தெரியவில்லை. ஒரு சில முற்போக்கான விடயங்கள் அறிக்கையில் இருப்பதை மறுக்க முடியாது. அதேநேரத்தில் அது ஒரு கூட்ட அறிக்கை (Meeting minute) மட்டும்தானே தவிர, இணக்கம் காணப்பட்ட அறிக்கையல்ல என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

அதற்கிடையில் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசமைப்பு உருவாக்கத்தில் முக்கிய பங்கை ஆற்றியவருமான எம்.ஏ.சுமந்திரன் கூறும் ஒரு கருத்தையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை எல்லாம் 9 மாதங்களுக்கு முன்னர் அனைத்துத் தரப்புகளாலும் இணங்கிக்கொள்ளப்பட்டவை, அதன் பின்னர் இப்போது அதிலிருந்து கட்சிகள் நழுவப் பார்ப்பது கவலைக்குரியது என்று அவர் தெரிவித்திருக்கிறார். அதுவும் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

வடக்குகிழக்கு இணைப்புக்கு ஆதரவாக இடைக்கால அறிக்கையில் எதுவும் இல்லை. கூட்டமைப்பைத்தவிர அனேகமாக எல்லாக் கட்சிகளுமே அதனை எதிர்க்கின்றன என்று அவற்றின் பின்னிணைப்பு அறிக்கைகள் தெளிவாகக் கூறுகின்றன. அதேபோன்று அதிகூடிய அதிகாரப் பகிர்வு என்பதற்கும் இடைக்கால அறிக்கையில் தெளிவான ஆதரவு இல்லை.

அத்தகைய ஒரு தெளிவற்ற இடைக்கால அறிக்கைக்கே கட்சிகள் மத்தியில் ஆதரவில்லை என்னும்போது, வடக்கு கிழக்கு இணைந்த, கூட்டாட்சிப் பண்பை ஒத்த அதிகூடிய அதிகாரப் பகிர்வை இந்தப் புதிய அரசமைப்புக்கு ஊடாக எப்படிச் சாத்தியமாக்கப் போகிறார் சம்பந்தர் என்பது தெளிவாகவில்லை. மந்திரத்தால் மாங்காய் விழவைக்கப் போகின்றேன் என்று கூறுபவர் இல்லை சம்பந்தர் என்றாலும், ஒன்றுக்கு ஒன்று முரணாகக் காணப்படும் விடயங்களை எப்படிச் சாத்தியமாக்கப் போகிறார் அவர் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை அவருக்கும் கட்சிக்கும் இருக்கிறது. அதை அவர் செய்யாவிட்டால் அது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் மத்தியிலும், தமிழ் மக்கள் மத்தியிலும் கூடக் குழப்பத்தை ஏற்படுத்திவிடும்.

தந்தை செல்வாவுக்கு முற்பட்ட காலம் முதலே அதிகாரப் பகிர்வுக்காகத் தமிழர்கள் தொடர்ந்து போராடித்தான் வருகிறார்கள். ஆனால் கிடைக்கவில்லை. இப்போது உள்ள இடைக்கால அறிக்கையிலும் தமிழர்களின் விருப்புகளைப் பூர்த்திசெய்துவிடக்கூடிய அனைத்தும் இருப்பதாகச் சொல்லிவிட முடியாது. அப்படியிருக்கும்போது வடக்கு கிழக்கு இணைந்த மாகாணத்துக்கு அதிகூடிய அதிகாரப் பகிர்வு என்பதை எப்படிச் சாத்தியமாக்குவது என்று மக்களுக்குத் தெளிவுபடுத்துவதன் மூலமே அவர்களது ஆதரவை இந்த விடயத்தில் கூட்டமைப்பால் திரட்டக்கூடியதாக இருக்கும்.



"எமது மண்ணின் விடுதலைக்காக யார் போராடுகிறார்களோ அவர்களே இந்த மண்ணின் மைந்தர்கள். எமது உரிமைகளை நாமே வென்றெடுக்கவேண்டும். இதற்கு வேறு எவருடைய தயவையும் எதிர்பார்க்கக்கூடாது. நான் ஆத்மரீதியாக உணர்கிறேன். இன்றில்லாவிட்டாலும் என்றோ ஒரு நாள் எனது மக்கள் நிச்சயமாக விடுதலையடைவர்."
– திலீபன்

# விடுதலையின் உறுதி பார்த்தீபம்

■ அன்புமாறன்

அழகான மழையுதிர்காலம் கார்த்திகை மாதம். அழகான, உவமான உவமேயங்கள் அற்ற தியாகக் கோலம் பார்த்தீபன் முகம். எங்கும் மஞ்சள் சிவப்பாய் அன்பின் வண்ணங்களைச் சூடியபடி காந்தள் மலர்களின் ஒத்திகை. நீள் துயில்வின் விழிப்பாய் சுடர்விடும் ஒளியின் மிளிர்கை. தென்றலோடு ஆர்ப்பரிக்கும் பாக்களின் இடைவிடாத இசையின் அளிக்கை. நெஞ்சங்கள் படபடக்க ஆன்மாங்கள் எழுந்தருளும் கோலமாய் ஒப்பில்லாத கண்ணீர் மழையின் பொழிகை. தேசம் எங்குமாய் உறவுகளின் கூடுகை. இத்தனையும் விடுதலையின் வரலாற்றுப் படிகளாய் எம்மோடு. எம்மூடு பயணப்படுகின்றன. வீர தீரங்களாய், பசித் தீயின் சுடராய் அழிவுகளை சுட்டெரித்த தீயிடலாய் தியாக தீபம் எப்போதுமாய் பொருள் கூறப் பட்டுக் கொண்டேயிருக்கிறது.

சுதந்திரம் இன்றி வளர்ச்சி இல்லை. என்னைச் சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தபோதும், முயற்சி செய்யுங்கள்..! பயப்படாதீர்கள்! பணத்தால் பயன் இல்லை. ஒழுக்கம் ஒன்றுதான் துளைக்க முடியாத சுவர்களையெல்லாம் துளைத்து எம்மை முன்னேறச் செய்கிறது. சுதந்திரம் இல்லாமல் எந்த வளர்ச்சியும் அடைய முடியாது.

தமிழ்ச் சமூக விடுதலையின் இலக்கண உச்சமாக. சிந்தனையின் எச்சமாக உயர்வுபெற்றிருக்கின்றது.

### தியாகத்தின் தரு

இதனிடையாய் காலங்கள் கரைந்து கொள்கிறது. நீண்ட வழித்தடங்களின் போக்கினை ஞாபகங்களின் உள்ளாய் நிஜத்தின் வெளியாய் திரையிட்டுச் செல்கிறது. அந்தவகையிலே தமிழினத்தின் உரிமை விடியல் என்ற உன்னத இலக்கின் அடைதலுக்கான உறுதியின் பற்றுதல் நகர்வுகள், என்றும் மறந்து போகவோ மரித்துப்போகவோ முடியாதவை. கலை, கலாசாரம், ஒழுக்க விழுமியங்கள், தனித்துவமான தமிழ்த்தாய் மொழியின் சிறப்பு, பொருண்மிய மேம்பாட்டின் குறிகாட்டிகள், நீதி செய்தலின் காப்பகங்கள், காவல் பணியின் தீட்சிதங்கள் இவை அத்தனையையும் கடந்துமாய் தாய் மண் பற்றுறுதியின் மையமாய் காத்து, இரட்சித்து நின்ற முப்படைகளின் பரிமாணம். அதன் மொத்த உருவமாய் வானுயர்ந்து நின்ற கரிகாலத் தம்பி என்ற தலைமகனின் திருவுருவம். அவனோடு அசைந்த திலீபம் எனும் தியாகத்தின் தரு என்றென்றும் விழித்திரையகன்று போகாதவை. எதிரியின் விழி பிதுங்க தலைசாய்ந்திடாத செயலுருவானவை....!

### செயலூட்டமற்ற வறட்சி

இந்த சந்தர்ப்பத்திலே போர் முடிவுற்றதன் பின்பான ஆறாண்டு ஒழிவினுள் அரசு என்று வரையறை கொள்ளப்படுகின்ற பொறிமுறைகள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமிழர்களுக்கான தீர்வினை நாட முன்வரவில்லை. மூன்று தசாப்தகாலங்கள் சுமந்திருந்த மாட்சிமை பொருந்திய வேட்கை என்பது சிறைப்பட்டிருக்கின்றது.

இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நியாயம் வழங்கப்படவில்லை. வெறுமனே காலத்துக்குக் காலம், ஆட்சியில் அமர்ந்து கொள்ளுகின்ற பெரும்பான்மையினத்தின் முகமாற்றங்களின் சுழற்சிஎன்பது செயலூட்டமற்றவறட்சியாகதமிழ் மக்களோடுதொடர்புறுகிறது.

இலங்கைத் திருநாட்டின் வடக்காயும் கிழக்காயும் பூர்வீகம் கொண்டுள்ள ஓர் தனித்துவ இனமான தமிழ்க்குடிகளுக்குநல்விடியலின் மொழிவுதரல் என்பது வேறுபட்ட திசை காட்டிகளை நம்பியிருக்கிறது. அவை அகிம்சை, ஆயுதம் என்ற பரிணாமங்கள் தாண்டி தற்போது வாக்குரிமையின் நடைமுறைத் தொனிப்பாக ஜனநாயகப் பண்பின் வேகமற்ற தொனிப்பாக அசைந்திருக்கிறது. அமைந்திருக்கிறது. இந்த அசைவுகளுக்கு உற்சாகமான திட்டமிடலும் செயல் முனைவான கூட்டிணைவும் தேவைப்படுகின்றது.

விறுவிறுப்பான வார்த்தைகள் களைந்த, சுறுசுறுப்பான இலக்கு நிர்ணயப் பாய்ச்சலின் இடைவிலகலற்ற பங்காற்றல் வேண்டப்படுகிறது. உரிமை என்ற உயர்வினை அடைய வேண்டுமெனில் நடந்து வந்த பாதைகளின் மீள்பார்வையும் அவற்றின் உள்ளாய் கருத்துக்களை எடுத்தியம்புகின்ற பக்கங்களின் வாசிப்பினையும் மிகைப் படுத்திக்கொள்ள வேண்டும்…!

### சிந்தித்துச் செயலாற்றுங்கள்

ஆக, ஒரு புரட்சியின் வித்தகமான தானைத் தமிழனின் நாமங்களும், மீளாத நினைவும், அவன் ஆயுளின் அதிகப்படுத்தலும் உச்சரிக்கப்பட்டும்ஞாபகம்கொள்ளப்பட்டும் விட்டன. ஆயிரம் ஆயிரம் உயிர்த் தியாகங்களின் ஓவியம் மனத் திரைகளிடை வரைந்து கொள்ளப்பட்ட நிகழ்வுகளின் தருணங்களும் அவனோடு நகர்ந்து விட்டன. இருந்தபோதும் தமிழினம் எதிர்கொண்ட, எதிர்வுகூறுகின்ற துன்பங்கள் அழிந்துபோகவில்லை. வெற்றி என்ற இலக்குக்கான செயல் உறுதியோடு நகர்வுற வேண்டிய கணப்பொழுதுகளை உச்சரித்து ஓய்கிறது…! மூ பத்து ஆண்டுகளின் தியாக வேட்கையை, தமிழர் எதிர்காலத்தின் நிலைத்திருப்பினை ஜனநாயகப் பண்பின் செயல்வடிவங்களிடம் விடுதலையின் உறுதியாய் நம்பிக்கையோடு ஒப்புவிக்கிறது. சிந்தித்தபடி நித்தமும் செயலாற்றுங்கள்.

ஆம், இளைஞர்களாக, ஒற்றுமையின் பலவான்களாக, இலட்சியத்தின் போராளிகளாக இனியாவது இந்த நிலையிலிருந்து மீள்வோமா…? அதற்காக ஒருமுகப்பட்டுச் சிந்திப்போமா…? சிந்திக்க வேண்டும்….!

### வாழ்க்கையின் நியதி

அன்பு, நேர்மை, பொறுமை ஆகிய மூன்றும் இருந்தால் போதும், வேறு எதுவும் தேவையில்லை. அன்புதான் வாழ்க்கையின் ஒரே நியதி. எல்லாவிதமான சுயநலமும் சாவு தான். மற்றவர்களுக்கு நன்மைசெய்வதுதான்வாழ்க்கை. மற்றவர்களுக்கு நன்மை செய்யாமல் இருப்பதுதான் மரணம். என் இளைஞர்களே, அன்புடையவர்களைத் தவிர மற்றவர்கள் வாழ்பவர்கள் அல்லர். என் குழந்தைகளே…! மற்றவர்களுக்காக உங்கள் மனம் உருக வேண்டும். ஏழை எளியவர்கள், பாமரர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியவர்களுக்காக உங்கள் மனம் உருகவேண்டும்.

மற்றவர்களின் நன்மையின் பொருட்டு உங்கள் இதயமே நின்று, மூளை குழம்பி, உங்களுக்குப் பைத்தியம் பிடிக்கும் என்ற நிலை வரும் வரையில், மற்றவர்களுக்காக நீங்கள் மனம் உருகுங்கள். பிறகு இறைவனின் திருவடிகளில் உங்கள் ஆன்மாவைச் சமர்ப்பியுங்கள். அப்போது உங்களுக்கு ஆற்றல் வரும், உதவி வரும், குறையாத ஊக்கம் வரும்.



மற்றவர்களுக்கு நன்மை செய்வது தான் வாழ்க்கை. மற்றவர்களுக்கு நன்மை செய்யாமல் இருப்பதுதான் மரணம். என் இளைஞர்களே, அன்புடையவர்களைத் தவிர மற்றவர்கள் வாழ்பவர்கள் அல்லர். என் குழந்தைகளே! மற்றவர்களுக்காக உங்கள் மனம் உருக வேண்டும். ஏழை எளியவர்கள், பாமரர்கள், ஒடுக்கப் பட்டவர்கள் ஆகியவர்களுக்காக உங்கள் மனம் உருக வேண்டும்.

### சுதந்திரம் இன்றி வளர்ச்சி இல்லை

என்னைச் சுற்றிலும் இருள் சூழ்ந்திருந்தபோதும், முயற்சி செய்யுங்கள்..! பயப்படாதீர்கள்! பணத்தால் பயனில்லை. ஒழுக்கம் ஒன்றுதான் துளைக்கமுடியாதசுவர்களையெல்லாம் துளைத்து எம்மை முன்னேறச் செய்கிறது. சுதந்திரம் இல்லாமல் எந்த வளர்ச்சியும் அடைய முடியாது.

வளர்ச்சிக்கு முதல் நிபந்தனை சுதந்திரம். சமுதாயத்தில் கொடுமைகளை அகற்ற வேண்டும். சமுதாயத்தில் கொடுமைகள் வேண்டாம்;. மற்றவர்களுக்குச் சுதந்திரம் அளிக்கத் தயாராக இல்லாதவனுக்கு, சுதந்திரம் பெறுவதற்குத் தகுதி கிடையாது.

நற்சமுதாயத்தை உங்களால் உருவாக்க முடியுமா…? முடியும்…! முடிய வேண்டும் என்பதுதான் எனது நம்பிக்கை. நல் வழியில் சமுதாயத்தைப் புதுப்பிப்பதற்கு முயற்சி செய்யுங்கள்.

உங்களிடம் ஊக்கம் என்ற நெருப்பு பற்றிஎரியவேண்டும். பிறகு அதை எல்லா இடங்களிலும் பரப்புங்கள். வேலை செய்யுங்கள். சுயநலம் இல்லாதவனாக இரு. எல்லையற்ற பொறுமையுடன் இரு. அவ்விதம் நீ செய்தால் உனக்கு வெற்றி நிச்சயம். மற்றவர்களின் நன்மைக்காக வேலை செய்வதுதான், வாழ்க்கையின் இலட்சியம். போலித்தனம் என்பது இருக்கக் கூடாது, பொய் கூடாது, போக்கிரித்தனம் கூடாது - இதைத்தான் நான் விரும்புகிறேன். ஒழுக்கக்கேடு என்ற மூச்சுக்காற்றுகூட வீசக் கூடாது; செயல்முறையில் குற்றத்தின் நிழல்கூடப் படியக் கூடாது.

### எல்லாவற்றிலும் எச்சரிக்கையாக இருங்கள்

சலனபுத்தி வேண்டாம், இரகசிய வித்தை என்ற அயோக்கியத்தனம் வேண்டாம், இருட்டில் செய்யும் எதுவும் வேண்டாம். என் வீரக் குழந்தைகளே..! முன்னேறுங்கள். பணம் இருந்தாலும் சரி, இல்லாமல் போனாலும் சரி, உங்களுடன் மனிதர்கள் இருந்தாலும் சரி, இல்லாமல் போனாலும் சரி முன்னேறிச் செல்லுங்கள்; கவனமாக இருங்கள். உண்மைக்குப் புறம்பான எல்லாவற்றிலும் எச்சரிக்கையாக இருங்கள். உண்மையைவிடாமல் பிடித்துக்கொள்ளுங்கள்!






## தமிழ் மக்களை ஆண்டவனாவது காப்பாற்றட்டும்

"நான் அடிக்கிற மாதிரி ஒப்புக்காக உனக்கு அடிக்கிறேன். நீ அடியின் வலிதாங்க முடியாமல் அழுகிற மாதிரி நடி" என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உண்டு. பெரும்பாலும் அரசியல் அரங்கில் சில இக்கட்டுகளில் இருந்து விடுபடுவதற்காக, அரசியல்வாதிகள் மேற்குறிப்பிட்ட விதத்தில் நாடகமாடுவதுண்டு.

சில கடும்போக்காளர்கள் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் அரசிடமிருந்து துரிதமான பயணத்தை, விரைவான தீர்வை எதிர்பார்க்கிறார்கள். அவர்களது விருப்பம் போன்று அவசரமாக அரசினால் செயற்பட இயலாது என நாட்டின் அரச தலைவர், உலக அதியுயர் சபையான ஐ.நா.பொதுச் சபையில் வைத்து திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

கடும் போக்காளர்கள் என அரச தலைவர் குறிப்பிட்டுள்ளது, தமிழ் கடும்கோட்பாட்டுத்தரப்பினர்களையே குறிப்பிடுவதாகக் கொள்ள இயலும்.

நாடு சுதந்திரமடைந்தது முதல் இற்றைவரையான 69 ஆண்டுகளாக நாட்டை நிர்வகித்த எந்தவொரு அரசாலும் தீர்த்து வைக்கப்படாத பூதாகாரமான பிரச்சினையாக இருந்து வருகிறது நாட்டின் இனப்பிரச்சினை. முழு விருப்பத்துடனேயோ அல்லது விருப்பமின்றி ஒப்புக்காகவோ நாட்டை நிர்வகித்த ஒரு சில அரசுகள் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் அவ்வப்போது ஈடுபட்டதுண்டு. ஆயினும் அத்தகைய முயற்சிகளையெல்லாம், அந்தந்த வேளைகளில் சிங்கள கடுங்கோட்பாட்டுத் தரப்பினர்கள் தமது சிங்கள மேலாதிக்க நிலைப்பாட்டில் நின்று எதிர்த்து, சிங்கள மக்களை இனத்துவேச ரீதியில் கிளர்ந்தெழ வைத்துக் குழப்பியடித்த வரலாறு சகலரும் அறிந்ததொன்றே.

அத்தகைய சிங்கள இனவாதத் தரப்பினர்களுக்கு அஞ்சி, தீர்வு முயற்சிகளை ஆரம்பித்த அரசுகள் தமது முயற்சிகளிலிருந்து பின்வாங்கி, தமது முயற்சிகளைக் கைவிட்டமையும் வரலாற்றுப் பதிவுகளே. இன்றும் கூட அதே சிங்கள இனவாதத் தரப்புக்கள் 'சன்னதம்' ஆட பின்னிற்கவில்லையே?

அந்த வகையில் தமிழ் மக்களது ஒட்டுமொத்த ஆதரவால் அரச தலைவர் பதவியை ஈட்டிய மைத்திரிபால சிறிசேன அதற்கான நன்றிக் கடனாகவேனும் இனப்பிரச்சினைக்குத் நிலையான, நியாயமான தீர்வொன்றை துரிதமாக வழங்குவார் என்ற தமிழ்மக்களது நம்பிக்கையைப் பொய்ப்பிக்கும் விதத்தில், இனப்பிரச்சினைக்கான தீர்வை துரிதமாக நிறைவேற்ற இயலாதென அரச தலைவர் இறுமாப்புடன் கூறுவது எந்த வகையிலும் நியாயமானதாகக் கருத இயலாததொன்று. தந்தை செல்வாவின் "தமிழ் மக்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்" என்ற கூற்றே இன்று மனதில் நிழலாடுகிறது. என்ன செய்ய? அந்த ஆண்டவனாவது தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாயமான, துரிதமான தீர்வு கிட்ட அருள் பாலிப்பானா?

வ.திருநாவுக்கரசு,
நல்லூர்.






# ‘டீஸ்றப்ட் ஏசியா 2017’ கண்காட்சி மற்றும் மாநாட்டு நிகழ்வு

இலங்கையின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அமைப்பின் ஏற்பாட்டில் ‘டீஸ்றப்ட் ஏசியா’ 2017 (Disrupt Asia 2017) கண்காட்சி மற்றும் மாநாட்டு நிகழ்வுகள் கடந்த ஜூலை மாதம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது.
கடந்த ஆண்டு சிறந்த முறையில் இடம்பெற்றிருந்த மேற்படி நிகழ்வைத் தொடர்ந்து இந்த ஆண்டின் நிகழ்ச்சியினூடாக தொழில் முயற்சியாண்மைக் கட்டமைப்பை வளர்ச்சியடையச் செய்வது, புதுப்பிப்பது மற்றும் மீளமைப்பது போன்ற விடயங்கள்முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தன.
இந்த மாநாட்டின் போது முன்னணிப் பேச்சாளர்கள், அறிவுரையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் போன்றோர் பங்கேற்று புத்தாக்கமான ஆரம்ப நிலை நிறுவனங்களை வெளிப்படுத்தினர்.
மேலும், பங்குபற்றுநர்களை உயர் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தொழில்முயற்சியாளர்களுடனும் கட்டமைப்பு பங்காளர்களுடனும் வலையமைப்பு ரீதியில் இணைத்து அதனூடாக அறிவை பெற்றுத் துறை சார்ந்து நேர்த்தியான தாக்கத்தை உருவாக்கக் கூடியவர்களாக அவர்களை மாற்றியமைத்துக் கொள்ளும் திட்டமிடலாகவும் இந்த நிகழ்வுகள் அமைந்திருந்தன.
இது குறித்து கருத்துரைத்த தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அமைப்பின் தலைமை அதிகாரி சித்ராங்கனி முபாரக்,
“தொழில் முயற்சியாண்மை நிறுவனங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளன.
அவற்றினால் முன்வைக்கப்படும் புத்தாக்கங்கள் மட்டுமின்றி, அவற்றினால் உருவாக்கப்படும் புதிய தொழில் வாய்ப்புகளும் இதில் முக்கிய பங்கை வகிக்கின்றன. வியாபாரச் சூழலுக்கு அவை போட்டித் தன்மை வாய்ந்த கட்டமைப்புகளையும் வழங்கக்கூடியன.
இது நடந்தேறுவதற்கு எம்மத்தியில் அடக்கமான, துரித கதியில் இயங்கக்கூடிய ஆரம்பநிலை நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கக்கூடிய கட்டமைப்பு ஒன்று காணப்பட வேண்டும்.
‘டீஸ்றப்ட் ஏசியா 2017’ நிகழ்வுகள் மூலமாக இதற்கான சிறந்த அடித்தளம் வழங்கப்பட்டுள்ளதுடன் தொழில்நுட்ப தொழில் முயற்சியாளர்கள், முதலீட்டாளர்கள், அறிவுரையாளர்கள், கொள்கை திட்டமிடலாளர்களை ஒன்றிணைக்கும் ஒரே களமாக இது அமைந்திருந்தது.
இந்த மாநாட்டை நடத்தியமை குறித்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் அமைப்பு மகிழ்ச்சியடைகிறது” என்றார். (ஓ)

# அரச ஊழியர்களுக்குப் பயன்தரும் செயற்றிட்டங்கள் நிதி அமைச்சு நடைமுறைப்படுத்தத் தீர்மானம்

“ விவசாய மற்றும் மீன்பிடித்துறைகளுக்கு நிவாரணத்தை பெற்றுக் கொடுக்கும் விதமாக அமைச்சினால் இயற்கை அனர்த்தக் காப்புறுதித்திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. உலகில் முதல் தடவையாக இவ்வாறானதொரு திட்டம் உருவாக்கப் பட்டுள்ளதுடன் உலக வங்கியின் உறுதிப்பாடும் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

நாட்டின். தொழிற்பாடுடைய வினைத்திறன் மிகு தொழிற்படையாக விளங்கும் ஊழியர்களுக்காக பயன்தரும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ள தகவலை நிதி அமைச்சு வெளிப்படுத்தியுள்ளது.
2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் அரசு குறிப்பிடப்பட்டிருந்த 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை சகல அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தில் இணைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
மேலும், “அரச ஊழியர்களின் வாழ்க்கை மற்றும் தொழில் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான உறுதிமொழியின் பிரகாரம் இந்த நடவடிக்கை அமையவுள்ளது. இந்தச் செயற்பாடுகளினூடாக அவர்களின் வினைத் திறனையும், உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதே முதன்மை நோக்கம். அதே போன்று வரவு செலவுத்திட்டத்தில் தனியார் துறை தொழில் வழங்குநர்களிடமும் 2 ஆயிரத்து 500 ரூபாய் சம்பள அதிகரிப்பை வழங்கும் படியான கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
இந்தநிலையிலே வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்தி அதனை குறைக்கும் பொறுப்பையும் நிதி அமைச்சுக் கொண்டுள்ளது. 2016 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளின் பிரகாரம் 12.5 கிலோகிராம் சிலின்டர் எரிவாயுவின் விலை நிர்ணயமானது ஆயிரத்து 400 ரூபாவை விடக் குறைக்கப்பட்டிருந்தது. இதனூடாக இலங்கையர்களுக்கு நாடளாவிய ரீதியில் நிவாரணம் வழங்கப்பட்டிருந்தன.
தேர்தல் வாக்குறுதியின் பிரதிபலிப்பாக நிதி அமைச்சானது பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலை நிர்ணயத்தினை லீற்றருக்கு முறையே 117, 95 மற்றும் 65 ரூபாயாக குறைத்துக் கொண்டதுடன் 2 வருடங்களாக அது சார்ந்த பேண்தகு நிலையை சமநிலையாகப் பேணி வருகிறது. இதனூடாகப் போக்குவரத்துச் செலவினங்களில் குறைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று தேசத்துக்கு நன்மை பயக்கும் மேலும் பல திட்டங்களை முன்னெடுக்கவும் அமைச்சு திட்டமிட்டுள்ளது” என்ற கருத்துக்களும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (ஓ).



මුදල් අමාත්‍යාංශය
நிதிஅமைச்சு
MINISTRY OF FINANCE



# மூலதனச் செலவினங்கள் தொடர்பில் கணக்காய்வு நடவடிக்கை

## கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவிப்பு



கடந்த வருடத்தில் பிராந்திய ரீதியாக முன்னெடுக்கப்பட்ட 200 இற்கும் அதிகமான மூலதனச் செலவினங்கள் தொடர்பில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படும் என கணக்காய்வாளர் நாயகத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இதன்படி கடந்த வருடத்தில் அண்ணளவாக 622 பில்லியன் ரூபா பெறுமதியான மூலதன செலவினங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள தென கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.
இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,
“50 வீதமான கணக்காய்வு நடவடிக்கைகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள கணக்காய்வுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட செலவினங்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம்.
அவை குறித்து விசாரணைகளைச் செய்வதற்கும் தீர்மானங்களை மேற்கொண்டுள்ளோம். இத்தகைய மூலதன செலவீனங்களில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.
முன்னெடுக்கப்பட்டுள்ள சகல மூலதன செலவினங்கள் தொடர்பாகவும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கையை விரைவில் பெற்றுக்கொள்ள எதிர் பார்த்துள்ளோம்.” - என்றார். இந்தக் கணக்காய்வு விசாரணைகளுக்காக எட்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ)


CSE COLOMBO STOCK EXCHANGE

கொழும்பு பங்குப்பரிவர்த்தனை - 147-2/3, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் - 0212221455

25/9/2017
www.cse.lk

பங்குச்சந்தைத் தகவல்கள்

| சுட்டிகள் | | இன்று | நேற்று |
|---|---|---|---|
| ASPI | ↓ -15.19 | 6,412.07 | 6,427.26 |
| S&P SL20 | ↓ -12.45 | 3,679.70 | 3,692.15 |
| வியாபாரப்புரள்வு | | 793,852,100 | 217,860,544 |
| உள்நாடு:- கொள்வனவு | | 393,147,936 | 170,985,264 |
| விற்பனை | | 333,919,776 | 202,045,504 |
| வெளிநாடு:- கொள்வனவு | | 400,704,128 | 46,875,280 |
| விற்பனை | | 459,932,288 | 15,815,047 |




| கம்பனி-அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | குறியீடு | இறுதிவிலை | பங்குகள் | புரள்வு (Rs) |
|---|---|---|---|---|
| ஜோன் கீல்ஸ் கோல்டிங்ஸ் | JKH.N | 162.5 | 1,368,609 | 223,080,762 |
| ஒன அல்லி கோல்டிங்ஸ் | ONAL.N | 43.4 | 4,034,785 | 173,498,128 |
| டயலொக் | DIAL.N | 12.1 | 10,017,184 | 121,207,916 |
| ஹெறர்மஸ் கோல்டிங்ஸ் | HHL.N | 122.5 | 450,178 | 55,140,903 |
| சிங்கர் ஸ்ரீலங்கா | SINS.N | 45.1 | 1,003,190 | 45,258,302 |
| மல்வத்த பியாள்டேசன் | MAL.N | 8.10 | 1,688,301 | 13,573,013 |
| கொமர்சியல் வங்கி | COMB.N | 138 | 96,074 | 13,254,171 |
| பலாங்கொட பியாள்டேசன் | BALA.N | 29.3 | 461,952 | 13,186,719 |
| லங்கா வோல் டைடில் | LWL.N | 100 | 116,328 | 11,634,514 |
| மல்வத்த பெருந்தோட்டம் | MAL.X | 7.2 | 1,611,720 | 10,894,127 |

அறிவித்தல்கள் - கருத்தரங்கு
Online Trading
நீங்கள் எங்கிருந்து கொண்டும் Mobile ஊடாக பங்குவர்த்தகத்தில் இணைந்து கொள்ள வாய்ப்பினை தவறவிடாதீர்கள்.
4 PM on 27/09/2017

| சந்தைக் குறிகாட்டிகள். | | |
|---|---|---|
| கம்பனிகள் | ↑ | 295 |
| பரிமாற்றத்தில் | ↑ | 235 |
| விலை உழைப்பு | ↓ | 10.7 |
| புத்தகப்பெறுமதி | ↓ | 1.4 |
| பங்குலாப விளைவு | ↓ | 3 |

# வீட்டுப்பாட வேலைகள் மாணவர் கல்வி அடைவை மேம்படுத்தும் செயலி

சி.நற்குணலிங்கம்

கல்வி எனும் செல்வம் பேறுடையது. அறிவார்ந்து சமூகத் தனிமங்களை ஒன்றிணைப்பது. பகுத்தறிவை அனுபவப் பட்டறிவாக ஊட்டம் செய்வது. அந்தவகையிலே சமூக நிலைத்திருப்பில் முதன்மைக் கடமையாற்றுகின்ற மாணவ சமுதாயம் அறிவு நிலையில் பொருத்தமான அடைவு மட்டங்களை எட்ட வேண்டும். அறிவின் அடிப்படை தருகின்ற பாடசாலைக் கல்வியை உரிய முறையில் பெற்றிருக்க வேண்டும். எந்தவொரு மாணவனும் பாடசாலைக் கல்வியில் இருந்து தூர விலகியிருக்கக்கூடாது. ஏனெனில் கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான் என்றே பொருள்கொள்ளப்படும்.

### பாடசாலை அமைவும் மாணவர் நேசிப்பும்

மாணவர்கள் பாடசாலையை நேசிக்க வேண்டும். பாடத்தை நேசிக்க வேண்டும். கற்பிக்கும் ஆசிரியரைப் பணிவுகொள்ளவும் நேசிக்கவும் வேண்டும். இவற்றுக்கான சூழ்நிலைகள் பாடசாலையில் ஏற்படுத்தப்பட வேண்டும். அதனூடாகவே கல்வித் தரத்தை உயர்த்த முடியும். ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்ற முன்வருவதுடன் பல்வேறு பொறிமுறைகளைக் கையாள்வதன் ஊடாகவேனும் மாணவர்கள் கல்வித்தரத்தை உயர்வடையச் செய்யப் பாடசாலைகள் பணி செய்ய வேண்டும்.

மெல்லக்கற்போர், கற்றல் குறைபாடுடையோர், இடைவிலகலில் ஆர்வமுள்ளோர், கல்வியில் நாட்டம் குறைந்தோர் எனக் கற்றலில் ஆபத்து விளிம்பிலுள்ள மாணவர்களே பெரும்பாலும் கல்வித்தரம் வீழ்ச்சியடைவதற்கு பங்காளிகளாகவுள்ளனர். பிள்ளைகள் ஒழுங்கு முறையாகக் கற்கக்கூடிய வாய்ப்புகள் தவிர்க்கப்படுவதால் அவர்கள் வகுப்பறைக் கற்றலில் ஆர்வமற்று ஒதுங்கியிருக்கும் நிலை ஏற்படுகிறது. இவர்களைக் கற்றலுக்கு உரிய செயற்பாட்டுத் தளத்தில் இணைப்பதன் மூலம் கல்வித்தரத்தை உயர்வடையச் செயலாம்.

### பாட அலகுகளை மாணவர்கள் புரிந்து கொள்ளல்

பாட அலகுகளின் எண்ணக் கருவை விளங்கிக் கொள்ளாத தன்மையே கற்றல் செயற்பாடுகளில் அதிக மாணவர்கள் இணைந்து கொள்ளாமைக்கான அடிப்படைக் காரணங்க




ளாக அமைந்துள்ளன. எந்தப் பாட அலகாயினும் முதலில் அந்தப் பாட அலகின் எண்ணக்கருவை மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவதற்காக பல்வேறு பொறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டாலும் பெரும்பாலான பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு வீட்டுப்பாட வேலைகளை வழங்குவதில் குறைவான ஆர்வ வெளிப்பாடே காணப்படுகின்றது. இந்த நிலை மாற வேண்டும். வீட்டுப்பாட வேலைகளை வழங்குவதன் மூலமும் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்வடையச்செய்யலாம் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன்வழி செயற்பட முன்வர வேண்டும்.

### வீட்டுப்பாட வேலையும் ஆளுமை விருத்தியும்

வீட்டுப்பாட வேலைகளை வழங்குவதில் ஆசிரியரின்பங்குஎவ்வளவுமுக்கியமானதோ அதே போன்று வழங்கப்பட்ட வீட்டுப்பாட வேலைகளை பிள்ளைகள் சரிவரச் செய்கின்றனரா என்பதைக் கண்காணிப்பதில் பெற்றோரின் பங்கு அளப்பரியது. பிள்ளையின் கல்வி தொடர்பாக பெற்றோர் அனுதினமும் எடுத்துக் கொள்ளும் அக்கறையின் மூலம் வீட்டுப்பாடம் கொடுக்கப்பட்ட விடயம் தொடர்பில் பெற்றோர் அறிந்துகொள்ள முடியும். இது பிள்ளையின் கற்றல் கவனத்தைத் தூண்டும். மனித வளம் வீணடிக்கப்படாது பயனுள்ளதாக மாற்றமுறும் நிகழ்வு பாடசாலையிலேயே நிகழ்கிறது என்பதை பாடசாலைகள் மறந்துவிடக்கூடாது.

மாணவர்கள் கொண்டுள்ள ஆளுமை விருத்திப் பண்புகளின் அடிப்படை வேறுபாடுகளுக்கேற்ப வீட்டுப்பாட வேலைகள் வழங்கப்பட வேண்டும். வீட்டுப்பாட வேலைகளின் எண்ணிக்கை அடைவுமட்டத்தை அதிகரிக்காது. ஆனாலும் குறுகிய காலத்துக்குள் மாணவர்கள் விரும்பிச் செய்யக் கூடிய வேலைகளை ஆரம்பத்தில் கொடுத்து அவர்களை அந்தப் பாடம் சார்ந்த நேசிப்பைப் பெற்றுக்கொள்ள வழிப்படுத்தலாம். இந்தச் செயற்பாடுகள் மாணவர்கள் மனம் ஒன்றிப் படிப்பதற்கான வாய்ப்பினை வழங்கும். பிள்ளையின் கற்றல் ஆர்வம் எந்தவிதத்திலும் பாதிக்காத வண்ணம் வீட்டுப்பாடம் வழங்கப்பட வேண்டும். இல்லையேல் மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையே முரண் நிலை தோன்றி பாடத்தையும் ஆசிரியரையும் எதிரி என்கிற எதிர்மறையான எண்ணம் கொண்டு நோக்கும் நிலையை ஏற்படுத்திவிடும். வீட்டுப்பாடத்தைப் பிள்ளைகள் விரும்பிச் செய்கின்றார்களா..?, அதன் மூலம் மாணவர்களின் கற்றல் நிலை மேம்பட்டுள்ளதா..?, மாணவர்கள் உணர்ந்து மகிழ்ச்சியாக வீட்டுப்பாட வேலைகளை செய்கிறார்களா..? என்பதை ஆசிரியர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த விடயங்களில் முன்னேற்றம் இருப்பின் வீட்டுப்பாடம் கொடுப்பதில் ஆசிரியர் வெற்றிகண்டுள்ளார் என்ற முடிவுக்குவரலாம்.

### ஆசிரியர் பெற்றோரின் கடமைப் பண்பு

வீட்டுப்பாடம் கொடுப்பதால் மாணவர்கள் முன்னேற்றம் கண்டுள்ளார்களா என்பதில் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும். கற்றுக்கொடுக்கப்பட்ட பாட அலகிலேயே வீட்டுப்பாட வேலைகள் வழங்கப்பட வேண்டும். அவை பிள்ளையின் விருப்பத்தையும், ஆர்வத்தையும் அதிகரிக்கும். வீட்டுப்பாட வேலைகள் பிள்ளைகளின் நிலைக்கேற்ப வகைப்படுத்தி, இலகுபடுத்திக் கொடுக்கப்பட வேண்டும். அவை பிள்ளைகளுக்கு மீட்டலாக அமைகின்றது. வீட்டுப் பாட வேலைகளைப் பிள்ளைகள் சுயமாகச் செய்கிறார்களா என்பதை பெற்றோர்கள் கவனிக்க வேண்டும். ஆசிரியர்களும் பெற்றோரும் இணைந்து செயற்படுவதன் மூலமே எதிர்




பார்க்கப்படும் கல்வித்தர உயர்வை அடைய முடியும்.

"மனிதகுலம் உய்வதற்கான நம்பிக்கை வெளி ஆசிரியர் பணியில் தான் அடங்கி இருக்கிறது" என்ற பேர்னாட்ஷாவின் கூற்றுக்கு அமைய ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும். மாணவ சமூகத்தின் கல்வி உயர்வுக்காக உழைக்க வேண்டும். மாணவர்கள், கற்பிக்கும் விடயங்களை மேலோட்டமாகக் கற்காது ஆழமாகவும், நிதானமாகவும் கற்பதற்கு வீட்டுப்பாட வேலைகள் உதவியாக அமையும். மாணவர்களது கற்றல் வெளிப்பாடுகளின் அடிப்படையில் அவர்களுக்கு எவ்வகையான வீட்டுப்பாடத்தை வழங்க வேண்டும் என்பதை தீர்மானித்து வழங்குவதன் ஊடே அவர்களை ஈடுபாட்டுடனும், உற்சாகத்துடனும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடத் தூண்ட முடியும்.

இளமையில் கல்வி தொலைந்து போனால் இனியொரு வாழ்வு எமக்கில்லை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். கல்வியூடாக வாழ்வைக் காத்திட வேண்டும். எனவே கற்றலை ஊக்குவிக்கும் பொறிமுறையில் வீட்டுப்பாட வேலைகள் வழங்கும் முறைமை தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக இருக்க வேண்டும். வீட்டுப்பாடம் கொடுக்கும் வேலைத்திட்டமானது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கற்றல் இயலாமைக்கு உள்ளான மாணவர்களுக்கு மீளக்கற்றலாக, தொடர்பயிற்சியாகவும் அவை அமையும். வீட்டுப்பாட வேலைகளைக் கொடுத்த ஆசிரியரே அவற்றைத் திருத்தம் செய்வதுடன் சரியான பின்னூட்டங்களையும் வழங்க வேண்டும். இதன்மூலமே மாணவர்கள் கற்றலில் தெளிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### வீட்டுப்பாட வேலைகள் தரும் விருத்தி

கற்றலில் ஆபத்து விளிம்பிலுள்ள மாணவர்களை வீட்டுப்பாட வேலைகள் கொடுப்பதன் மூலம் முன்நோக்கி நகர்த்த முடியும், மாணவர்களது உள்ளார்ந்த இயல்புகளை மேலெழுச் செய்யலாம். புதிய தேடலுக்கும், புதிய சிந்தனைக்கும், சிந்திக்கும் ஆற்றல் மேலோங்கவும், கிரகித்தல் தன்மை வளரவும், இடர்படும் இடங்களை கண்டறியவும் வீட்டுப்பாட வேலைகள் உதவும்.

பாடசாலைகளில் வீட்டுப்பாடம் வழங்குவதும் அதனை மாணவர்கள் செய்வதும் முதன்மையான கற்றல் கற்பித்தல் செயற்பாடாக விளங்குகிறது. வீட்டுப்பாடம் வழங்குவதில் தேவையற்ற திணிப்பு இருக்கக்கூடாது. கற்றலுக்கு வீட்டுப்பாடம் துணைபுரியக் கூடியதாக இருக்க வேண்டும். வீட்டுப்பாட வேலைகளை கொடுக்க வேண்டும் என்பதற்காக மாணவர்களிடம் திணிக்கக்கூடாது. திட்டமிட்ட அடிப்படையில் பாடக்குறிப்பில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக வழங்க வேண்டும். வீட்டுப்பாட வேலைகள் வழங்கப்படுவதால் கற்றல் செயற்பாடுகளில் இருந்து விலகிச் செல்வோரின் எண்ணிக்கை குறைவடைந்

> கற்றலில் ஆபத்து விளிம்பிலுள்ள மாணவர்களை வீட்டுப்பாட வேலைகள் கொடுப்பதன் மூலம் முன்நோக்கி நகர்த்த முடியும், மாணவர்களது உள்ளார்ந்த இயல்புகளை மேலெழச் செய்யலாம். புதிய தேடலுக்கும், புதிய சிந்தனைக்கும், சிந்திக்கும் ஆற்றல் மேலோங்கவும், கிரகித்தல் தன்மை வளரவும், இடர்படும் இடங்களை கண்டறியவும் வீட்டுப்பாட வேலைகள் உதவும்.

துள்ளதா..?, மாணவர் அடைவுமட்டம் உயர்வடைந்துள்ளதா..? என்பதை ஆசிரியர்கள் மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். ஊக்குவிப்பு நுட்பமுறைகளுள் வீட்டுப்பாடம் கொடுத்தலும் முதன்மையான ஒன்று என்பதை ஆசிரியர்கள் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

### முன்னேற்றம் காண புது முயற்சி வேண்டும்

இலங்கையிலுள்ள 98 கல்வி வலயங்களில் முதல் 25 இடங்களுள் வடமாகாணம் இல்லாதிருப்பது கவலைக்குரிய விடயமாகும். இந்தநிலையில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்திப் பாடசாலைகள் பல்வேறு பொறிமுறைகளைக் கையாள வேண்டும். ஒரே உத்திகள், பொறிமுறைகளை ஒவ்வொரு வருடமும் கையாண்டு ஒரே மாதிரியான கல்வித்தரத்தில் இருப்பதை அறிந்த பின்னரும் கூட செயற்படு திறனை மாற்றத்திற்குட்படுத்தாது இருப்பது தவறு. புதிய மாற்றங்களை ஏற்படுத்திப் பார்க்க வேண்டும். அந்தவகையில் பாடசாலைகளில் மாணவர்களுக்கு வீட்டுப்பாட வேலைகளை வழங்குவதன் மூலம் கல்வித்தர நிலையை உயர்த்த முடியுமா என்பதனை ஈடுபாட்டுடன் மேற்கொள்ளலாம். அதன் மூலம் நிச்சயமாக உயர்வினை அடையலாம். கல்வித்தர உயர்வுக்காக ஆசிரியர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகள் அனைத்தும் மாணவர்கள் நலன் கருதியவையே என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதற்குத் தங்களை தயார் நிலைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

## பத்தி எழுத்து

### தமிழர்கள் பிளவுபடுவதால் பயனொன்றும் கிடைக்காது

ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகிடைக்கவில்லையென்றஆதங்கமும், கோபமும் தமிழ் மக்களிடையே அதிகரித்துச் செல்வதைஅவதானிக்க முடி கின்றது. இது முழுக்க முழுக்க நியாயமானது. ஓர்இனம்சுமார்70 ஆண்டுகளாகஏமாற்றப்பட்டு வருவதை எவருமே ஏற்றுக் கொள்ள முடியாது. இதற்குத் தமிழர்களும் காரணமாக இருப்பதை எவருமே மறைக்கவும், மறுக்கவும் முடியாது.


நாடு சுதந்திரம் அ்டைந்த நாளில் இருந்து இன்றுவரைதமிழர்கள்ஒற்றுமையாகஇருந்ததாகச் சரித்திரமே இல்லை. அரசியல் ரீதியாக மட்டுமன்றி சமுதாய ரீதியிலும் அவர்கள்பிளவுண்ட நிலையில்காணப்படுகின்றனர். இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடிய போதும் இதையே காண முடிந்தது. இன்று நிலைமை மிக மோசமான கட்டத்தை எட்டி நிற்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக அடுத்தமாத இறுதியில் மாற்று அணியொன்று உருவாகவிருப்பதாகவெளியானசெய்தி ஆரோக்கியமானதாகத் தெரியவில்லை. இதுவரை புதைந்துகொண்டிருந்தஒருவிடயம்சுவாலை விட்டு எரிவதற்கானதொரு அறிகுறியாகவே இதைக் கருத முடிகின்றது. கூட்டமைப்பின்மீதுதொடா்ந்துகுற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்ததன் உண்மையான காரணம் இப்போது புரிந்துவிட்டது. கூட்டமைப்புடன் வேண்டா வெறுப்பாக ஒட்டிக் கொண்டிருப்பவர்களின் சுயரூபமும் இனிமேல் தெரிந்துவிடும்.

மாற்றுஅணியொன்றுஉருவாகுவதால்கூட்டமைப்புக்குப் பாதகம் ஏற்பட்டுவிடுமெனச் சிலர் கூறுவதை முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ள முடியாது. கூட்டமைப்பை ஆதரிப்பவர்கள் அப்படியேதான் இருக்கப் போகின்றார்கள். அதற்கு வேண்டாதவர்கள்தான்மாற்று அணியின்கீழ்அணிதிரளப் போகின்றார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கூட்டமைப்பின் மீது மிக மோசமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. எதிரணியினரின் மேடைகள்தோறும்கூட்டமைப்பைவிமர்சிப்பதே வேலையாகக் காணப்பட்டது. ஆனால்மக்கள்இதையெல்லாம்கணக்கில் எடுக்கவில்லை. தேர்தல் முடிவுகள் இதை வெளிக்காட்டி நிற்கின்றன. கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றது.

அடுத்து இடம்பெறப் போகும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை மனதிற்கொண்டு மாற்று அணியின் உருவாக்கம் தீவிரப்படுத்தப்பட்டதாகவே கருத முடிகின்றது. கூட்டமைப்போ அல்லது மாற்று அணியோ மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே முதன்மையானது. இதைவிடுத்துதமிழர்கள்தம்மைப் பிளவுபடுத்திக்கொள்வதுஇனவாதிகளுக்கு வாய்ப்பாகவே அமைந்துவிடும்.

# புரட்டாதி மாத ராசிபலன்

(17.09.2017 – 17.10.2017) உங்களுக்கு எப்படி?



## விருச்சிகம்

### உழைப்பால் முன்னேற்றம்

தடைகள் பல வந்தாலும் தளராமல் போராடி முன்னேறத் துடித்துக் கொண்டிருக்கும்நீங்கள், மற்றவர்களின் உதவியின்றி சொந்த உழைப்பால்சிகரத்தைஎட்டிப்பிடிப்பவர்கள். உங்கள்ராசிநாதனாகியசெவ்வாய் பகவான் இந்த மாதம் முழுக்க உங்கள் ராசிக்கு சாதகமான வீடுகளில் சென்று கொண்டிருப்பதால் ஆளுமைத் திறன் அதிகரிக்கும். அதிகாரப்பதவியில்இருப்பவர்கள்அறிமுகமாவார்கள். பணவரவு உண்டு. அரைகுறையாக நின்று போன பல காரியங்கள்விரைந்துமுடியும். சொத்துப்பிரச்சினை முடிவுக்கு வரும். வெகுநாள் கனவாக இருந்த வீடு வாங்கும் ஆசை இப்போது நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் உங்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். வழக்குசாதகமாகத்திரும்பும். பழைய கடனைத் தீர்க்க புதுவழி யோசிப்பீர்கள். உங்கள் ராசிக்கு இலாபவீட்டில்சூரியன் வலுவாக அமர்ந்ததால் சிலருக்கு பெரிய பதவிகள், பொறுப்புகள் தேடி வரும். கட்டட வேலையைத் தொடங்குவீர்கள். மூத்த சகோதரங்கள் பக்கபலமாக இருப்பார்கள். ஏழரைச் சனி தொடர்வதால் யாராக இருந்தாலும் இடைவெளிவிட்டு பழகுவது நல்லது. திடீரென்று அறிமுகமாகுபவர்களைநம்பிபெரியமுதலீடுகள்செய்யவேண்டாம். திடீர்நண்பர்களை வீட்டிற்கு அழைத்து வராதீர்கள். மனைவிக்குதெரியாமல்வெளியில்எந்தசெயலையும்செய்யவேண்டாம். அதனால்சிலபிரச்சினைகள்ஏற்படக்கூடும். புதனும், சுக்கிரனும் இந்த மாதம் முழுக்க சாதகமாக இருப்பதால் முக்கிய அதிதிகள் வீட்டு விசேடங்களில் கலந்து கொள்வீர்கள். கேது 3ஆம் இடத்தில் தொடர்வதால் துணிச்சலாக சில முடிவுகள் எடுப்பீர்கள். குரு 12இல்மறைந்திருப்பதால்தடைப்பட்டவீடுகட்டும்பணியை தொடங்குவீர்கள். கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களை நினைத்து அவ்வப்போது வருந்துவீர்கள். அரசியல்வாதிகளே! தலைமைக்கு நெருக்கமாவீர்கள். சகாக்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கன்னிப்பெண்களே!பெற்றோருடன்மனம் விட்டுபேசிமகிழ்வீர்கள். ஆடை, அணிகலன் சேரும். மாணவ மாணவிகளே! கல்யாணம், காது குத்து என்றுவிடுப்புஎடுக்காமல்படிப்பில்முழுகவனம்செலுத்துங்கள். வகுப்பறையில்கேள்விகேட்கதயக்கம்வேண்டாம். வியாபாரத்தில்பழையசரக்குகளைவிளம்பரயுக்தியால்விற்றுத்தீர்ப்பீர்கள். நம்பிக்கைக்குரியவர்களிடம் கடையை விரிவு படுத்துவது குறித்து ஆலோசனை செய்வீர்கள்.

உத்தியோகத்தில் பரபரப்பாக காணப்படுவீர்கள். சக ஊழியர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள். மேலதிகாரியின் ஆலோசனை யின்றி புது முயற்சிகளில் ஈடுபடாதீர்கள். கலைத்துறையினரே!மூத்தகலைஞர்களிடம்சிலநுணுக்கங்களையும்கற்றுத் தெளிவீர்கள். கடின உழைப்பால் உங்களின் இலக்கை நோக்கை எட்டிப் பிடிக்கும் மாதமிது.

## வரலாற்றில் இன்றைய தினம் 26.09.2017

1087- இரண்டாம் வில்லியம் பிரிட்டன் அரசராக முடி சூடினார். இவர் 1100 வரை ஆட்சி புரிந்தார்.

1777- பிரிட்டிஷ்படைகள்பிலதெல்பியாவில்நிலை கொண்டன.

1905 - 'றிலேற்றிவிற்றி' தொடர்பான தனது விசேட தேற்றத்தின் மீதான முதல் கட்டுரையை அல்பேட் ஜன்ஸ்ரைன் வெளியிட்டார்.

1950 - வடகொரியப் படைகளிடமிருந்து சியோல் நகர் ஐக்கிய நாடுகள் படையால் மீளக் கைப்பற்றப்பட்டது.

1950- ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது இந்தோனேசியா.

1954 - ஜப்பானின் கப்பலொன்று புயலில் சிக்கி மூழ்கியதில் ஆயிரத்து 172 பேர் உயிரிழந்தனர்.

1960 - சிக்காக்கோவில் அமெரிக்க அரச தலைவர் வேட்பாளர்களான றிச்சாட் நிக்சன் மற்றும் ஜோன் எப்.கெனடி ஆகியோரிடையே இடம் பெற்ற விவாதம் தொலைக்காட்சியில் முதன் முதலாக ஒளிபரப்பப்பட்டது.

1984 - பிரிட்டனும் சீனாவும் ஹொங்கொங்கின் இறைமையை மாற்றுவதற்குச்சம்மதித்தன.

1997 - இந்தோனேசிய வானூர்தி ஏ300, மெடன் வானூர்தித் தளமருகே விபத்துக்குள்ளாகியதில் 243 பேர் உயிரிழந்தனர்.

2016 - இந்தியாவை நம்பியதால் ஏமாற்றப்பட்டோமென தியாக தீபம் திலிபனின் நினைவு நிகழ்வில் சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு.



2002- செனகல் கப்பல் எம்.வி. ஜுலா காம்பியா கடல் பகுதியில் கவிழ்ந்ததில் ஆயிரம் பேர் வரை சாவடைந்தனர்

## நாளை

**27.09.2017**

புதன்கிழமை

**புரட்டாதி 11**

திதி: ஸப்தமி மா. 06.35 வரை
நட்சத்திரம்: கேட்டை மு.ப. 10.29 வரை
சுபநேரம்: 04.32–06.02 வரை
ராகுகாலம்: 12.02–01.32 வரை



# கலகலப்பு 2 ஆரம்பம்



சுந்தர் சி இயக்கத்தில் விமல், சிவா நடித்து 2012ஆம் ஆண்டு வெளியான நகைச்சுவைத் திரைப்படமான 'கலகலப்பு' பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்த நிலையில் படத்தின் இரண்டாம் பாகம் விரைவில் தயாரிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

'கலகலப்பு' இரண்டாம் பாகத்தில் கதாநாயகர்களாக ஜீவாவும் ஜெய்யும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனராம்.

கதாநாயகிகளாக நிக்கி கல்ராணி மற்றும் கேத்தரின் தெரசா நடிக்கவுள்ளனர் என்றும் தெரிகிறது. இந்தப் படத்திற்கு ஆதி இசையமைக்க உள்ளார்.




'அவ்னி மூவிஸ்' சார்பாக சுந்தர்சியும் அவரது மனைவி குஷ்புவும் இந்தப் படத்தை தயாரிக்கின்றனர். அடுத்த மாதத்தில் படப்பிடிப்பு ஆரம்பமாக சாத்தியமுள்ளது என்றும் செய்திகள் வந்துள்ளன.

மேனேஜருக்கு அடுத்ததா பேப்பரை மூஞ்சில விட்டு எறியிற அதிகாரம்



காலைல பேப்பர் போடுறவங்களுக்குத்தான் இருக்கு...

சொத்து எக்கச்சக்கமா இருந்து என்ன பிரயோசனம் டாக்டர் கிட்னில கல்லு இருக்கே...!



ஒண்ணும் கவலைப்படாதீங்க இரண்டையும் கரைச்சிடலாம்...!

பால் தரும் பசுவை கோமாதாவா ஏத்துக்கிட்டு கொல்லாமா விடுற மாதிரி



கொஞ்சமா பால் தரும் எங்களை ஏன் உங்க சின்னம்மாவ ஏத்துக்கிட்டு வெட்டாம விடக் கூடாது

## ஒவ்வொரு அலைபேசி அழைப்பும் எத்தனை நேரம்??



பையன் பையனுக்கு கூப்பிட்டா - 00:00:59

அம்மா பையனுக்கு கூப்பிட்டா - 00:00:50

பையன் அப்பாக்கு கூப்பிட்டா - 00:00:30

பையன் பொண்ணுக்கு கூப்பிட்டா- 01:23:59

பொண்ணு பொண்ணுக்கு கூப்பிட்டா- 05:29:59

பொண்ணு பையனுக்கு கூப்பிட்டா - 00.00.00 (மிஸ்ட் கால்)

கணவன் மனைவிக்கு கூப்பிட்டா - 00:00:03

மனைவி கணவனுக்கு கூப்பிட்டா - "நீங்கள் தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளர் தொடர்பு எல்லைக்கு அப்பால் உள்ளார்"



ஊசி கூட நுழைந்து பிரிக்க முடியாத நட்பை காசு நுழைந்து பிரித்துவிடும்.




**மேடம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**இடபம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

**கடகம்:** கவனக்குறைவால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்துவேறுபாடு கொள்வர்.

**சிங்கம்:** நேர்மை மிக்கவராகச் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** உற்சாக மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில்லாபம்பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**துலாம்:** சுயநல நோக்குடன் சிலர் உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி தேவைப்படும். இலாபம் சுமாராக இருக்கும். திடீர் பயணம் செல்ல வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** நண்பரால்சிரமத்திற்குஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**மகரம்:** பெற்றோர் நலனில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்பட சமாளிப்பர். பெண்கள் உறவினரால் பெரிதும் மதிக்கப்படுவர்.

**கும்பம்:** திட்டமிட்ட பணி ஒன்று எளிதாக நிறைவேறும். மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். இலாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம் ஆனால் உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப்படுத்தக் கூடாது

சார்லி சாப்லின்




## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 6 | | | |
| | 3 | | | 8 | | | 1 | |
| 7 | | 4 | | | | 3 | | 9 |
| | | 3 | | | | | | 6 |
| | 5 | | | 2 | | | 8 | |
| 9 | | | | | | 7 | | |
| 4 | | 6 | | | | 5 | | 7 |
| | 1 | | | 3 | | | 2 | |
| | | | 5 | | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 3 | 2 | 5 | 8 | 1 | 6 | 9 |
| 5 | 2 | 1 | 4 | 6 | 9 | 8 | 7 | 3 |
| 9 | 6 | 8 | 3 | 7 | 1 | 4 | 2 | 5 |
| 6 | 8 | 4 | 1 | 3 | 5 | 2 | 9 | 7 |
| 7 | 5 | 2 | 9 | 4 | 6 | 3 | 1 | 8 |
| 3 | 1 | 9 | 8 | 2 | 7 | 6 | 5 | 4 |
| 2 | 9 | 7 | 6 | 8 | 3 | 5 | 4 | 1 |
| 8 | 4 | 5 | 7 | 1 | 2 | 9 | 3 | 6 |
| 1 | 3 | 6 | 5 | 9 | 4 | 7 | 8 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



# நீதிபதி சொன்ன தீர்ப்பு

முன்னொரு காலத்தில் தனகோடி என்ற நீதிபதி ஒருவர் இருந்தார். அவர்தன் வீட்டில் பாலுக்கென்று ஒரு பசுவைவளர்த்தார். தினமும் அந்தப் பசுவை மேச்சலுக்குக் கூட்டிச் செல்ல ஒரு சிறுவன் வருவான். கூடவே அவன் தன் மாட்டையும் கூட்டி வந்து இரு மாடுகளையும் ஒன்றாகவே மேய விட்டு பின்பு மாலையில் வீட்டுக்குக் கூட்டிச் செல்வான். நீதிபதியின் பசுவை அவர் வீட்டில் விட்டு விடுவான்.

ஒருநாள் ஒரு மலைச்சரிவில் இரண்டு மாடுகளும் அருகருகே மேய்ந்து கொண்டிருந்தன. அப்பொழுது இரண்டுக்குமிடையே சண்டைமூழ இரண்டும் ஒன்றையொன்று கொம்புகளால் பலமாகத் தாக்கின. கால்களைத் தரையில் உதைத்துக் கொண்டு புஸ்... புஸ்... என்று மூச்சு விட்டு மிகவும் மூர்க்கமாகத் தாக்கின. சிறுவன் ஓடி வந்து இரண்டையும் விலக்கப் பார்த்தான். அவனால் முடியவில்லை. அத்தனை ஆவேசத்துடன் மாடுகள் ஒன்றை ஒன்று முட்டிக் கொண்டன. திடீரென அவனது மாடு தனது கொம்புகளால் நீதிபதியின் பசுவின் வயிற்றில் மிகவும் மூர்க்கமாகக் குத்தியது. குருதி சிதற 'ம்மா' என்று அலறியபடி பசு கீழே விழுந்து துடித்தது. சில வினாடிகளில் அது உயிரை விட்டது. சிறுவன் அதிர்ச்சியடைந்தான்.

நீதிபதிக்கு என்ன பதில் சொல்வது என யோசித்தான். அவன் மிகவும் புத்திசாலி. நீதிபதியின் மாடு கொல்லப்பட்டது தற்செயலாக நடந்த சம்பவம் தான். இதற்கு எவரும் பொறுப்பேற்க முடியாது. ஆனால் நீதிபதியோ "மாட்டை மேய்வதற்காக நீயே அதை அழைத்துச் சென்றவன். ஆதலால் நீயே பொறுப்பேற்கவும் வேண்டும்" என்று கூறிவிட்டால் என் செய்வது என எண்ணி அவரின் மனநிலையைத் தெரிந்து கொள்ள விரும்பினான். அவன் அவரிடத்தில் ஓடி வந்து "ஐயா தங்கள் பசுவோ திடீரென எனது மாட்டைக் கொம்புகளால் குத்திக்கொன்றுவிட்டது" என்றான். "அடடா பாவமே! என் பசு மிகவும் சாதுவாயிற்றே. அதுவா இப்படிச் செய்தது. என்னால் நம்ப முடியவில்லையே" என்றார் நீதிபதி. " உண்மைதான் ஐயா" என்றான் சிறுவன். மீண்டும் "சரி என் பசு உன் மாட்டைக் கொன்று விட்டது. இதற்கு நான் என்ன செய்வது? என்று கேட்டார் நீதிபதி. தங்கள் பசுதானே என் மாட்டைக் கொன்றது. ஆதலால் தாங்கள் எனக்கு நஷ்ட ஈடுதரவேண்டும்" என்றான் சிறுவன். உடனே நீதிபதி "என்ன பொடிப் பயலே? உன் மாடு செத்ததற்கு நான் காரணமா? யாரிடம் கேட்கிறாய், நஷ்ட ஈடு. மிருகங்கள் ஒன்றையொன்று சண்டையிட்டு இறந்து விட்டால் எந்த விதத்திலும் அதன் சொந்தக்காரர் பொறுப்பாக முடியாது. தெரிந்து கொள்" என்றார் நீதிபதி "ஐயா இதுதான் சட்டமா? இதுதான் நியாயமா? இதுதான் நீதியா?" என்று கேட்டான் சிறுவன்.


"ஆமாம்" என்றார் நீதிபதி.

சிறுவன் "ஐயா இந்தச் சட்டம், நீதி, நியாயம் யாவருக்கும் பொருத்தக் கூடியது தானே மாற்றம் எதுவும் கிடையாதே"? என்று வினவினான். "ஆமாம்" என்றார் மீண்டும் நீதிபதி. சிறுவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

மீண்டும் அவன் "ஐயா இறந்தது உங்கள் மாடு. குத்தியது எனது மாடுதான். உண்மையான நீதி எதுவென தங்கள் வாயால் அறிந்து கொள்ளவே தங்களிடம் என் மாடு இறந்து விட்டதாகப் பொய் சொன்னேன். மிருகங்கள் ஒன்றையொன்று முட்டிக் கொண்டு இறந்து விட்டால் அவற்றின் உரிமையாளர்கள் எந்த விதத்திலும் பொறுப்பாளிகள் அல்லர் எனத் தாங்களே. சொல்லிவிட்டீர்கள். இனி நான் நிம்மதியாகச் செல்வேன்" என்று கூறி நடையைக் கட்டினான்.

நீதிபதி அந்தச் சிறுவனின் புத்திசாலித் தனத்தை வியந்தபடி அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தார்.

## சொற்சிலம்பம்





இடமிருந்து வலம்

1. கிறிஸ்தவர்கள் பாப்பரசரை இப்படியும் அழைப்பர்
2. சோதிடக் கணிப்பில் இதற்கு முக்கியத்துவம்
7. கூற்றுவன்
8. குறைதல்
10. இந்துக்களில் ஒரு பிரிவினர்
12. வாழ்
13. சாமர்த்தியசாலி
15. கீதம்
16. வருமதியாக வேண்டியது
18. ஓர் அசைச்சொல்
20. நீண்டகாலம் பாதுகாக்கப்பட்ட உடலங்கள் இப்படி அழைக்கப்படும்
21. அரசன்

மேலிருந்து கீழ்

1. கொடி முந்திரிகை
2. சுவை உணர்வு
3. புவனம் / பூமி
4. பெண்
5. ஒரு பழ வகை
8. நீதியின் பாற்பட்ட முறைமை
9. பெருத்த
11. சொற்களின் இணைப்பால் உருவாவது
12. உறுதி
14. பஞ்பாண்டவருள் மூத்தவன்
15. இது இல்லையேல் சாதலா?
17. எருதின் ஏரி
19. நீரில் வாழும் உயிரினம்

## நீர் ஒரு வளம்



1. பூமியிலே இயற்கையாகக் கிடைக்கும் மனிதனுக்குப் பயன்படும் பொருள்கள் இயற்கை வளமாகும்.
2. இவ்வாறு மனிதனுக்கு இயற்கை அளிக்கும் பெரும் வளம் தண்ணீராகும்.
3. உயிர்கள் அனைத்தும் விரும்புவது தண்ணீர்.
4. தண்ணீரின்றேல் எந்த உயிரினமும் வாழ முடியாது.
5. குடிதண்ணீரைக் கிணறு குளம் ஆறு மழை நீரூற்றுக்கள் மூலம் பெறுகிறோம்.
6. உலகில் பசுமை நிலைக்க வேண்டுமாயின் நீர் வேண்டும்.
7. விவசாயம் செழிக்க நீர் அவசியம்.
8. நீரின்றி எந்த வேலையையும் செய்ய முடியாது.
9. நீரைத் தாகம் தீர்த்திட, உணவு சமைத்திட, உடலைக் கழுவ, உடைகள் கழுவ, தாவங்களை வளர்க்க பயிர்கள் விளைவிக்க பயன்படுத்துகிறோம்.
10. கைத்தொழில்களிலும் நீர் பெரிதும் பயன்படுகிறது.
11. இதனால் நீரை நாம் வீண்விரயம் செய்யக் கூடாது.
12. நீர்நிலைகளை நாம் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.
13. ஆறு குளங்களில் அழுக்குப் பொருள்களையோ அழுக்கு நீரையோ கலக்கக் கூடாது.
14. ஒரு சிறு துளி நீரும் பெறுமதி மிக்கது என்பதை நாம் உணர வேண்டும்.
15. இதனையே மகாபராக்கிரமபாகு மன்னன் அன்று "மழை நீரில் சிறு துளியேனும் மனித தேவைக்குப் பயன்படாமல் கடலில் கலத்தல் தகாது. ஒரு சொட்டு நீரையும் வீணாக்காது நீர்ப்பாசனம் செய்து நெல் விளைவிப்பேன்" எனக் குறிப்பிட்டுள்ளமையை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.
16. கடல்கள், ஆறுகள் நீர்வீழ்ச்சிகள், நீரூற்றுக்கள் என்பன இயற்கை நீர் நிலைகளாகும்.
17. குளங்கள், வாய்க்கால்கள் நீர்த்தேக்கங்கள் என்பன செயற்கை நீர்நிலைகளாகும்.
18. நீர்நிலைகள் மூலம் தனி மனிதனும் சமூகமும் நாமும் உலகமும் பெறும் பயன்கள் பல.
19. இதனையே திருவள்ளுவரும் நீர் இன்றி அமையாது உலகு" எனக் குறிப்பிட்டார்.
20. கிடைத்தற்கரிய இந்த நீர் வளத்தை நாம் நல்ல முறையில் பயன்படுத்துவோம்.

கீழே உள்ள படத்தில் எத்தனை கைகள் உள்ளன என்பதைக் கண்டுபிடியுங்கள்




## மரபுத் தொடர்கள்

தொன்றுதொட்டு ஆன்றோர்கள் எப்பொருளை எச்சொல்லால் வழங்கி வந்தனரோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபாகும்.

1. அகட விகடம் - தந்திரம்
2. கண் வளர்த்தல் - தூங்குதல்
3. இரண்டு படுதல் - பிரிவுபடுதல்
4. கட்டுக்கதை - பொய்க்கதை
5. உச்சி குளிர்தல் - மகிழ்வடைதல்
6. ஆறப்போடுதல் - காலந்தாழ்த்துதல்
7. கடன்கழித்தல் - மனமின்றிச் செய்தல்
8. இடித்துரைத்தல் - வற்புறுத்திக் கூறுதல்
9. இட்டுக்கட்டுதல் - இல்லாததைச் சொல்லல்
10. ஆழம் பார்த்தல் - ஒருவனைப் பற்றி ஆராய்தல்
11. அமளி செய்தல் - குழப்பம் செய்தல்
12. அள்ளி இறைத்தல்- அதிகமாகச் செலவு செய்தல்
13. அறை கூவுதல் - போருக்கழைத்தல்
14. கண்வைத்தல் - விருப்பம் கொள்ளுதல்
15. கண்ணாயிருத்தல் - கவனமாயிருத்தல்

# மல்லிகைப் பூவில் உள்ள மருத்துவ குணங்களைப் பற்றி அறிவோம்

மருத்துவகுணம் கொண்டது மல்லிகைப் பூ. வயிற்றில் பூச்சி இருந்தால் உங்கள் உடல் மெலிவடைவது மட்டுமின்றி உபாதைகள் உண்டாகுவதோடு, சருமத்தில் வெள்ளைத் திட்டுக்கள் காணப்படும். அப்படியானவர்கள் 4 மல்லிகைப் பூவை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அந்த நீரை அருந்தி வர வயிற்றில் உள்ள கொக்கி புழு, நாடாப் புழு போன்றவை அழியும்.
இந்த அறிகுறிகள் இருப்பவர்கள் மட்டுமல்லாமல் பொதுவாக அடிக்கடி பூச்சி வெளியேற மருந்து சாப்பிடுபவர்கள் தவிர அனைவருமே இந்த மல்லிகைத் தண்ணீரை அருந்தலாம். இதே போல, மல்லிகைப் பூக்களை நிழலில் வைத்து உலர்த்தி, அவற்றை பொடியாக்கி தண்ணீரில் கலந்து குடித்து வர சிறுநீரக கற்கள் தானாகவே கரைந்து போகும்.



வயிற்றில் புண் இருந்தால் வாய்ப்புண் ஏற்படும். இதனை சரிசெய்ய மல்லிகைப் பூவை தண்ணீரில் கொதிக்க வைத்து அது பாதியான பிறகு வடிகட்டி அதனை காலை மாலை என இரு வேளை அருந்தி வர வாய்ப்புண், வயிற்றுப் புண் நீங்கும்.
நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதவர்கள் மல்லிகைப் பூக்கள் ஒன்றிரண்டை உண்டு வர நோய் எதிர்ப்புச் சக்தி உயரும். இது மட்டுமல்லாமல் அவ்வப்போது ஏற்படும் சில உடல் நலப் பிரச்சினைகளுக்கும் மல்லிகை சிறந்த நிவாரணியாக உள்ளது.
மல்லிகைப் பூவிலிருந்து ஒரு வகை எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த எண்ணெய் பல்வேறு உடல் உபாதைகளுக்கு அருமருந்தாக உள்ளது. அடிபட்டாலோ அல்லது சுளுக்குப் பிடித்து வீக்கம் காணப்பட்டாலும், நாள்பட்ட வீக்கமாக இருந்தாலும், மல்லிகைப் பூவை அரைத்துப் பூசினால் வீக்கம் குறையும். உடலில் இந்த எண்ணெயை மசாஜ் செய்யலாம். உடல்வலி நீங்குவதோடு, குளிர்ச்சி அடையும்.
மன அழுத்தம், உடல் சூடு போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள், மல்லிகைப் பூவை வாங்கி தலையில் வைத்தால் மன அழுத்தமும் குறையும், உடல் சூடும் மாறும்.

# யாரெல்லாம் முந்திரிப் பருப்பு சாப்பிடக் கூடாது?

முந்திரிப் பருப்பில் நார்ச்சத்து அதிகம் உள்ளது. இதனைச் சாப்பிடுவதால் அதிக கலோரி ஆற்றலும், நார்ச்சத்தும் கிடைக்கும். ஆனால் முந்திரிப் பருப்பில் கொழுப்புச்சத்து மிக அதிகமாக இருப்பதால், அதிக அளவில் சாப்பிடக் கூடாது. விளையாட்டு, நீச்சல் என அதிக உடல் உழைப்பைக் கொடுக்கும் குழந்தைகள், பதின்ம வயதுப் பருவத்தினர் தினமும் முந்திரிப் பருப்பைச் சரியான அளவில் சாப்பிடலாம். 30 வயதைக் கடந்தவர்கள் அடிக்கடி சாப்பிடக்கூடாது. வயதானவர்கள் முந்திரி சாப்பிடுவதைத் தவிர்க்கலாம்.
குழந்தைகள், பதின்ம வயதுப் பருவத்தினர் நாள் ஒன்றுக்கு 2 முந்திரிப் பருப்பைச் சாப்பிடலாம். 30 வயதுக்கு அதிகமானோர் வாரத்துக்கு ஒரு முறை 2 - 4 என்ற அளவில் சாப்பிடலாம்.
அதிக அளவிலான சத்துகளைத் தரவல்ல உலர் பழங்கள் மற்றும் நட்ஸ்களை வேலைக்குச் செல்வோர் ஒரு சிறிய பாக்ஸில் எடுத்துச்சென்று அலுவலக நேரத்தில் சாப்பிடலாம். குறிப்பாக குழந்தைகளுக்கு ஸ்நாக்ஸாக இதனைக் கொடுத்தனுப்பலாம். இவற்றின் விலை சற்றே அதிகம்தான் என்றாலும், துரித உணவுகளைச் சாப்பிடுவதைக் குறைத்துக்கொண்டு முடிந்த அளவேனும் உடலுக்கு மிகுந்த ஆரோக்கியத்தைக் கொடுக்கும் உலர் பழங்கள் மற்றும் நட்ஸ்களை சாப்பிடலாம்.


## விற்பனைக்குண்டு

**மோட்டார் சைக்கிள்கள்**

1. HONDA DIO - NPBEV - XXXX
2. YAMAHA FZS - NPBEB - XXXX
3. BAJAJ DISCOVER 125 - NPBEX-XXXX
4. BAJAJ PULSAR 180 - NPBET - XXXX
5. YAMAHA FZS - NPBDZ - XXXX

**தொடர்புகளுக்கு : மேனகாந் - 077 060 8074, 077 364 4409**

**TRADE FINANCE AND INVESTMENTS PLC**
NO.233, Stanley Road, Jaffna.
021 221 9997, 021 222 1898

## RP Rent a Car

**கார்கள், வான்கள் நாள், மாத வாடகைக்கு சாரதியுடன் அல்லது சாரதி அல்லாமல் பெற்றுக்கொள்ளலாம்.**
**தொடர்பு - 077 029 5211**

## அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலியில் முற்றிலும் நவீன வசதிகளுடைய (உள்ளக குளியலறைகள்) கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு பல்கலை கழக பெண்கள் விரும்பத்தக்கது.
- 077 386 7458

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியிலிருந்து 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற **தமிழ் மொழித்தினப் போட்டியில் பிரிவு 5 சிறுகதையாக்கம் தேசிய நிலையில் முதலாம் இடத்தைப் பெற்று** தனக்கும் பாடசாலைக்கும் பெருமையீட்டித் தந்துள்ள

**செல்வி காயத்திரி சந்திரநாதன்**

அவர்களைப் பாராட்டுவதோடு அவரை பயிற்றுவித்த ஆசிரியர் அவர்களையும் பாடசாலைச்சமூகம் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**வாழ்த்துவோர் - பாடசாலைச்சமூகம்,**
**யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் ஏழு வருடங்களாக பௌதீகவியல் ஆசிரியராகவும் பின்னர் பிரதி அதிபராகவும் சிறப்பாகக் கடமையாற்றி இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் 111 (SLEAS -111) போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்து இன்று (26.09.2017) செவ்வாய்க்கிழமை BMICH இல் நடைபெறும் நிகழ்வில் நியமனத்தைப் பெற்றுக்கொள்ளும்

**திரு. வி.மதிதரன்**

அவர்கள் தனது வாழ்வில் மேலும் பல சிறப்புக்கள் பெற்று வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

Congratulations

**ஆசிரியர் கழகம்,**
**யா/விக்ரோறியாக்கல்லூரி சுழிபுரம்.**

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1401 சீட்டிழுப்பு திகதி 2017.09.25
வெற்றி இலக்கங்கள் 20 38 46 66 H
07 09 11 22
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 10,754,848/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 26
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2017.09.25
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,198,495/-
வெற்றி இலக்கங்கள் 31 46 61 62 H
05 07 14 72
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## SUPER BALL


உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 707
சீட்டிழுப்பு திகதி 25.09.2017 திங்கட்கிழமை
Y 29 30 33 53
சுப்பர் ஜக்பொட் ரூ. 40, 240, 872/=
19 31 49 73
பச்சை நிற டிக்கட்டுகள் 2017.09.28 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2934 திகதி 25.09.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து 25 31 38 60 Z
போனஸ் இல. 47
புதன் கிழமை ஜக்பொட் 43, 411, 965/-
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 52 56 68 69
ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.09.27 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## மரண அறிவித்தல்

மண்ணில் 03 12 1940



விண்ணில் 23 09 2017

### அமரர் இராஜரட்ணம் ஜெயந்திரா

ஓய்வு பெற்ற ஊழியர் (Samuel & Sons Jaffna)

யாழ்ப்பாணம் அரியாலையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. இராஜரட்ணம் ஜெயந்திரா அவர்கள் 23.09.2017 அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலம் சென்றவர்களான இராஜரெட்ணம் பூரணம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலம் சென்றவர்களான பொன்னம்பலம் - பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலம் சென்ற அன்னலெட்சுமியின் பாசமிகு கணவரும் ஆவார். இந்திரபானு, காலம்சென்ற இந்திரறூபன், தர்சினி, சுபாஜினி, சாமினி, வினோத் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பேபிரஜி, சுசில்,இராஜயோகன் (ரமேஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சிந்தியா, சந்தியா, ஹரி, ஸ்ரேனியா, ஸ்ரேயோன், கிஸோர், ஹிரிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். காலம் சென்ற ராஜேந்திரா மற்றும் மகேந்திரா, சந்திரா, சந்திரிக்கா, சுகிர்தா, சுலேன் ஆகியோரின் அருமைச் சகோதரனும், இரத்தினம் காலம் சென்றவர்களான மயில்வாகனம், பரமேஸ்வரி, தங்கராஜா மற்றும் ஜெகதாம்பிகை, பவானி செல்வராஜா, பாலாம்பிகை ஆகியோரின் மைத்துனரும், காலம் சென்றவர்களான அன்னம்மா, பரமசாமியின் சகலனும் காலம்சென்ற தியாகராஜா - குணவதி, பிரேனுஷ்ராஜன் - லூடுபெர்னான்டோ, யோகரத்தினம் - யோகேஸ்வரி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. 27.09.2017 புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி மதியம் 2.00 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர், இல. 46, 2/2, I.B.C Road, Wellawatte, Colombo - 06, Tel: 0112360235 M: 0776460002

# பிடிவாதத்தை அதிகரிக்கும் தூக்கமின்மை

உடலுக்கு உணவு எத்தனை அவசியமோ, அந்த அளவு மூளைக்குத் தூக்கம் அவசியம்.10 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குப் போதுமான தூக்கம் கிடைக்காவிட்டால் கோபம், பிடிவாதம் அதிகமாகும். இதனால் சககுழந்தைகளோடு விளையாடுவதைத் தவிர்ப்பார்கள், பள்ளி செல்ல மறுத்து அடம்பிடிப்பார்கள். வீட்டில் தூக்கம் கிடைக்காததால் வகுப்பறையில் தூங்கி விழுவார்கள். மந்தமாக இருப்பது, எதிலும் ஈடுபாடு இல்லாமல் இருப்பது, பள்ளியில் தூங்குவதுபோன்ற அறிகுறிகளும் வெளிப்படும். வளர் இளம்பருவத்தில் இருப்பவர்களுக்கு மன அழுத்தம், கவனக்குறைவால் வாகன விபத்து போன்றவையும் ஏற்படலாம்.

இந்தப் பிரச்சினைகளைத் தவிர்க்க குழந்தைகள் போதுமான அளவு தூங்குகிறார்களா என்பதைப் பெற்றோர் கவனிக்க வேண்டும். இரவு 10 மணிக்குள் தூங்குவதற்குப் பழக்கப்படுத்தவேண்டும். இதுபோன்ற தூக்கமின்மையின் அறிகுறிகள் தெரிந்தால் மனநல மருத்துவரிடம் ஆலோசனைபெற்றுக் கொள்ளவேண்டும்.

## மரண அறிவித்தல்

### சின்னையா சரவணமுத்து

(ஓய்வூதியர் - தொலைத்தொடர்பு திணைக்களம்)

யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கு, மணியகாரன் வீட்டடியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் கனடாவில் வசித்தவருமான சின்னையா சரவணமுத்து (ஓய்வூதியர் - தொலைத்தொடர்பு திணைக்களம்) (22.09.2017) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் புத்திரரும் காலஞ்சென்ற பசுபதிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற சாந்தநாயகியின் அன்புக்கணவரும் ரஞ்சநாயகி (கனடா), சியாமளதேவி (கனடா), சாந்தினி (கனடா), இளஞ்செழியன், இளந்திரையன் (ஜேர்மனி) காலஞ்சென்ற செல்வநாயகி ஆகியோரின் அன்புத்தந்தையும் கோபாலப் பிள்ளை, லோகநாதன், வரித்தேவன், விஜிதா, பாமா ஆகியோரின் மாமனாரும் ரிகரன், பிரதீபன், கௌசி, பிரகாஸ், நிஷா, அனுசன், லக்சன், நிவேதா, அஜிதா, ஜெனிசன், நிரோசன், பார்கவி, பிரவீன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, பாக்கியம், பூமணி ஆகியோரின் சகோதரரும் தேவநாயகம் காலஞ்சென்ற இலங்கை நாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


0061 478 744597 (சாந்தினி),
0061 479 495223 ரஞ்சநாயகி (இந்துமதி),
0014 168 442853 ( சியாமளதேவி)

தகவல்:
ப. தேவநாயகம்(J.P)

## மரண அறிவித்தல்

### குமாரசாமிஐயர் இராமகிருஷ்ணசர்மா

(சுப்பா ஐயா - பாக சாஸ்திரர்)



அச்செழுவைப் பிறப்பிடமாகவும், வறுத்தலைவிளானை வசிப்பிடமாகவும் நுணாவில் மணங்குணாய் பிள்ளையார் கோயிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமிஐயர் இராமகிருஷ்ண சர்மா (25.09.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமிஐயர் - ரங்கம்மா தம்பதியரின் அன்புமகனும் வறுத்தலைவிளான் மருதடி பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணிய ஐயர் - கமலாம்பிகை தம்பதியரின் அன்புமருமகனும் ஸ்ரீமதி கலாநிதி அவர்களின் அன்புக்கணவரும் கஜராஜக்குருக்கள் (நுணாவில், மணங்குணாய் பிள்ளையார் கோயில்), கஸ்தூரி, கஜந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மாதுளசர்மா (அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்), கிருத்திகசர்மா (கைதடி) ஆகியோரின் அன்புமாமனாரும் சிதம்பரேஸ்வரசர்மா (அச்செழு), தவளாம்பிகை ஆகியோரின் சகோதரரும் சண்முகநாதசர்மா (வறுத்தலைவிளான்) முருகானந்த சர்மா (யாழ்ப்பாணம்), குகதாஸ் சர்மா (ஊரெழு), மகேஸ்வரக்குருக்கள் (கொழும்பு), இராஜேஸ்வரசர்மா (வறுத்தலைவிளான்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் பத்மாசினி, கஜவர்சன், சண்ஜினி, சாய்ஹரி, ஜாதனா, மதுஷயன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நுணாவில் மணங்குணாய் பிள்ளையார் கோயிலடியில் அமைந்துள்ள இல்லத்தில் இன்று (26.09.2017) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி
077 664 6691, 077 711 0874

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சண்முகநாதன்



பங்களா வீதி, சாவகச்சேரி வடக்கு, மீசாலையைச் சேர்ந்த திருமதி சரஸ்வதி சண்முகநாதன் நேற்று (25.09.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களானநமசிவாயம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் சண்முகநாதனின் மனைவியும் காலஞ்சென்ற சிதம்பரம் மற்றும் பரமேஸ்வரி, சதாசிவம் ஆகியோரின் அன்புச்சகோதரியும்பாலகிருஷ்ணன், செல்வராணி, சிரோன்மணி, சுமதி (பிரதேச செயலகம், தென்மராட்சி), பாலபாஸ்கரன், சுதாமதி (சுவிஸ்), சுகந்தினி (சுவிஸ்), காலஞ்சென்ற சுபாசினி மற்றும் சண்முககரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் பரமேஸ்வரி, தவரத்தினம், ஜெயசிங்கம், காலஞ்சென்ற குலசபாநாதன் பவானி, சூரியகுமாரன் (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), காலஞ்சென்ற நகுலேந்திரன் மற்றும் வைதினி ஆகியோரின் அன்பு மாமியும் ஜசிதரன் (அதிபர், கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை), ஜதீஸ்வரன் (லண்டன்), ஜசித்தா (விவசாயத் திணைக்களம், பரந்தன்), ஜசிந்தா (லண்டன்), கேசன், புஷ்பகரனி (லண்டன்), கபிலா (லண்டன்), கோகிலவதனன் (பிரதேசசபை, வவுனியா தெற்கு), கஸ்தூரி (பிரதேச செயலகம் பூநகரி), துஷ்யந்தன், கோபிசாந், நதிக்கா (கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு கொழும்பு), சுரேன்ராஜ் (டயலொக் யாழ்ப்பாணம்), பகீரதன், காசினி (பிரான்ஸ்), நிந்துசன், நிதுசன், நிமல்ராஜ், சியானா (சுவிஸ்), ஜெறோன்(சுவிஸ்), சுசாந் (சுவிஸ்), சுவேண் (சுவிஸ்), ஸ்ரீஇந்திரஜித் (அஜித்), சண்ஜா, சண்சனா, சரண்ஜா, சரண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.09.2017) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப.11.00 மணியளவில் பூதவுடல் சாவகச்சேரி, கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பங்களா வீதி,
சாவகச்சேரி வடக்கு, மீசாலை.**

தகவல்:
குடும்பத்தினர்.

## அரசியல்...

துள்ளனர். வவுனியா மேல் நீதிமன்றில் கடந்த 4 வருடங்களாக இடம்பெற்று வந்த வழக்கை, அநுராதபுரம் மேல் நீதிமன்றுக்கு இடமாற்றுமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தால் கடந்த 13ஆம் திகதி, வவுனியா மேல் நீதிமன்றுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இதற்கு அமைவாக வவுனியா மேல் நீதிமன்றில் நேற்று எடுக்கப்பட வேண்டிய வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றிலேயே எடுத்துக் கொள்ளப்பட்டது. அரச சட்டத்தரணி மன்றில் முன்னிலையாகவில்லை.

மொழிப் பிரச்சினை காரணமாக வழக்கு விசாரணையை இங்கு எடுத்துக் கொள்வதில் எமக்கு உடன்பாடில்லை என்று அரசியல் கைதிகள் மன்றில் தெரிவித்துள்ளனர். அதற்கு நீதிபதி, இவர்கள் கேட்டுக் கொண்டாலும், சட்டமா அதிபர் இந்த வழக்கை இங்கே எடுக்கக் கேட்டுள்ளமையால் விசாரிக்கப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சட்டத்தரணி இருக்கா என்று அரசியல் கைதிகளிடம் மன்று வினவியது. அதற்கு அவர்கள் இல்லை என்று பதில் வழங்கியதும், சட்டத்தரணியைக் கொண்டு வர எத்தனை நாள்களாகும் என்று நீதிபதி கேட்டுள்ளார். அதற்கு அரசியல் கைதிகள் பதில் வழங்கவில்லை. இதன் பின்னர், எதிர்வரும் 2ஆம் திகதி வழக்கு எடுத்துக் கொள்ளப்படும். சட்டத்தரணியைக் கொண்டு வராவிடின், அரச செலவில் சட்டத்தரணியை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதிபதி தெரிவித்தார்.

இதேவேளை, அரசியல் கைதிகள் மூவரும் அநுராதபுரம் சிறைச்சாலையில் நேற்றுக் காலையிலிருந்து உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (வ-5)

## அதியுச்ச...

ருந்தார். அதியுச்ச அதிகாரப் பகிர்வு என்பது வரவேற்கப்பட வேண்டும். அரசின் இந்த முயற்சியை நாம் பாராட்டுகின்றோம்.

வெறும் வாய் மொழியாக மட்டுமல்லாமல், முறையாக இதனை ஆவணம் செய்து சட்டரீதியாக நடைமுறைப்படுத்தும் போதுதான் அதற்கான முழு வெற்றியை அரசு பெற்றுக் கொள்ள முடியும் - என்றார். (வ-5)

## 17 கிலோ...

என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.பிரியந்தவின் வழிகாட்டலில் பருத்தித்துறைப் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்தனர்



என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்றும், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ற-10, 26, ரி2)

## அதிகாரப்...

பிரிவினைவாத சக்திகளுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும், பௌத்த மதத்தை அழிக்கும் வகையிலும் இருப்பதாக மகிந்த அணி தொடர்ச்சியாக பொய்ப் பரப்புரை மேற்கொண்டு வருகின்றது.

அவ்வாறான எந்தவொரு முயற்சிகளையும் அரசு முன்னெடுக்கவில்லை. பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம் என்ற கருத்தில் ஒருபோதும் மாற்றம் இல்லை. பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்கி, ஒருமித்த நாட்டினுள் அதிகாரப் பகிர்வை முன்னெடுக்கவே அரசு முயற்சிக்கின்றது. அதற்காகவே நாம் புதிய அரசமைப்பை உருவாக்க முயற்சித்து வருகின்றோம்.

வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற கருத்துத் தொடர்பில் இதுவரையில் அரசு எந்தவித கலந்துரையாடலையும் முன்னெடுக்கவில்லை. அதற்கான வாய்ப்புக்களும் இல்லை. தமிழர் தரப்பும் இதுவரையில் வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து அரசுடன் பேச்சுக்களை முன்னெடுக்கவும் இல்லை.

அதிகாரப் பகிர்வு மூலமாக நாட்டைத் துண்டாடவோ அல்லது வடக்கு - கிழக்கு இணைப்பின் மூலமாக தனி ஈழத்தை உருவாக்கிக் கொடுக்கவோ எவரும் திட்டம் தீட்டவில்லை. அரசியல் இனவாதிகள் தமக்குச் சாதகமான வகையில் இந்த விவகாரத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். பௌத்த மதத்தை வைத்து இவர்கள் பரப்புரை மேற்கொள்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிறுபான்மைக் கட்சிகள் அனைத்துமே பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தே அரசமைப்பை உருவாக்க வலியுறுத்தி வருகின்றனர். தமிழ்த் தலைமைகள் தீர்வை மட்டுமே எதிர்பார்த்துச் செயற்படுகின்றார்களே தவிர இனவாதமாகச் செயற்படவில்லை.

தமிழ் தலைமைகளின் பெருந்தன்மையை சிங்களத் தலைமைகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சில சிங்களத் தலைமைகள் மாகாநாயக்க தேரர்களைச் சந்தித்துத் தவறான கருத்துக்களை முன்வைக்கின்றனர் - என்றார். (வ-5,31)

## கிடைக்காத...

யுச்ச அதிகாரப் பகிர்வுக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டமையானது எமக்கு கிடைத்த இறைவனின் கொடை.

நான் ஒரு அரசியல்வாதி அல்ல. நாட்டில் உள்ள அனைத்து மக்களும் அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் வாழவேண்டும் என்று நினைக்கிற ஒருவன்.

இதுவரை காலமும் தனி நாடு கோரி போராடி வந்தாலும் நாம் அதனைத் தற்போது கேட்க முடியாது. அதனைக் கேட்டாலும் இவர்கள் தரப்போவதில்லை. இந்த நிலையில் தற்போது கிடைக்க உள்ள அதியுச்ச அதிகாரப் பகிர்வை நாம் இறைவனின் ஒரு கொடையாகப் பார்க்க வேண்டும்.

அதிகாரங்களை வழங்கிவிட்டு பின்னர் அவர்களுக்குத் தேவையானவாறு அதனைத் திரும்பப் பெற்றுக்கொள்ளாதவாறு திருத்தம் செய்யப்பட வேண்டும்.

வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் கிடைக்காத ஒன்றைக் கேட்டுக்கொண்டிருக்கிறார் - என்றார். (வ-5)

## இறக்குமதியாகும்...

எடுக்குமாறு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நிதி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

உள்நாட்டு பெரிய வெங்காய உற்பத்தியாளர்கள் தமக்கான சந்தை வாய்ப்பை பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களின் சிரமத்தைக் கருத்திற் கொண்டும் அவர்களின் உற்பத்திகள் உள்நாட்டுச் சந்தையில் அதிக வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திலும் இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அரச தலைவர் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் வரியை நூறுவீதம் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (வ-5,31)

## இனத்தையும்...

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தாயார் காலமானதையடுத்து அங்கு அஞ்சலி செலுத்தச் சென்றிருந்தவேளை மகிந்த ராஜபக்சவும் மாவை சேனாதிராசாவும் சந்தித்துக்கொண்டனர்.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ளதால் அதற்கு மகிந்த ராஜபக்ச தலைமையிலான தரப்பினர் ஆதரவளிக்கவேண்டும் எனவும், மகிந்தவின் ஒத்துழைப்பு இதற்குத் தேவை எனவும் மாவை சேனாதிராசா கேட்டுக்கொண்டார்.

இதன்போதே மேற்கண்டவாறு பதிலளித்த மகிந்த ராஜபக்ச, நாட்டையும் இனத்தையும் எவருக்கும் தாரைவார்க்க முடியாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

"இடைக்கால அறிக்கையில் பௌத்த மதம் தொடர்பான விதந்துரையை வாசித்தேன். அதற்கு மேல் அறிக்கையை வாசிக்க என் மனம் இடம் கொடுக்கவில்லை. என்ன காரணத்துக்காகவும் நாட்டையும் இனத்தையும் நான் விட்டுக்கொடுக்கமாட்டேன். தமிழ், முஸ்லிம் மக்களுக்கு நான் எதிரானவன் அல்லன். அவர்களை நான் நேசிக்கிறேன். ஆனால், எனக்கு இந்த நாடுதான் முக்கியம். அதில் எந்த சமரசத்துக்கும் இடமில்லை" என்று திட்டவட்டமாக மாவை.சேனாதிராசாவிடம் மகிந்த கூறியுள்ளார். (வ-5)

## எரிந்த...

டைய சடலம் அங்கு மீட்கப்பட்டது. உடல் முழுதும் தீயில் எரிந்துள்ளது.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் சடலத்தைப் பார்வையிட்டார். சடலம் அடையாளம் காணப்படவில்லை.

சடலம் மன்னார் பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. விசாரணை முன்னெடுக்கப்படுகிறது" என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,56)

## புதிய...

போது உண்மையிலே அரசு புதிய அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ளுமா? என்ற சந்தேகம் எழுகின்றது.

இவ்வாறு மகிந்த அரசின் காலத்தில் தீர்வு முயற்சிகளில் ஈடுபட்ட அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்துக் கட்சிக் குழு 3 வருடங்களில் 127 கூட்டங்களை நடத்தி அனைத்துக் கட்சித் தலைவர்களும் இணங்கக்கூடிய பல தீர்மானங்களை மேற்கொண்டிருந்தது. எமது தீர்மானங்களை வைத்துக் கொண்டு புதிய அரசமைப்புத் தயாரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்து அதனை அப்போதைய அரச தலைவர் மகிந்தவிடம் கையளித்தோம். அது இடம்பெறாதமையையிட்டுக் கவலையடைகின்றேன்.

அரசின் புதிய அரசமைப்புத் தயாரிப்பு நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, இரண்டரை வருடங்கள் கடந்தும் அனைத்துக் கட்சிகளினது இணக்கப்பாட்டுடன் எந்தத் தீர்மானத்துக்கும் வரமுடியாமல் போயுள்ளது. கூட்டு அரசு அதிகாரத்துக்கு வந்து 6 மாதங்களில் புதிய அரசமைப்புத் திருத்தத்தை முன்வைப்போம் என்றும், இரண்டு முதன்மைக் கட்சிகளும் இணைந்திருப்பதால் இதனை வெற்றிகரமாக செய்துமுடிக்கலாம் என்றும் தெரிவித்திருந்தது.

வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையை நாடாளுமன்றத்துக்கு அரசு சமர்ப்பித்திருந்தது. அதில் மேற்கொள்ளப்பட்டிருந்த திருத்தங்கள் அந்தக் குழுவில் அங்கம் அகிக்கும் அனைவரது இணக்கப்பாட்டுடன் தயாரிக்கப்பட்டதாக தலைமை அமைச்சர் தெரிவித்துள்ளார். ஆனாலும் அவர்கள் அனைவரையும் ஒரு நிலைப்பாட்டுக்குக் கொண்டுவர முடியாமல் போயுள்ளது. அரசின் நடவடிக்கைகளை பார்க்கும்போது உண்மையிலே அரசு புதிய அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ளுமா? என்ற சந்தேகம் எழுகின்றது.

அரசு நாட்டில் இருக்கும் இன, மதப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தருவதாக தெரிவித்துத் தேர்தலில் வாக்குகளை பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில்தான் அரசமைப்புத் திருத்தத்தைக் காட்டிவருகின்றது. மாறாக அதனை செய்து முடிக்கவேண்டும் என்ற தேவை இருப்பதாகத் தெரியவில்லை - என்றார். (வ-5,31)

## ஈ.பி.ஆர்.எல்.எப்...

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன் மற்றும் வியாழேந்திரன் இருவரும் மாகாண சபைகள் திருத்தச் சட்ட வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. கூட்டமைப்பில் இருந்து கொண்டும் கொள்கையில் உறுதியாக இருக்கும் அவர்கள் இருவருக்கும் கட்சி பேதமின்றி பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 20ஆம் திகதி, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, மாகாணங்களுக்கு அதிகாரப்பகிர்வை ஆதரிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மாகாண சபை தேர்தல்களை பிற்போட்டு அவற்றின் வினைத்திறனான செயற்பாடுகளை வலுவிழுக்கச் செய்யும் திருத்தச் சட்டவரைவை ஆதரித்தது ஏன்? என்று கேள்வி எழுப்பி கீச்சகத்தில் பதிவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-5,31)

## சமையல்...

அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் அனுமதியுடன் இந்த விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று எரிவாயு நிறுவனங்கள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன. (வ)

## இளம்...

தெரிவிக்கப்பட்டது.

கெருடாவிலைச் சேர்ந்த துரைராஜா ரஜீவ் (வயது - 35) என்பவரே படுகாயமடைந்தார். கூலி வேலைக்குச் சென்றுவரும் இவர் நேற்றிரவு 8 மணியளவில் தனது வீடு நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தபோது வாள் வெட்டு நடத்தப்பட்டது. 2 மோட்டார் சைக்கிள்களில் வந்திருந்த 4 பேர் கொண்ட கும்பலே இந்தத் தாக்குதலை நடத்தியது என்று தெரிவிக்கப்பட்டது.

"அந்தக் கும்பல் முதலில் கொட்டனால் குடும்பத் தலைவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. அவரது வீட்டுக்கு அருகில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. அவர் எழுப்பிய அவலக் குரலால் அயலிலுள்ளவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தபோது தாக்குதல் நடத்திய கும்பல் தாம் கொண்டு வந்திருந்த வாளால் அவரை வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது. கை, கால் மற்றும் முகம் ஆகிய இடங்களில் அவருக்கு வெட்டுக் காயங்கள் ஏற்பட்டுள்ளன" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (வ-4,9,5)

## தியாக தீபம்...

யாழ்ப்பாணம் செப். 25

அமைதிப் படையாகக் காலடி எடுத்து வைத்து ஆக்கிரமிப்புப் படையாக மாறி ஈழத் தமிழர்களை வேட்டையாடி சூறையாடி அழித்தொழித்த இந்திய இராணுவத்துக்கு எதிராக அகிம்சை வழியில் 12 நாள்கள் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வீரச்சாவடைந்த லெப். கேணல் தியாக தீபம் திலீபனின் 30ஆம் ஆண்டு நினைவேந்தலின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று இடம்பெற உள்ளன.

நல்லூர் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வுகள், முற்பகல் 10.15 மணியளவில் ஆரம்பமாகும். பொது மக்கள், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் துறை சார்ந்தவர்கள் மற்றும் பொது அமைப்புக்களையும் கலந்து கொள்ளுமாறு தியாகி திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது. (வ)

## வடக்கு...

வைப்போம்" இவ்வாறு கூட்டு அரசு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சர் நிராகரித்துள்ள நிலையில் அரசின் நிலைப்பாடு என்ன என்று, கூட்டு அரசின் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடைக்கால அறிக்கை தொடர்பில் பல வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். அனைத்து நடவடிக்கைகளுக்கும் எதிர்ப்பு தெரிவிப்பது அவரின் வழக்கமாக உள்ளது. இருந்தபோதிலும் புதிய அரசமைப்பு தயாரிப்புப் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை. இறுதித் தீர்மானத்தின் போது சி.வி.விக்கினேஸ்வரனின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம். வடக்கு முதல்வரின் இணக்கத்துடனேயே அரசமைப்புக் கொண்டு வரப்படும்.

புதிய அரசமைப்பை பொது வாக்கெடுப்புக்கு விடவேண்டும் என்று மகாநாயக்க தேரர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரிய வருகின்றது. மக்களின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே அரசமைப்பை நிறைவேற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது.

சுதந்திரக் கட்சி மாத்திரம் பொது வாக்கெடுப்புக்கு எதிராக உள்ளது. இது தொடர்பாக தொடர்ந்தும் சுதந்திரக் கட்சியுடன் பேச்சு நடத்தி வருகின்றோம். அதன் இணக்கத்துடனே நாம் அரசமைப்புக்கான பொது வாக்கெடுப்பை நடத்துவோம்.

எவ்வாறாயினும் புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றும் போது பொது வாக்கெடுப்புக்கான விடயங்களை திருத்தம் செய்யவும் வாய்ப்புள்ளது. புதிய அரசமைப்புக்கு மக்களின் ஒப்புதல் பெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு ஆகும். இந்த நிலைப்பாட்டுக்கு சுதந்திரக் கட்சியும் வரும் என்று நம்புகின்றோம். எவ்வாறாயினும் அனைத்து கட்சிகளினதும் சமூகத்தவர்களினதும் இணக்கத்துடன் புதிய அரசமைப்பைக் கொண்டு வருவோம் - என்றார். (வ-5)

## ஆவரங்கால் மத்தி சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 26
அமரர் வி.சிவகுருநாதன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றியது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது. ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரண்டு செற்களையும் முறையே 25:13, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது இந்து இளைஞர் அணி. அடுத்த இரண்டு செற்களையும் 25:20, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி செற் கணக்கை 2:2 என்றாக்கியது ஆவரங்கால் மத்தி. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் ஐந்தாவது செற்றில் 15:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்திய அணி 3:2 என்ற செற் கணக்கில் கிண்ணம் வென்றது.

(ம-108)





## செந்தமிழ் சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 26
புதுக்குடியிருப்பு விக்னேஸ்வராவின் வெற்றிக் கிண்ணத்தைக் கைப் பற்றி அசத்தியுள்ளது உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகம்.
புதுக்குடிப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் குறித்த கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. உடுப்புக்குளம் அலையோசை விளையாட்டுக் கழகமும் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகமும் மோதின.
ஆட்டத்தின் 25ஆவது நிமிடத்தில் செந்தமிழின் முன்னணி வீரர் யூட் முதல் கோலைப் பதிவுசெய்ய 1:0 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் அணி ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாவது பாதியில் மாற்றங்கள் நிகழவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது செந்தமிழ் அணி. யூட் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

(ம-23-108)

## இன்றைய மோதல்கள்

**திருக்குமரனின் கால்பந்தாட்டம்**

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கலைமதி வி.க. கால்பந்தாட்டம்**

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழகமும், மாலை 5 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

(ம-23-108-422)

## வென்றது பற்றிக்ஸ்

யாழ்ப்பாணம், செப். 26
இலங்கை பாடசாலைகளின் கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் 18வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.
சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பற்றிக்ஸை எதிர்த்து கொழும்பு லுமினிக் கல்லூரி அணி மோதியது.
ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியின் சார்பாக முதலாவது கோல் பதிவானது. இரண்டாவது பாதியின் இரண்டாவது நிமிடத்தில் பற்றிக்ஸின் சார்பாக இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார் சாந்தன். 25ஆவது நிமிடத்தில் அபிசன், 26ஆவது, 30ஆவது நிமிடங்களில் சாந்தன், 35ஆவது நிமிடத்தில் உருத்திரன், அடுத்தடுத்துக் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

(ம-23)

## இந்திய அணி முதலிடம் பிடித்தது



ஒருநாள் ஆட்டங்களுக்கான பன்னாட்டுத் தரப்படுத்தலில் இந்திய அணி முதலிடம் பிடித்துள்ளது.
ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் இந்திய அணி வெற்றிபெற்று தொடரில் 3:0 என்று முன்னிலையில் உள்ளது. இந்தத் தொடர் வெற்றிகளை அடுத்து அந்த அணி தரப்படுத்தலில் முதலிடம் பிடித்துள்ளது.
இந்திய அணி 120 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. தென்னாபிரிக்க அணி 119 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், ஆஸ்திரேலிய அணி 114 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், இங்கிலாந்து அணி 113 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், நியூசிலாந்து 111 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளன.
ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், ஆப்கானிஸ்தான் ஆகிய அணிகள் உள்ளன.

(ம)

## பாடும்மீன் அணி அரையிறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், செப். 26
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது குருநகர் பாடும்மீன் அணி.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 7ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணியின் முதல் கோல் பதிவானது. 27ஆவது நிமிடத்தில் பாடும்மீன் அணியின் இரண்டாவது கோல் பதிவானது. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பாடும்மீன் அணி.

(ம-23)

## அன்ரனிஸ், பொம்மர்ஸ் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், செப். 26
நவிண்டில் கலைமதி விளை யாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். அன்ரனிஸ், பொம்மர்ஸ் அணிகள் வெற்றிபெற்றன.
கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றது.
இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் பொம்மர்ஸ் அணி வெற்றிபெற்றது.

(ம-108-23)

# சக்திவேல் கழகத்தின் கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 26
கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.

முதலாவது ஆட்டத்தில் செம்பியன்பற்று சென். பிலிப்புநேரியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:3 என்ற கோல் கணக்கில் சென். பிலிப்புநேரியர் அணி வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக சென். பிலிப்நேரியர் அணியின் றெசீம்ராஜ் தெரிவானார்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு சூப்பர் ராங் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் றேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக றேஞ்சர்ஸ் அணியின் மதுசாந் தெரிவானார்.

பிறிதொரு ஆட்டத்தில் கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கட்டைக்காடு சென். மேரிஸ் விளையாட்டுக் கழக 'ஏ' அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல் எதுவும் பதிவு செய்யப்படாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் திருநகர் அணி வெற்றிபெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல் எதுவும் பதிவு செய்யப்படாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் செபஸ்ரியன் விளையாட்டுக் கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியது இங்கிலாந்து



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் அபார வெற்றிபெற்றது இங்கிலாந்து.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி மொயின் அலியின் அபார ஆட்டத்தால் 9 இலக்குகளை இழந்து 369 ஓட்டங்களைப் பெற்றது. மொயின் அலி 102 ஓட்டங்களை விளாசினார். இந்த ஓட்டங்களைப் பெறுவதற்கு வெறும் 57 பந்துகளே அவருக்குத் தேவைப்பட்டன. 7 பவுண்டரிகள், 8 சிக்சர்கள் அடங்கலாக இந்த ஓட்டங்களை அவர் பெற்றார். மொயின் அலியை விட ரூட் 84 ஓட்டங்களையும், ஸ்ரோக்ஸ் 73 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கம்மின்ஸ் 3 இலக்குகளையும், கோல்டர் 2 இலக்குகளையும், ரெய்லர், நேர்ஸ், பவல் மூவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகளுக்கு அந்த அணியின் ஆரம்ப வீரரான கெய்ல் அதிரடியாக விளையாடி நம்பிக்கை கொடுத்த போதிலும், ஏனைய வீரர்கள் பெரியளவில் பிரகாசிக்கவில்லை. கெய்ல் 94 ஓட்டங்களுடன் ரண்அவுட் முறையில் ஆட்டமிழக்க 245 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 124 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது மேற்கிந்தியத் தீவுகள். பந்துவீச்சில் பிளங்கெட் 5 இலக்குகளையும், ரசிட் 3 இலக்குகளையும், வில்லி ஒரு இலக்கையும் கைப்பற்றினர். மொயின் அலி ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)



## றேஞ்சர்ஸ் அரையிறுதியில்

யாழ்ப்பாணம், செப். 26
சக்திவேலின் கால்பந்தாட்டத் தொடரில் அரையிறுதிக்கு தெரிவு செய்யப்பட்டது கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்.

கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் காலிறுதி ஆட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து வெற்றிலைக்கேணி சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழகம் மோதியது. ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே செபஸ்ரியன் அணியின் சார்பாக முதல் கோல் பதிவானது. எனினும், தொடர்ந்து அசத்தலாக ஆடிய றேஞ்சர்ஸ் அணி முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. சிவரோயன் 2 கோல்களையும், ஆர்த்தீகன், சுரேஸ்பான் இருவரும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தனர். ஆட்டநாயகனாக றேஞ்சர்ஸ் அணியின் சிவராயன் தெரிவானார். (ம-108)

## பாரதி, சிலையடி அணிகள் அபாரம்

யாழ்ப்பாணம், செப். 26
மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் பொலிகை பாரதி, அண்ணா சிலையடி அணிகள் வெற்றிபெற்றன.

சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக பொலிகை பாரதி அணியின் நிதர்சன் தெரிவானார்.

இரண்டாவது ஆட்டத்தில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யங் ஹென்றிஸ் அணி மோதியது. இதில் அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக அண்ணா சிலையடி அணியின் ரசிகன் தெரிவானார். (ம-23)

# கோக்லி சிறந்த தலைவராக உருவெடுத்ததில் டோனியின் பங்களிப்பு மிகவும் அதிகமானது

## வோர்ணர் புகழாரம்

"இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி, மிகச் சிறந்த தலைவராக உருவெடுக்க டோனியின் பங்களிப்பு மிகவும் அதிகமாக உள்ளது" என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் துணைத் தலைவர் டேவிட் வோர்ணர்.

கோக்லி தலைமைத்துவத்தைக் கையிலெடுத்த பின்னர் அவருக்கு மிகச் சிறந்த உதவிகளை வழங்கி வருகிறார் டோனி. களத்தடுப்பு வியூகங்கள், மறுபரிசீலனை முறையை பயன்படுத்துதல் ஆகியவற்றில் டோனியின் ஆலோசனைகள் கோக்லிக்கு முக்கியத்துவம் மிக்கனவாக இருக்கின்றன. கோக்லி, டோனியின் கூட்டு முயற்சிகளை சில ஊடகங்கள் 'இந்திய அணிக்கு தற்போது இரண்டு தலைவர்கள்' என்றும் குறிப்பிட்டு எழுதியுள்ளன. இதையடுத்து வோர்ணர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

"டோனி தனது தலைமைத்துவக் காலத்தில் மிகவும் அமைதியான வீரராகச் செயல்பட்டார். இதனால் அமைதியான தலைவர் என்ற பெயரைப் பெற்றார். தலைவராகப் பல சாதனைகளைப் படைத்து சிறந்து விளங்கினார். அந்தப் பணியை தற்போதும் செய்து வருகிறார். விராட் கோக்லியை சிறந்த தலைவராக வளர்த்து வருகிறார். முன்னாள் தலைவரொருவர் தனக்கு அடுத்ததாக ஒருவரை அடையாளம் கண்டு அவரை வழிநடத்தி விடுவது மிகச் சிறப்பான விடயம். அனைவராலும் அது இயலாதது. ஆனால் டோனியால் அது முடிகிறது. விராட் கோக்லி அதிக அளவில் தோல்விகளைச் சந்தித்த தலைவர் இல்லை. அணி தோல்வியைச் சந்தித்து வரும்போது தான் உண்மையான சவால்கள் அவரை எதிர்நோக்கும். கோக்லியின் தலைமைத்துவம் பற்றிக் கருத்துத் தெரிவிக்க இன்னும் சிலகாலம் செல்ல வேண்டும்" என வோர்ணர் மேலும் தெரிவித்தார். (ம)



முன்னாள் தலைவரொருவர் தனக்கு அடுத்ததாக ஒருவரை அடையாளம் கண்டு அவரை வழிநடத்தி விடுவது மிகச் சிறப்பான விடயம். அனைவராலும் அது இயலாதது. ஆனால் டோனியால் அது முடிகிறது.

## மட்ரிட்டின் ஆட்டத்தில் வீழ்ந்தது அலெவ்ஸ்

லா லிகா தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடைபெற்றுவரும் முக்கியமானதொடர் லாலிகா. இந்தத்தொடரில் நேற்று முன்தினம்இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணியை எதிர்த்து அலெவ்ஸ் அணி மோதியது.

ஆட்டத்தின்10ஆவதுநிமிடத்தில் மட்ரிட் அணியின் கபாலொஸ் முதல்கோலைப்பதிவுசெய்தார். 40ஆவது நிமிடத்தில் மனு அலெவ்ஸ்அணியின்கோலைப் பதிவுசெய்து ஆட்டத்தை 1:1 என்றாக்கினார். 43ஆவதுநிமிடத்தில் கபாலொஸ் மட்ரிட்டின் சார்பாக இரண்டாவது கோலைப் பதிவு செய்ய முதல் பாதியின் முடிவில் 2:1என்று ஆதிக்கம்செலுத்தியது மட்ரிட். இரண்டாவது பாதியில் மாற்றங்கள்ஏற்படவில்லை. முடிவில் 2:1என்ற கோல் கணக்கில் மட்ரிட் வெற்றிபெற்றது. (ம)



# யாழ்ப்பாணப் பல்கலை இறுதிக்கு முன்னேற்றம்

யாழ்ப்பாணம், செப். 26

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக அணி இறுதிக்குத்தகுதி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து வவுனியா யுனிபைட் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 230 ஓட்டங்களை பெற்றது. அதிகபட்சமாக கபில்ராஜ் 54 ஓட்டங்களையும், துவாரகசீலன் 38 ஓட்டங்களையும், கஜேந்திரன் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நுவான், விதுஸ், தினேஷ் ஆகியோர் தலா இரு இலக்குகளையும், அனுசாந், பிரசாத் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவுனியா யுனிபைட் அணி 31.3 பந்துப்பரிமாற்றங்களில்சகல இலக்குகளையும் இழந்து 123 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனால் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக அணி 107 ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)

### மரண அறிவித்தல்

## குட்டி பரமு



திருநெல்வேலி, பாரதி புலத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குட்டி பரமு நேற்று (25.09.2017) திங்கட்கிழமை தனது 92 ஆவது வயதில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான குட்டி - லெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான சீனியர் - லெட்சுமி தம்பதியரின் மருமகனும் தவமணியின் அன்புக் கணவரும் பத்மாவதி (பட்டு), தர்மலிங்கம் (பாண்டி), பிறேமாவதி (ராசன்), புஸ்பவதி (ராசம்), புனிதவதி (காந்தி) ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற புவனேஸ்வரன் மற்றும் புஸ்பராணி, ரவீந்திரன், குணசேகரம் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.09.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.No.071636 4998
(மருமகன்)

தகவல்:
குடும்பத்தினர்.

### வேலையாள்கள் தேவை

பின்வரும் வேலைகளுக்கு வேலையாள்கள் தேவை.

01. மேசன்
02. மேசன் உதவியாளர்கள்
03. கம்பி கட்டுவோர்.

Iconic Builders
T.P.No. 077 3710157, 077 610 4458

## விலகினார் அகர்

இந்தியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தின்போது, காயமடைந்த ஆஸ்திரேலிய அணியின் சுழல்பந்து வீச்சாளர் அகர் தொடரில் இருந்து விலகி தனது சொந்த நாட்டுக்குத் திரும்பினார்.

களத்தடுப்பில் ஈடுபட்டபோது பவுண்டரி ஒன்றைத் தடுக்க முனைந்தபோது அகரின் வலது கைவிரல் ஒன்றில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் தொடரில் இருந்து விலகி ஆஸ்திரேலியா திரும்புகிறார்.

"ஆட்டம் முடிந்த பின்னர் எக்ஸ்ரே எடுத்து பார்க்கப்பட்டது. அப்போது அவரது கைவிரலில் முறிவு ஏற்பட்டது உறுதி செய்யப்பட்டது. உடனடியாக ஆஸ்திரேலியா செல்லும் அகர், வல்லுனர்களின் ஆலோசனைப் பெறுவார். பெரும்பாலும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வாய்ப்புள்ளது" என ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. (ம)

## குத்துச்சண்டையில் தமிழர் உயிரிழப்பு



சிங்கப்பூரில் நடைபெற்ற குத்துச்சண்டைப் போட்டியொன்றில் பங்குபற்றிய பிரதீப் சுப்பிரமணியன் என்பவர் உயிரிழந்தார்.

பிரபல வீரரான ஸ்ரீபன் லிம் என்பவருன் மோதவிருந்த பிறிதொரு வீரர் விலகியமை அடுத்து அந்த இடத்தில் களமிறங்க சம்மதம் தெரிவித்தே பிரதீப் களமிறங்கினார் என்று அறியவருகிறது. போட்டி ஆரம்பித்து சில நிமிடங்களிலேயே லிம்மால் பிரதீப் 'நொக் அவுட்' செய்யப்பட்டு வீழ்த்தப்பட்டார். அடுத்த சில நிமிடங்களில் மாரடைப்பு மற்றும் மூச்சுத் திணறல் ஏற்பட்டு பிரதீப் உயிரிழந்தார். உடல்கூற்றுப் பரிசோதனை விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




ஈச்சமோட்டையை வதிவிடமாகக் கொண்ட சமூக, சமயத் தொண்டரும், ஆய்வாளருமான

**கனகரெத்தினம் சிவபாதசுந்தரம்**

அவர்கள் இலங்கை நீதி அமைச்சினால் சமாதான நீதிவான் பதவி வழங்கப்பட்டமையையிட்டு மனமகிழ்ந்து பாராட்டுகின்றோம்.

கடந்த 50 வருடங்களுக்கு மேலாக சைவ சித்தாந்த ஆய்வாளனாகவும், சமூக சேவையையே மூச்சாகக் கொண்டவரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நீண்டகால நிர்வாக உறுப்பினரும் ஜெய்ப்பூர் நிறுவனம், அறோட் நிறுவனங்களின் நிர்வாக உறுப்பினராகப் பலகாலம் கடமை புரிந்தவரும், திருமறை கலாமன்றத்தின் செயற்பாடுகளில் அயராது பாடுபட்டவருமான எமது பூட்டனாருக்கு சமாதான நீதிவான் பட்டம் கிடைத்தமையையிட்டு நாம் மன மகிழ்ச்சியடைந்து பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:- பூட்டப்பிள்ளைகள் (Boys) - லண்டன்



இங்கிலாந்துக் கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில், சர்ரே அணிக்கும் லங்காஷைர் அணிக்கும் இடையிலான ஆட்டமொன்று நேற்று ஆரம்பமானது. இந்த ஆட்டமே சர்ரேக்காக சங்கா விளையாடும் கடைசி ஆட்டமாகும். துடுப்பெடுத்தாட அவர் களமிறங்கியபோது லஹ்காஷைர் அணியின் வீரர்கள் சிறப்பான வரவேற்பை அவருக்கு வழங்கினர். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.